www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ஜூன்.25-ஜூலை.01,1995

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 107

# வடபுலப் போர்முனை

# மையம் கொள்ளும் யுத்தப்புயல்

## அரச படைகளின் அதிரடித் திட்டங்கள்

பரபரப்பான தகவல்கள்



## திரைமறைவுத் தகவல்களோடு அரசியல்தொடர்

## சின்ன வயதில் சிவாஜி

# முரசம்

## சிறந்த வைத்தியம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

அரசியல் தீர்வு பற்றி
ஆளாளுக்கு ஒவ்வொன்று சொல்கிறார்கள்.

அரசியல் தீர்வில்
தாமதம் ஏன் என்று கேட்டால்,
தென்னிலங்கையில் தலைதூக்கிவரும்
தவ இனவாதத்தை
அரச தரப்பு சுட்டிக்காட்டுகிறது.

உண்மைதான், நமக்கும் தெரிகிறது.
இனவாதம் உயிர்பெறுவதற்கு
எத்தனிக்கிறது. எத்தனையோ முயற்சிகள் நடக்கின்றன.

ஆனால் இது ஒன்றும்
எதிர்பாராதது அல்லவே.
இனங்கள் பல உள்ள நாடுகளில்
இனவாதிகளும் எப்போதும்
இருக்கத்தான் செய்வார்கள்.

அவர்களின் வேகமும் வளர்ச்சியும்
வேண்டுமானால் காலத்திற்குக் காலம்
வித்தியாசப்பட்டுக் கொள்ளலாம்.
இடையிலே தடைப்படவும் செய்யலாம்.

நோய்க் கிருமிகளை
தற்காலிகமாக மயக்க நிலையில்
வைத்திருக்கும் சிகிச்சையும் உண்டு.

நோய்க்கிருமிகளை
முற்றாகவே கொல்லி எறியும்
கெட்டிக்கார வைத்தியமும் உண்டு.

இனப்பிரச்சனை என்ற ஒன்று
இருப்பதால்தான் இனவாதிகள்
அடிக்கடி குட்டையைக் குழப்பவும்
சுயலாப மீன்பிடிக்கவும் முடிகிறது.

நோய்க்கும் நொடிக்கும்
இடம் கொடுத்துக் கொண்டே
நோய்க்கிருமிகளில் குறைசொல்லி
தலையில் அடித்துக் கொள்வான் ஏன்?

நோய்க் கிருமிகளை
தற்காலிக மயக்கமாக்கிய நிலைதான்
கடந்த இரு முக்கிய தேர்தல்கள்.

இப்போது நோய்க் கிருமிகள்
மெல்லக் கண்திறக்க முயல்கின்றன.
எமக்கும் தெரிகிறது;
அரசுக்கும் தெரிகிறது.
ஏன் தாமதம்?

நோய்க் கிருமிகளை கொல்லி எறியும்
அடுத்த கட்டச் சிகிச்சையை
ஆரம்பிக்கலாம் அல்லவா?

அது என்ன சிகிச்சை?
இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு.
அதைவிட சிறந்த வைத்தியம்
வேறென்ன இருக்கிறது?

ஆனால், கடினம்தான்.
இனிக் குழப்பக் குட்டையில்லையே,
இனித் தூக்க ஆயுதம் இல்லையே,
இனி நிலைக்க சாக்கடை இல்லையே
என்று கொதித்துக் கொந்தளித்து
இனவாதிகள் துள்ளத்தான் செய்வார்கள்.

வயிற்றுக்குள் பிள்ளை இருக்கிறது.
வலிக்குமே, நோகுமே என்று
பிரசவத்தைப் பின்தள்ளியா போடமுடியும்?

வெட்டப்போவது விரல்களையல்ல;
களைகளை என்று அரசு நம்பினால்
கத்தியைக் கையிலெடுக்க
ஏன் தயக்கம்?

தயங்கினால் அரசுமீதும்
தமிழ் பேசும் மக்களுக்கு சந்தேகம்
வருவதில் நியாயம் இருக்கிறது.

அதிகம் கொடுக்க வேண்டியிருக்குமோ
என்று அரசும் நினைப்பதாகவே
கருத வேண்டியிருக்கும்.
புலிகள் பலவீனமானால்
தீர்வுக்குழந்தை ஊட்டமில்லாமல்தான்
பிறக்கும் என்று நினைக்க வேண்டிவரும்.

ஏனெனில், இப்போதே துள்ளும்
இனவாதிகள்-
புலிகளும் பலவீனமாகிவிட்டார்கள் என்றால்
மேலும் உரமாய் துள்ளமாட்டார்களா?
யுத்தம் செய்தது
தமிழர்களுக்கு நாட்டை தாரைவார்க்கவா
என்று சத்தம் போடமாட்டார்களா?
அப்போது அரசு என்ன செய்யும்?

ஆக, அரசியல் தீர்வில் தாமதம்
தகுந்ததும் அல்ல. நியாயமும் அல்ல!

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை.

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## பத்துக் கட்டளைகள் (யாத்.20–26)


மனிதன், புனிதன்ஆக, 3550 வருடங்களுக்கு முன் இறைவன் நல் வழியை இரு பலகைகளில் பொறித்து மோசஸ் என்பவர் மூலமாக எமக்களித்தார். அவை,

1. உன் தேவனாகிய கர்த்தர் நானே, என்னையன்றி உனக்கு வேறு தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.
2. கர்த்தரின் நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.
3. ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக.
4. உன் தகப்பனையும், தாயையும், கனம் பண்ணுவாயாக.
5. கொலை செய்யாதிருப்பாயாக.
6. விபசாரம் செய்யாதிருப்பாயாக.
7. களவு செய்யாதிருப்பாயாக.
8. பிறனுக்கு விரோதமாய் பொய்ச் சாட்சி கூறாதிருப்பாயாக.
9. பிறர் தாரத்தை இச்சியாதிருப்பாயாக.
10. பிறர் பொருளை அபகரியாதிருப்பாயாக.

என்பனவாகும். இயேசு தமது சீடர்களை நோக்கி "என்னை நோக்கி" ஆண்டவரே, ஆண்டவரே" என்று சொல்பவனெல்லாம் விண்ணரசு சேரமாட்டான். வானகத்திலுள்ள என் தந்தையின் விருப்பப்படி நடப்பவனே சேருவான். அந்நாளில் பலர் என்னை நோக்கி "ஆண்டவரே, உம் பெயரால் நாம் தீர்க்க தரிசனம் கூறவில்லையா? பேய்களை ஓட்ட வில்லையா? புதுமை பல செய்யவில்லையா?" என்பர், அதற்கு நான் "உங்களை அறிந்ததேயில்லை. நெறி கெட்டவர்களே, என்னை விட்டு அகன்று போங்கள்" என்று வெளிப்படையாக சொல்வேன்" என்றார். (மத்.7-21)

மனுவெல் சுமதி–நுவரெலியா.

## ஆன்மீகம்



### பரிசுத்தமான விரிப்பிலே அசுத்தமானவர் உட்காரலாமா?

ஒரு முறை அபூஸுஃப்யான் மதீனாவிற்கு வந்ததும், தம்மகளாரும் அண்ணலாரின் மனைவிமார்களில் ஒருவருமான ஹஸ்ரத் உம்முஹபீபா(ரழி) அவர்கள் வீட்டிற்குச் சென்றார்கள். வீட்டிற்குள் நுழைந்ததும் அங்கு விரித்துக் கிடந்த விரிப்பின் மீது உட்காரப் போனார்கள். உடனே ஹஸ்ரத் உம்முஹபீபா(ரழி) அவர்கள் அந்த விரிப்பை சுருட்டி வைத்து விட்டார்கள்.

ஆச்சரியமடைந்த அபூஸுஃப்யான் "அருமை மகளே, நான் இந்த விரிப்பில் உட்காரத் தகுதியற்றவனா?" என்று கேட்டார்கள். "ஆம், நீங்கள் ஓர் அசுத்தமான இழிவான மனிதர்; அல்லாஹ்வுக்கு இணைவைக்கும் மாபெரும் பாவி. இந்தப் புனிதமான விரிப்பு அல்லாஹ்வின் தூதர் உபயோகிக்கக்கூடியது" என்றார் ஹஜ்ரத் உம்முஹபீபா(ரழி) அவர்கள்.

நீ இங்கு வந்து வழி கெட்டு அந்தகாரத்தில் அகப்பட்டுக் கொண்டாய் என்று சீறினார் அபூஸுஃப்யான். இல்லை வழிகெடவில்லை. மாறாக நேர்வழி பெற்றேன். அந்தகாரத்தில் அகப்படவில்லை மாறாக இஸ்லாமிய ஜோதியில் இரண்டறக் கலந்து பிரகாசிக்கின்றேன். எனக்குள்ள ஆச்சரியம் என்னவென்றால் நீங்கள் குறைஷ் குலத் தலைவராக இருந்தும் மார்க்கத்துக்கு விரோதமாக நடக்கின்றீர்களே என்பது தான் என்றார்கள் ஹஸ்ரத் உம்முஹபீபா(ரழி) அவர்கள்.

முஹம்மட் ஸம்ஸம்
நற்பிட்டிமுனை–03

## கவிதைப்போட்டி இல–104

### பரிசுக்குரிய கவிதை

#### மாதிவள் மேனகையோ...?

முன்னிரு அழகும்
முந்தி நிற்க
முகம் ஒரு நிலவை
சிந்தி நிற்க
முல்லைப்பூ விரலணிந்து
மைவிழியில் மதுவேந்தும்
மாதிவள் மேனகையோ...?
மனிதகுல தேவதையோ....?

நீர்கொழும்பு–நிலாஸ்நேகி.

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

#### ஏன் கனவு?

காரிகையே!
கனவென்னவோ?
காதலனும்,
வரவில்லையோ?
உன் பூவிதழை
தொடவில்லையோ?

எம்.பாஸில்–புத்தளம்.

#### தொல்லையோ?

கன்னம்தொட்ட
காதலன்
இன்னும் வரவில்லையோ....?
மன்னனவன்
நினைவெல்லாம்
மனதில்
முள்ளாய் குத்தும்
தொல்லையோ

வை.சித்திக்கிருஷ்ணா–பாண்டிருப்பு–01.

#### அலையும் நிலை

கன்னியின் கண்களில்
கவிதைத்துளிகள்!
காதலில் மனமோ
அலையும் நிலையில்!

எஸ்.நிஜாமுத்தீன்–மருதமுனை–04.

#### ஏவுகணை?

இது என்ன?
கணை விழிகளா?-இல்லை
ஏவு-கணை விழிகள்!

வே.நவமோகன்–மருதானை.

#### கோர யுத்தம் தணியாதோ?

கைவிரலோ கடிவாயில்
கண்களிலோ கனிவு
கடத்தப்பட்ட கணவனுக்காய்
காலமெல்லாம் காத்திருக்கும்
காரிகையின் ஏக்கம் போக்க
கோர யுத்தம் தணியாதோ?

இஷ்கா யூஸுப்–கொலன்னாவ.

#### பார்வை

சரித்திர வீரர்கள்
சிலரை சதிவலைக்குள்
சிக்க வைத்தது-இந்த
பார்வை தானோ!

இராமநாதன்
தமிழ்வண்ணன்–இரத்தினபுரி.



#### விழிக்கணை!

ஈரெட்டு வயதில்....
யார் விட்ட கணையோ?
விழிகளின் வழியாக...
வீறிட்டுப் பாய்கிறதே!

ராஜன் சுமதி–நீர்கொழும்பு.

#### காந்தப் பார்வை....

இந்த..
சித்திரப்பாவையின்...
சின்னவிழிப் பார்வையில்....
சித்தனும்கூட.....
சொக்கிப் போவானே!

க.மாலா–அக்கரைப்பற்று–08.

#### இளையவளே!

இளையவளே,
உன் மோகவிழி
பார்வையால்-என்
இளைய தேகம் நனைகிறது.

நிக்கலெவகடாபி–ஹொறல்பொதானை.

#### உனைவாழ்த்தும்

வானத்தின் தாரகையோ!
தவம் கெடுத்த மேனகையோ!
போர்மேகச் சூழலிலே
புது மோக வடிவழகோ?

குழந்தைவேல் சிவசோதி–மட்டக்களப்பு.

#### கண்களின் சோகம்

"ஆகாயம் நோக்குகின்ற
அழகு மங்கை கண்களிலே
சோகம் படர்வதற்கு
ஷெல் வெடிதான் காரணமோ"

மும்தாஜ் ஜெஸ்மின்–ஏறாவூர்–06.

#### பார்வையோ இது?

இன்டர் கூலர் யுகத்தைக் கூட
வென்று விடும் இவளின் பார்வை.

ச.மகாலிங்கம்–வெலிமடை.

## கவிதைப் போட்டி இல–107



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 01.07.1995

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 107
தினமுரசு வாரமலர்
த.பெ.இல–1772,
கொழும்பு.

#### வாழ்க்கை கண்ணீரானதென...

வானத்தை நோக்கி சொல்
மண் செந்நீரானதென்று
வாழ்க்கை கண்ணீரானதென்று
விண்ணையும் விழிக்க சொல்.

தெ.லோஜனா–கொழும்பு–15.

#### பாரு-பாரு

பொண்ணு பாரு பொண்ணு பாரு
அழகான கண்ணு பாரு
அதில் தெரியும் கவலை-பாரு
அகதியான சோகம் பாரு
அமைதி தேடும் ஆவல் பாரு
வாழத்துடிக்கும் வயசு பாரு

சக்கிலா அனஸ்–வவுனியா

## வாசகர் சாலை

எங்களை வியக்கவைக்கும் அன்பின் முரசே!

நீ வாராவாரம் வெளியிட்டு வரும் அதிரடிச் செய்திகள் என்னை மட்டுமல்ல முரசு இரசிகர்கள் அனைவரையும் அதிரச் செய்கிறது. இப்படியான செய்திகள் வாராவாரம் ஒரு குறையும், எந்தத் தடையும் இல்லாமல் வெளிவர நாம் இறைவனை வேண்டுகிறோம்.

அதுமட்டுமல்ல முரசில் வெளியாகும் அனைத்து அம்சங்களும் வெகு சிறப்பாக உள்ளன.

என்.ராஜன்–ரியாத்
Code No-2554, ருமித்தியா, குவைத்.

அன்பின் முரசே

நீ ஏந்தி வரும் முழு அம்சமும் சூப்பர். இதிலும் மெயினாக சினி விசிட், இலக்கியநயம் என்னை தூக்கி தேன் குவியலில் வீழ்த்துகிறது.

மொஹமட் பர்தான்–மொரட்டுவ.

அன்பின் தினமுரேச!

கிரைம் செய்தியும், மகாபாரதமும் ஏனையவையும் எம் நெஞ்சங்களில் அகமகிழ்ச்சியைத் தருகின்றன. உன் சேவைக்கு பல நன்றிகள் கூறுகின்றேன்.

அ.வரதகுமாரன்–உடப்பு–06

தினமுரசு வாரமலரே!
தித்திக்கும் தேன் மலரே!

நீ தரும் தரமான அரசியல், சமூக, கலாசார செய்திகள் சூப்பர். அத்துடன் திக் திக்.... "ஒரு தேவி என்னைத் தேடுகிறாள்" புதிய தொடர் பிரமாதம். உன் சேவை ஒளி வீச என் வாழ்த்துக்கள்.

எம்.ஐ.ஏ.ஹலீம்– ஆலங்குடா

தங்களின் தினமுரசு வாரமலர், தினமலராகவே மலரவேண்டுமென்று வாழ்த்துகிறேன்; கடவுளின் கருணை கிட்டுமாக!

நாட்டு பிரச்சனைகளை யதார்த்தபூர்வமாக அலசி ஆராய்ந்து வெளியிடும் பாங்கு தனிமையானது- இனிமையானது! தலையங்கங்கள் தனித்துவமான தனிப்போக்கில் அமைந்துள்ளன.

ஹாஜி உஸ்மான் சாஹிப்–கல்முனை.

□□

அன்பு முரசே!

நீ அன்போடு சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சுப்பர். குறிப்பாக திகில் மன்னன் ராஜேந்திரகுமார்எழுதிவரும் ஒரு தேவி என்னைத் தேடுகிறாள் என்ற தொடர் நவீனம் பிரமாதம்.

எம்.முஹம்மது கைஸ்–கிண்ணியா– 05

தினமுரசு பத்திரிகையைப் படிப்பவர்களில் நானும் ஒருவன். மிகவும் அழகான முறையில் முரசு அங்கங்களை சுமந்து வருவதைப் பாராட்டி ஏற்கனவே ஒரு மடல் போட்டேன், தமிழன் என்னும் முறையில் நான் போட்ட பாராட்டு முரசிற்குக் கிடைக்கவில்லை என்று நினைக்கிறேன். இருந்தும் முரசை நான் பாராட்டுகின்றேன். முரசின் பக்கம் 20. ஆனால் அத்தனையும் இரண்டாம் பக்கத்தில் முரசம் பகுதியில் தொகுத்துத் தருவது மிகமிக பாராட்ட வேண்டியது. மேலும் ரசிகனின் இலக்கிய நயம், இராஜதந்திரியின் அலசல் அத்துடன் எக்ஸ்ரே ரிப்போட் ,அதிரடி அய்யாத்துரை மற்றும் கொச்சிக்காப் போடியார் மடல், அற்புதன் எழுதும் அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை மிக பிரமாதம். மொத்தத்தில் எனக்கு ஈழத்தில் இருப்பது போன்ற பிரமை இவற்றிற்கு என் நன்றியை முரசிற்கு தெரியப்படுத்துகின்றேன்.

இ.எஸ்.அன்ரனி–குவைட்

தாங்கள் அனுப்பியதாகக் கூறும் கடிதம் எம் கரம் கிடைக்கவில்லை.

-ஆ.ர்.

# "ஜூலை மத்தியில் படைகள் தாக்கலாம்!"

## யாழ்ப்பாணத்தில் புலிகள் வெளியிட்டுள்ள கணிப்பு!

## உதவி வழங்கும் நாடுகள் மீதும் கண்டனம்!

(நமது விஷேட நிருபர்)

**ஜூலைமாத நடுப்பகுதியில் வடக்கே படையினர் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தக்கூடும் என்று யாழ்ப்பாணத்தில் புலிகள் கூறிவருகின்றனர். அதற்கிடையே தமது அணிகளைப் பலப்படுத்த உறுப்பினர்கள் தொகை அதிகரிக்கப்படவேண்டியிருப்பதாகவும் புலிகள் பிரசாரம் செய்து வருகின்றனர்.**

### உதவிக்கு கண்டனம்

வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு படைகள் தயாராகி வருவதாக புலிகள் திட்டவட்டமாகக் கூறி வருகின்றனர்.

இலங்கை அரசுக்கு உதவி வழங்க முன்வந்துள்ள நாடுகள் மீதும் புலிகள் குறைகூறியுள்ளனர்.

புலிகளின் 'ஈழநாதம்' தினசரி தனது ஆசிரியர் தலையங்கத்தில், உதவி வழங்கும் நாடுகள் இன ஒழிப்புக்கே உதவுகின்றன என்று கண்டனம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில், நாடாளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டும்; தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் அரசு ஈடுபடும்போது அவர்கள் ஆதரவு வழங்கக் கூடாது" என்று தெரிவித்துள்ளது.

16.5.95 அன்று யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பகுதியில் இராணுவ முன்னேற்றத்தை தாம் தடுத்து நிறுத்தியதாகவும், தமது தரப்பில் இழப்புக்கள் எதுவும் இல்லை என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலி இராணுவ நடவடிக்கையின் போது ஷெல் தாக்குதலால் மூன்று வீடுகள் சேதமுற்றன. ஷெல் தாக்குதலால் காயமடைந்த ஆசிரியர் இராசையா என்பவர் மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இராணுவ நடிவடிக்கையின் போது சுப்பர் சொனிக் விமானங்கள் இரண்டு குண்டுகள் வீசின. தரைமூலமும், வான் வழியாகவும் நடத்தப்பட்ட தாக்குதலால் 10 பேர் வரை பொதுமக்கள் காயமடைந்தனர்.

### கதிர்காமர் பயணம்

வெளிநாட்டமைச்சர் லஷ்மன் கதிர்காமரின் ஐரோப்பிய பயணம் பாரிய இராணுவ நடவடிக்கைக்கான ஆதரவும், உதவியும் தேடும் முயற்சியாகும் என்று புலிகள் யாழில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொண்டு ஜூலைமாத நடுப்பகுதியில் அல்லது ஆகஸ்ட் மாதத்தில் படைகள் வடக்கில் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணத்தில் புலிகளின் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

### கடற்படைமீது கண்டனம்

வடபகுதி கடற்பரப்பில் கடற்படையினரால் மீனவர்கள் தாக்கப்படுவதாகப் புலிகள் தொடர்ந்து கூறிவருகின்றனர்.

கடற்பரப்பில் புலிகள் தாக்குதலை நடத்தக்கூடும் என்று நம்பப்படுகிறது.

கடந்த காலத்திலும் இவ்வாறான கண்டனங்களின் பின்னர் புலிகளின் கடற்புலித்தாக்குதல்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

முல்லைதீவு கடலில் இருந்து கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் 2 மீனவர்கள் காணாமல் போனதாகவும், 3 பேர் காயமடைந்தனர் என்றும் புலிகள் கூறியுள்ளனர்.

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து கிளிநொச்சியை நோக்கி நடத்தப்பட்ட ஷெல்தாக்குதலில் குடியிருப்புக்கள் சேதமடைந்தன என்றும், மாணவர் ஒருவர் படுகாயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# வெளிநாடுகளில் ஏட்டிக்குப் போட்டியான ஊர்வலங்கள்

## கனடாவில் புலிகளின் ஊர்வலத்தில் துப்பாக்கிச் சூடு!

(கனடா நிருபர்)

வெளிநாடுகளின் ஆதரவைப் பெறுவதில் இலங்கை அரசும், புலிகளும் ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டு வருகிறார்கள்.

இலங்கை அரசுக்கு ஆதரவு தெரிவித்தும் புலிகளைக் கண்டித்தும் சமீபத்தில் ஜெர்மனியில் ஒரு ஊர்வலம் நடத்தப்பட்டது. பெரும் திரளானவர்கள் கலந்து கொண்ட அந்த ஊர்வலத்தில் ஜெர்மனியில் உள்ள சிங்களமக்கள் அதிகளவில் காணப்பட்டனர்.

இலங்கையில் புலிகள் அமைப்பினரால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் சிலரும் அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

கனடாவில் புலிகள் அமைப்பினர் கடந்த 17.06.95 அன்று மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். 20 ஆயிரம் மக்கள் கலந்து கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 5.6.95 அன்று கனடாவில் ஒட்டோவாவிலும் புலிகள் அமைப்பினர் ஊர்வலம் ஒன்றை நடத்தியிருந்தனர். அதில் நாலாயிரம் பேர் மட்டுமே கலந்து கொண்டிருந்தனர்.

இரண்டாவது ஊர்வலம் கனடாவில் உள்ள ரொரன்ரோவில் ஆரம்பித்து ஒன்ரேரியோ மாகாண பாராளுமன்றம் வரை சென்றது.

இந்த ஊர்வலத்தை முன்னிட்டு கனடாவில் ரொரன்ரோவில் உள்ள இலங்கைத் தமிழர்களது வர்த்தக நிறுவனங்கள் அனைத்தையும் மூடுமாறு புலிகள் பிரசுரம் விநியோகித்தனர்.

புலிகளின் பிரசுரத்துக்கு போட்டியாக இன்னொரு பிரசுரமும் 'பொதுமக்கள்' என்னும் பெயரில் வெளியாகியிருந்தது.

"கடைகளை மூடவேண்டாம். இது ஈழம் அல்ல. இங்கே புலிகளின் மிரட்டலுக்கு பயப்பட வேண்டும். கடைகளைத் திறந்து வைத்திருங்கள். புலிகள்மிரட்டினால் உடனே போனில் பொலிசாருக்கு அறிவியுங்கள்."

என்று அந்தப் பிரசுரத்தில் கூறப்பட்டிருந்தது.

17.06.95 அன்று ரொரன்ரோ நகரில் உள்ள இலங்கைத் தமிழர்களது வர்த்தக நிறுவனங்கள் பல மூடப்பட்டிருந்தன. சிலர் மட்டும் கடைகளைத் திறந்து வைத்திருந்தனர்.

சிறுவர்கள் பலர் புலிகளது இராணுவ உடைகளோடும் பொம்மைத் துப்பாக்கிகளை ஏந்தி அணிவகுத்துச் சென்றதையும் காணக் கூடியதாக இருந்தது.

சர்வதேச சமூகம் தமிழீழத்தையும், புலிகளையும் அங்கீகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் சுலோக அட்டைகளை ஊர் வலத்தினர் தாங்கிச் சென்றனர்.

இதே வேளை ஊர்வலம் சென்று கொண்டிருந்தபோது திடீரென்று ஊர் வலத்தை நோக்கி துப்பாக்கி பிரேயாகம் இடம்பெற்றது. துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் ஓடிவிட்டார்கள். இது தொடர் பாக ஒன்றாரியோ மாகாணப் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



கனடாவில் புலிகளின் ஊர்வலம்

# முஸ்லிம் மக்களை தூண்டிவிடும் முயற்சி!

## புரளிச் செய்தி குறித்து புலிகள் கருத்து

காத்தான்குடியிலிருந்து முஸ்லிம்களை வெளியேறுமாறு தாம் கூறவில்லை என்று யாழ்ப்பாணத்தில் உள்ள புலிகளின் தலைமைச் செயலகம் அறிக்கை விடுத்துள்ளது.

18.6.95 அன்று விடுக்கப்பட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"காத்தான்குடியிலிருந்து முஸ்லிம்களை வெளியேறுமாறு விடுதலைப் புலிகள் இயக்கம் கடிதங்கள் மூலம் அறிவித்துள்ளதாக வெளிவந்த செய்திகளை நாம் வன்மையாக மறுக்கிறோம்.

இது ஒரு திட்டமிட்ட சதி என்று நாம் கருதுகிறோம். விடுதலைப் புலிகளை முஸ்லிம் மக்களிடமிருந்து அந்நியப்படுத்தி தமிழ்-முஸ்லிம் மக்களிடையே கலவரத்தையும் முரண்பாடுகளையும் தோற்றுவிக்கவே இந்த விஷமப் பிரசாரம் முடுக்கி விடப்பட்டது.

இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை மேற்கொள்ள அரசு செய்துள்ள முடிவு இஸ்லாமியர்களிடம் பலத்த எதிர்ப்பை தோற்றுவித்துள்ளது. இதனால் விடுதலைப் புலிகளுக்கு முஸ்லிம் மக்களிடையே பலத்த ஆதரவு ஏற்பட்டுவருகின்றது. இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத சக்திகள் முஸ்லிம் மக்களை புலிகளுக்கும், தமிழர்களுக்கும் எதிராகத் தூண்டிவிட நினைக்கிறார்கள். இது குறித்து முஸ்லிம் மக்கள் விழிப்பாயிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்."

இவ்வாறு புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொச்சைத் தமிழில் சொத்தைக் கடிதம்!

## புலிகளின் பெயரால் கிளப்பப்பட்ட புரளி!

### பிரதியில் கடிதம்

காத்தான்குடியில் இருந்து முஸ்லிம் மக்களை வெளியேறுமாறு புலிகள் எச்சரித்திருப்பதாக சமீபத்தில் ஒரு புரளி பரவியிருந்தது.

புலிகளின் கடிதத்தலைப்பை பிரதி செய்து அதில் எழுதப்பட்ட கடிதம் ஒன்றே புரளி கிளம்ப அடிப்படைக் காரணமாகும்.

அக் கடிதம் முரசின் நிருபரிடமும் கிடைத்தது. தமிழ் மொழியில் பரிச்சயமற்ற ஒருவரால்தான் அக்கடிதம் எழுதப்பட்டிருக்கிறது என்பதை உடனடியாகத் தெரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

ஈழம் என்ற வார்த்தை 'இழம்' என்று எழுதப்பட்டிருப்பதுதான் பெரிய வேடிக்கை. கையால் எழுதப்பட்டிருக்கும் அக்கடிதத்தில் மட்டக்களப்பை கிழக்கு இலங்கையென்று குறிப்பிடப்பட்டுள்ளது. புலிகள் கிழக்கு மாகாணத்தை 'தென் தமிழீழம்' என்றே அழைப்பதும், குறிப்பதும் வழக்கமாகும்.

### கடித வாசகங்கள்

அக்கடிதத்தில் உள்ள விடயத்தை அதில் உள்ள எழுத்துப் பிழைகளோடு அப்படியே தருகிறோம்.

"காத்தான்குடி முஸ்லீம்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் எழுதிக்கொள்ளும் எச்சரிக்கை கடிதம்.

கிழக்கு இலங்கையின் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை நிறுத்தி வைத்தால் 'இழம்' கிடைக்கது.

சொல்லிக்கொள்வது எப்படியிம் இந்த மண்னை விட்டு எழும்பவும். கால எல்லை 01/07/95, அல்லது அதற்கு முன்னர் எழும்பவும். இதற்க்கு எதீர்ப்பு தெரிவிக்கும் பச்சத்தில் இவ் ஊரில் எங்களின் தாற்குதலை நடாத்திக் காட்டுகின்றோம்."


இவ்வாறான கடிதம் போலியாக இருக்கக்கூடுமென்று கடிதம் கிடைத்தவர்கள் ஏன் சிறு சந்தேகமும் கொள்ளவில்லை என்று தெரியவில்லை.

அதே சமயம் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் பிரிவு தலைவர்கள் காத்தான்குடியில் புலிகளின் மிரட்டல் என்ற செய்தி விஷமிகளால் பரப்பப்பட்டுள்ள புரளி என்று கண்டித்திருந்தனர்.

### ஊர்காவல் படைகள்

இந்த சிறுபிள்ளைத் தனமான கடிதத்தை வைத்து கிழக்கில் ஊர்காவல் படைகளை காக எவ்வித தடையையும் எதிர்கொள்ள அவர் தயாராகிவிட்டார்.

சித்திரக்கதைப் புத்தகங்கள் போன்ற




உருவாக்கும் முயற்சிகள் தீவிரமாக நடந்தன.

அது தவிர முஸ்லிம் பெண்கள் பர்தா அணியக் கூடாது. ஏனெனில் புலிகளும் பர்தா அணிந்து வந்து தாக்கக்கூடும் என்று பொலிசாருக்கு சிலர் யோசனை தெரிவித்தார்களாம்.

இதனை அறிந்த முஸ்லீம் பெரியவர்கள் பொலிசாரிடம் சென்று பர்தா அணிய தடையா என்று கேட்டனர். அப்படியொன்றுமில்லை உங்கள் மத்தியில் உள்ள சிலர்தான் அப்படி யோசனை தெரிவித்தனர் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினாராம்.

மட்டக்களப்பில் முஸ்லிம்கள் கூடுதலாக வாழும் ஓட்டமாவடி, வாழைச்சேனை, ஏறாவூர் மற்றும் முஸ்லிம்கள் வாழும் கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று, பொத்துவில் போன்ற பகுதிகளுக்கு இக்கடிதங்கள் அனுப்பப்படவில்லை.

காத்தான்குடி தெற்கில் உள்ள பாலமுனையில் உள்ள முஸ்லிம் மக்கள் ஊர்காவல் படையில் சேர மறுப்பு தெரிவித்தனர் என்று கூறப்படுகிறது.

ஏறாவூர் பகுதியில் 50 பேர்வரை ஊர்காவல் படையில் சேர்க்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

அதேவேளை இந்தப் புரளிகளாலும் பதட்டத்தாலும் ஏறாவூர் பகுதியில் உள்ள தமிழ் குடும்பங்கள் பல இடம்பெயர்ந்து சென்ற சம்பவமும் இடம்பெற்றது.

தற்போது புலிகளின் பெயரால் கிளப்பப்பட்ட வதந்தி பிசுபிசுத்துவிட்டது. இக்கடிதத்தின் பின்னணியில் உள்ளவர்கள் பற்றி அறிவதில்தான் முஸ்லிம் மக்களும், தமிழ்மக்களும் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

# மூடப்பட்டுவரும் இராணுவ முகாம்கள்!

சென்றவாரம் செங்கலடி பதுளை வீதியில் புலிகளுக்கும்-படையினருக்கும் ஏற்பட்ட மோதலில் பொதுமக்கள் ஆறுபேர் பலியானார்கள்.

இவர்களில் ஐந்து பேர் வயலில் களைபிடுங்கிக் கொண்டிருந்த தமிழர்களாவர். இச் சம்பவத்தை அடுத்து வயல் வேலைக்குச் செல்லும் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

புலிகள் தாக்குதல் நடத்தினால் பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல் நடத்துவது தொடர்கதையாகிவருவதால் கிழக்கில் பல தமிழ் குடும்பங்கள் காடுகளுக்குள் சென்று தஞ்சமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு இராணுவ முகாம்கள் இதுவரை மூடப்பட்டுள்ளன. மேலும் சில முகாம்கள் மூடப்படக்கூடும் என்றும் தெரியவருகிறது.

# தபால்களைக் கவனிக்க கம்பியூட்டர் வரும்

(திருமலை நிருபர்)

மிக விரைவில் அஞ்சல் சேவை கம்பியூட்டர் மயப்படுத்தப்பட்டு தராதரம் பிரிக்கும் வேலைகளை இயந்திரங்களே செய்ய விருக்கின்றன.

இதற்கு முன்னோடி நடவடிக்கையாக சகல அஞ்சலகங்கள் உப அஞ்சலகங்கள் என்பவற்றுக்கு அஞ்சற் குறியீட்டு இலக்கங்கள் வழங்கப்பட்டு வருவதோடு, அஞ்சலங்கள் தத்தமது குறியீட்டு எண்களைப் பொதுமக்களின் பார்வைக்கு வைக்க வேண்டுமென்று பணிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணிபூர்த்தியானதும் பொதுமக்கள் தங்கள் கடிதத் தொடர்புகளின்போது முகவரியில் அஞ்சற் குறியீட்டு எண்ணையும் எழுதும்படி கேட்டுக் கொள்ளப் படுவார்கள்.

இந்நடைமுறை அமுலுக்கு வந்ததும் தபால்கள் விரைவாகவும் சரியாகவும் தரம்பிரிக்கக் கூடியதாக இருக்கும் என திருக்கோணமலை அஞ்சல் அத்தியட்சகர் திரு. நல்லத்தம்பி முரசுக்கு தெரிவித்தார்.

# 'பிரபா பயன்படுத்திய மோதல் தவிர்ப்பு'

## அவுஸ்திரேலியப் பத்திரிகை கண்டனம்

புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் பற்றி அவுஸ்திரேலியா நாட்டில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று கடும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளது. 'மோர்ணிங் ஹரோல்ட்' என்னும் அப்பத்திரிகையில் வெளியான விமர்சனத்தில் ஒரு பகுதியைக் கீழே தருகிறோம்,

"பிரபாகரனுடைய ஆணைக்குட்பட்ட சுமார் 20 ஆயிரம் கெரில்லாக்களில் பலர் 13 வயதுடையவர்கள்.

இலங்கையில் மூன்றில் ஒரு பங்கான பிரதேசத்தை தமிழர்களுக்கு மட்டுமான ஒரு சுதந்திர நாடாக ஆள்வதற்கு பிரபாகரன் நாட்டம் கொண்டுள்ளார். கண்மூடித்தனமாகத் தன்னைப் பின்பற்றும் எல்.ரி.ரி.ஈ. தீவிரவாதிகளின் துணையுடன் தன் நோக்கத்தை அடைய அவர் முயல்கிறார். அதற்றை வாசித்துவிட்டு தமிழர்களின் ஞானபிதா என்று பிரபாகரன் தன்னைத் தானே கூறிக்கொள்கிறார். மத்திய கிழக்கில் பயிற்சி பெற்ற அவரை நம்பி சந்திரிக்கா தப்புக் கணக்குப் போட்டுவிட்டார்.

மோதல் தவிர்ப்புச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பிரபாகரன் தனது அணிகளை பலப்படுத்தவும், புதிய பகுதிகளுக்குள் ஊடுருவவும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்"

என்று அப்பத்திரிகை எழுதியுள்ளது. அப் பத்திரிகையின் செய்தியில் புலிகள் தொடர்பாக பெறப்பட்ட தவறான தகவல்கள் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிரபாகரன் மத்திய கிழக்கு நாடெதிலும் பயிற்சி பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# "இரு புலிகள் பலி"

முல்லைதீவுக்கு அருகில் உள்ள கொக்குத்தொடுவாய் பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர்மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

45 நிமிடம் நீடித்த மோதலில் தமது தரப்பில் லெப்டினன்ட் கயிலைநாதன் என்பவர் உட்பட இருவர் பலியானதாகப் புலிகள் தெரிவித்தனர். புலிகளில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதாக படையினர் தெரிவித்திருந்தனர். இராணுவ வீரர் ஒருவரின் சடலமும் தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

# மாணவர் மீது கண்!

திருக்கோணமலையில் புலிகள் மாணவர்கள் போன்று நடமாடுவதாக சந்தேகிக்கப்பட்டுவருகிறது.

புலிகளில் இருந்து விலகி பொலிசாரோடு இணைந்து செயற்பட்ட வாலிபர் ஒருவரை மாணவர் போன்று வந்தே புலிகள் சுட்டுக் கொன்றனர்.

இதனையடுத்து திருமலையில் குறிப்பாக திருமலை நகரில் பாடசாலை மாணவர்கள் பலத்த சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

தடை அரண்களில் வயதானவர்களைவிட மாணவர்கள்தான் விசேஷ கவனிப்புக்கு உள்ளாகின்றனர்.

# மாட்டுக்குப் புறத்தால போன பொடியனைக் காணல்ல

*அய்யாத்துரை அண்ணே!*

கனகாலமா கடதாசி போடக்கிடைக்கல்ல. கிழமைக்கு ஒருக்காலும் எழுதுவமெண்டா, எங்க நேரம் கிடைச்சாத்தானே! எனக்கும் இனி இல்லைண்ட வேல. கொத்தியாகொலப்பக்கம் போறதுமில்ல.

நம்மட சின்னவண்ட நரேசியும் வந்து போறான். ஆளும் நல்லா வாடிப் போனான். முதல் இருந்த பழபழப்பு இல்ல. குடல் எடுத்த வாழமாதிரி இரிக்காரு. ஏன் இந்தக் கோலம் எண்டு கேட்ட நான்.

இந்தக் காடு கரம்பையெல்லாம் ஒத்தித் திரிஞ்சா ஆள் சவுக்காம என்ன செய்யிற? மாட்டுக்குப் புறத்தால போன பொடியனக் காணல்ல.

முதலும் இப்படித்தான்-நம்மட வகுத்து வாரில எத்தின பொடியனுகளைக்காணல்ல. பெத்தவனுக்குத்தான் அண்ண. இந்தக் கக்கிசம் தெரியும். ஆருட்ட அண்ண இதச் சொல்லி அழுவுற. இதெல்லாம் தமிழன் செய்த கறுமம். புண்ணியம் செய்த நம்மட போடியாருர பொடியனுக்கு என்ன மாராயம் நடந்ததெண்டு, இன்னும் ஒரு வெளிச்சமும் இல்ல அண்ண.

சாகிற ஆக்கள் செத்து மிஞ்சிற ஆக்கள் மிஞ்சட்டும். எனக்கும் அண்ண, இத யோசித்து யோசித்து மூளை களண்டு போகும் போல.

எங்கட டவுண் பள்ளியளெல்லாம் பழையபடி ஒரு நேரந்தான். எண்டாலும், நம்மட ஆக்களும் நல்லா சாட்டுச் சொல்லுவானுகள். சென்றியிலபுடிச்சி வைச்சிப் போட்டானுகள், சுணக்கிப் போட்டானுகள் எண்டு சொல்லுறது தான் இப்பயெல்லாம் நல்லா புடிக்கும்.

மூச்சிப் பேச்சி இல்லையாம். வாத்திமாரும் அப்பிடியெண்டா, புள்ளையளும் அத மிஞ்சின ஆக்கள்தானே!

எங்கட காடு, வனாந்தரத்திலயெல்லாம் சரியா ஆமிப்படைய குவிச்சி வாறாங்க. ஊருக்குள்ள மட்டுமில்ல, றோட்டிலயும் இருட்டுப்பட்டா வெளிக்கிறங்க ஏலா.

ராவு இரிட்டில ஆருக்கும் வருத்தம் கிருத்தம் எண்டாலும், வயித்துக்குள்ள கியுத்துக்குள்ள குத்தினாலும் கிடக்க வேண்டியதுதான் வீட்டுக்குள்ள.

இதுக்குத்தான் அண்ண, நம்மட பழைய ஆக்களும், முகிலிய கிகிலிய அறிஞ்சி வச்சி, குளிசய கிழிசய உறுட்டி வீட்டோட வச்சிருந்தவங்க. இதெல்லாம் சும்மா செய்யல்ல. ராவு இரிட்டில கக்கிசப் படக்கூடாது எண்டு-பெரிய கைவைத்தியமில்லா இதெல்லாம்.

அய்யாத்துர அண்ண, மட்டக்களப்பு ஆசுபத்திரியிலயும் இப்ப-வருத்தம், கிருத்தம் வந்து வாற ஆக்கள் குறைவு. கால், கை இல்லாத ஆக்கள் காயக்கீயப்பட்ட ஆக்கள் தான் கூட கிடக்காங்க.


எல்லாரும் காயக்காற ஆக்கள் எண்டா, என்ன செய்யிற அண்ண?

சாதி, சந்தானங்களுக்கும் ஓசி வாகனங்களில் ஏறி இறங்கவும் பயம். என்ன செய்யிற பின்ன நெருங்கி கிருங்கி, வசில ஏறி இறங்கி கணகாட்டுப்பட்டு வந்து ஆசுபத்திரியில குளறிப்போட்டு போறதுதான் மிச்சம்.

இந்தக் கக்கிசத்த ஆரிட்ட அண்ண நாம சொல்லிக் குளறிற....?

அய்யாத்துர அண்ண, இன்னுமொரு புதினம் கேட்டயளோ! கடையில 'டோச்சி லைட்', 'பெட்டரி' எண்டு நம்மட அகிலாண்டப் போடி கேட்டதாம். "இதெல்லாம்- விக்கிறதில்ல எண்டு தெரியாதோ போடி" எண்டு பசாரில அருள் அண்ணன் சொன்னாராம். "ஒருவரிட்டரியும் சொல்லிப் போட வேணாம். 'காஞ்சகொச்சிக்கா' இருக்கோ எண்டு கேளுங்க, அப்பதான் எங்களுக்கு தெரியும் சனத்துக்க வச்சி வெளிச்சமாகக் கேட்டா நாங்க 'காஞ்சகொச்சிக்கா' எண்டு பேர் வைக்காம என்ன செய்யிற? நாங்களும் யாபாரம் செய்யிற தெண்டாலும் புடி குடுக்காம நிக்க வேணுமெண்டு கடயில நிக்கிற அருளண்ணன் சொல்லுறாரு" எண்டு போடி புறுபுறுத்திட்டுப்போறான்.

## அதிரடி அய்யாத்துரை அண்ணைக்கு. கொச்சிக்காப் போடியார் எழுதுவது



★ "மாட்டுக்குப் புறத்தால போன பொடியன காணல்ல எண்டு, காடு கரம்பயெல்லாம் ஒத்தித்திரிஞ்சா ஆள் சவுக்காம என்ன செய்யிற?"

★ "மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில வருத்தம் கிருத்தம் எண்டு வாற ஆக்கள் குறைய. காயக்கீயப்பட்ட ஆக்கள் தான் கூட! ஆமிக்கு கீமிக்கு எல்லாம் நல்ல வேலதானே"

## காட்டூன் மூலை




'சண்டே லீடர்' வெளியிட்ட காட்டூன்

## அயலக செய்தி அங்கும் ஒரு கலவரம். கலவரத்தில் தமிழர்கள் பலி!



படத்தில் மணிப்பூர் கலவரத்தால் அகதிகளான தமிழரில் ஒரு பகுதியினர்

இந்தியாவில் மணிப்பூர் மாநிலத்தில் 15 ஆயிரம் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு இப்போது ஆபத்து தலைக்கு மேலே. கொல்லப்பட்டார்கள் பலர். உயிர் தப்பி, உடமை இழந்து தப்பி ஓடி பர்மாவுக்கும், சென்னைக்கும் போய்ச் சேர்ந்தார்கள் ஏனையோர்.

மணிப்பூரில் குக் இனம், நாகர் இனம் என்னும் இரு இனங்களுக்கும் ஜென்மப் பகை. நாகர் இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு தமிழர்கள் தேர்தலில் வாக்குப் போட்டு விட்டார்கள். குக் இனத்தாருக்கு அதனால் தமிழர்மீது கோபம். விளைவு; வெறியாட்டம்.

தமிழ்நாட்டிலிருந்து பிழைப்புத்தேடி மணிப்பூர் மாநிலத்திற்கு தமிழர்கள் சென்றார்கள்.

## புதுவகையான போதைக் கடத்தல்!

**(துபாயிலிருந்து ஏ.எல்.எம். நயீம்)**

நியுயோர்க் நாட்டில் அண்மையில் வயிற்று வலி என சிகிச்சை பெற வைத்தியசாலை சென்ற பெண் ஒருவருடைய வயிற்றுக்குள் 109 சிறிய போதை வஸ்துக்கள் அடங்கிய பக்கட்டுக்களை மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

பேர்டா லினாரிஸ் (வயது 59) என பெயர் குறிப்பிட்ட இப் பெண் அண்மையில் விமானம் மூலமாக நியுயோர்க் நகரம் வந்து சேர்ந்தார். உயரதிகாரிகள் இப்பெண்ணைப் பற்றி குறிப்பிடுகையில் "இவர் ஒரு போதை வஸ்துக்களை கடத்தும் பெண்" என குறிப்பிட்டனர். சத்திர சிகிச்சை மூலமாக வயிற்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த இப் பக்கற்றுக்கள் வெளியேற்றப்பட்டன.

## வீதிக்கு எப்போது விமோசனம்?

கிண்ணியாவிலிருந்து ஆலங்கேணிக் குச் செல்லும் வீதி குட்டிக்கரச்சி என்னும் இடத்திலிருந்து களியினாலும், கெரவலினாலும் போடப்பட்ட வீதியாகும். இவ்வீதி ஆலங்கேணிப் பகுதிக்கு தமிழ் மக்களைக் குடியேற்றும் போது, புதிதாக களியும், கெரலும் போட்டு வீதியைத் திருத்தி அமைத்து இவ்வூருக்கு பஸ் போக்கு வரத்தும் செய்யப்பட்டதாகும்.

ஆனால் சென்ற காலங்களில் பெய்த மழையினால் இவ்வீதியிலுள்ள களியும், கெரவலும் இல்லாமல் போய் இப்போது பள்ளமும் குழியுமாக காட்சி அளிக்கின்றது. இதனால் பஸ்ஸோ பொது மக்களோ இவ் வீதியால் போக்குவரத்து செய்யும் போது பல்வேறு கஷ்டங்களுக்கு ஆளாகவேண்டியுள்ளது.

எனவே அவ்வீதியைத் திருத்தி அமைப்பதில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி பொது மக்களுக்கு ஒழுங்கான போக்குவரத்துக்கான வீதியாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

என். எம்.எம். பாரூக்.




## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷ்மி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷ்மி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831,344832.
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
**P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD**
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,3336.
FAX 0094523093 EXT 28



## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையில் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=


**ஞான சுந்தர வைத்தியசாலை**
*187, செட்டியார் தெரு, கொழும்பு 11, போன்: 421398*


## உள்ளதும் போச்சடா நிலை தானா?

அரசாங்கத்தால் வெளியிடப்படும் வர்த்தமானி மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டு வருகிறது.

ஆனால், 19.5.1995 அன்று வெளியான வர்த்தமானியில் தமிழ் மொழியோடு சிங்களமும் கலக்கப்பட்டுள்ளது.

அது ஒரு கணக்காய்வு சேவைக்கான விண்ணப்பமாகும். சிங்களம் தெரியாத விண்ணப்பதாரிகளின் கதி என்ன?



தமிழ் மொழி அமுலாக்கல் ஒரு புறமிருக்க, ஏற்கனவே தமிழ் மொழி அமுலாகிவரும் விடயங்களிலும் கைவைப்பது ஏன்?

தமிழ்மொழி அமுலாக்கல் ஆணைக்குழு இதனைக் கவனிக்குமா?


**G.C.E.A/L**

## பௌதீக இரசாயனம்

ஜே.கே.பி.ஆரியரத்ன B.Sc(Hons)Ph.D Cambridge

(வினாப்பத்திரம்தயாரிப்பவர்)சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும் 130/=(பதிவுத்தபால்செலவுட்பட) காசுக் கட்டளை E.Selvanayagamத்தின் பெயரில் அனுப்பவும்

SARASU PUBLICATIONS
D,2/8Anderson Flats,Narahenpita T.P 590462



**வெளி வந்துவிட்டது ...................**

**ஆண்டு 4/5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சைக்கான மாதிரி வினாப் பத்திரிகை**

**வெற்றிக்கனி**

**BRIGHTன் கல்வி வெளியீடு**

புதிய பாடத்திட்ட மாதிரி வினாவிற்கேற்ப தயாரிக்கப் பட்டது.
புதிய பாடத்திட்டமும் இணைக்கப்பட்டுள்ளது.

விலை : 50/- V.P.P. உண்டு

பிரதி மாதம் தோறும் வெளிவரும் வெற்றிக்கனி மாணவர்களின் வெற்றியை நிச்சயப்படுத்தும்

**இதனுடன்**
மாதிரி வினாவிடை - 100.00
பொதுவிவேகம் செயல்நூல்- 60.00
பொது விவேகம் பாடநூல் - 75.00

V.P.P. யில் பெற விரும்புவோர் 20/= முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்

**Bright Book Centre**
S-27, First Floor, Colombo Central Super Market Complex, P.O. Box -162, Colombo - 11. T.P: 434770



## விளம்பரப் பகுதி

**கலை அலங்கார வகுப்புக்கள்**

★ சிகை அலங்காரம்
★ அழகுக்கலை
★ மணப்பெண் அலங்காரம்
★ 4 மாத கற்கை நெறி



ஆரம்பம்:-01.07.95

FASNAZ BEAUTY SALON
இல.142, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை, கொழும்பு-06.
தொலைபேசி: 589457



## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# வடபுலப் போர்முனை

—நாரதர்

# மையம் கொள்ளும் யுத்தப் புயல்

## அரச படைகளின் அதிரடித் திட்டங்கள்



வடக்கில் இராணுவ வெற்றிகளைப் பெறுவது எப்படி என்பதுதான் தற்போது படைத்தரப்பிடமுள்ள பெறுமதியான கேள்வி.

புலிகள் தமது தாக்குதல் பிரிவுகளை கிழக்கு நோக்கி அனுப்பிவைத்துள்ளனர்.

கிழக்கில் புலிகள் கவனம் செலுத்துகிறார்கள் என்று அங்கே தமது முழுப் பலத்தையும் படைகள் பிரயோகித்தால் கொழும்பில் குண்டு வெடிக்கும்.

தலைநகரைப் பாதுகாக்க ஒரு குறிப்பிட்ட தொகைப் படையினரை ஈடுபடுத்த வேண்டியிருக்கிறது.

வடக்கில் இருந்து படைகளை எடுத்து கிழக்கே நகர்த்த நினைத்தால் அங்குள்ள முகாம்களின் பாதுகாப்பில் ஓட்டைகள் ஏற்பட்டுவிடும்.

இது தவிர எல்லைப்புற கிராமங்களைப் பாதுகாக்க தவறினால் அதன் விளைவு சிங்கள மக்களின் அதிருப்தியை சம்பாதிப்பதாகிவிடும்.

'இங்கே எல்லாம் பத்திரமாக இருக்கிறது. நாம் அங்கே போகலாம்' என்று படைத்தரப்பு நினைத்துவிட முடியாத அளவில் புலிகள் தமது நடவடிக்கைகளைப் பரவலாக்கி இருக்கிறார்கள்.

எனவே, படைத்தரப்பை தற்காப்பு நிலையில் வைத்திருப்பதில் புலிகள் வெற்றிபெற்றுள்ளனர்.

புலிகள் தாம் நினைப்பதையெல்லாம் செய்யக்கூடிய நிலையில் இருப்பதற்கு முக்கிய காரணம் என்ன?

புலிகளிடம் விடுவிக்கப்பட்ட தளப் பிரதேசம் ஒன்று இருக்கிறது. அதுதான் யாழ்குடாநாடு. அதுதான் புலிகளின் முக்கிய பலம். அது எப்படி என்று பார்ப்போம்.

யுத்தத்தில் தளப்பிரதேசம் ஒன்றை உருவாக்கிக்கொள்ளும் தரப்புக்கு, அதனால் பல இலாபங்கள் ஏற்படுகின்றன.

தலைமைப் பீடம் பாதுகாப்பாக இருந்து நடவடிக்கைகளை திட்டமிட முடியும்.

ஏனைய பிரதேசங்களுக்கு யுத்தத்தை விரிவுபடுத்த தேவையான தயாரிப்புக்களை தளப்பிரதேசத்தில் மேற் கொள்ள முடியும்.

தளப்பிரதேச நிர்வாகம் மூலமாக குறிப்பிட்டளவு நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தளப்பிரதேசம் என்று ஒன்று இருப்பதால் நிரந்தரமான இராணுவத்தைக் கட்டியமைக்க முடியும்.

ஒரு குறிப்பிட்ட பிரதேசம் கட்டுப்பாட்டில் இருப்பதால், ஏனைய பகுதிகளையும் விடுவித்து ஆட்சி நடத்த முடியும் என்ற நம்பிக்கையை தமது மக்களிடம் ஏற்படுத்த இயலும்.

தளப்பிரதேசங்களில் இரண்டுவகையானவை இருக்கின்றன.

ஒன்று தற்காலிகத் தளப்பிரதேசங்கள், இரண்டாவது நிரந்தரமான தளப்பிரதேசங்கள்.

தாக்குதல் ஒன்றின் மூலம் ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பிடித்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே வைத்திருப்பது. எதிரியின் படைகளால் சூழப்பட்டால் அங்கிருந்து பின்வாங்குவது, அவ்வாறான பகுதிகள் தற்காலிக தளப்பிரதேசங்கள் என்று அழைக்கப்படுன்றன.

நிரந்தரப் படை அதாவது ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு இராணுவப் படை இல்லாத போதும், கெரில்லாக்களை மட்டும் வைத்துக் கொண்டே தற்காலிக தளப்பிரதேசங்களை உருவாக்கலாம்.

உதாரணமாக, கிழக்கு மாகாணத்தில் ஒரு இராணுவ முகாமை புலிகள் தாக்குகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம்.

தாக்குதல் வெற்றிகரமாக அமைந்தால் இராணுவ முகாம் இருந்த பகுதி முழுவதும் புலிகளின் கட்டுப்பாட்டில் வரும்.

படைகள் பல முகாம்களில் இருந்தும் பலத்தைத் திரட்டிக்கொண்டு மீண்டும் அங்கு செல்லும் போது கெரில்லாக்கள் அந்தப் பகுதியைவிட்டு தப்பிச் சென்று விடுவர்.

ஆக, தற்காலிக தளப்பிரதேசங்கள் அடிக்கடி கைமாறிக்கொண்டிருக்கும்.

நிரந்தர தளப்பிரதேசம் அப்படியல்ல, அங்கு கெரில்லாக்கள் மட்டுமல்ல, ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவமும் இருக்கும். அரசின் இராணுவத்தோடு நேரடியாக மோதும் அளவுக்கு ஆட்பலம், ஆயுத பலம் கொண்ட இயக்க இராணுவம் தளப்பிரதேசத்தில் இருக்கும்.

அப்படியான தளப்பிரதேசமாக யாழ் குடாநாடு தான் இருக்கிறது. அங்கு புலிகள் தனியான நிரந்தர இராணுவ அணியை கட்டியமைத்து வைத்திருக்கிறார்கள்.

இராணுவ அணி மட்டுமல்ல கடற்படை, பொலிஸ்படை, மற்றும் நிர்வாக அமைப்புக்களையும் உருவாக்கி சுயாட்சி அதிகாரமுள்ள தளப்பிரதேசம் என்னும் கட்டத்தை எட்டி விட்டார்கள்.

தளப்பிரதேசம் ஒன்று இல்லாவிட்டால் புலிகள் இப்போதுள்ள பல சாதகமான அம்சங்களை இழந்திருப்பார்கள்.

காட்டுக்குள்ளேயோ, அல்லது தமிழ் நாட்டை பின்தளமாகக் கொண்டோ புலிகள் செயற்பட்டிருந்தால் அரசுக்கு பலத்த தொல்லை கொடுக்கும் ஒரு குழு என்றளவில் மட்டுமே அவர்களது பலம் கணிப்பிடப் பட்டிருக்கும்.

ஆனால், இப்போது இலங்கைத்தீவில் சமபலம் கொண்ட இரு இராணுவங்கள் இருப்பதாக கணிப்பிடப்படும் நிலையைப் புலிகள் ஏற்படுத்தியுள்ளனர்.

இதற்கெல்லாம் காரணம் நிலையான தளப்பிரதேசம் ஒன்று இருப்பதுதான்.

பூமியமைப்பின் நிலை காரணமாக கிழக்கைவிட வடக்குத்தான் நிலையான தளப் பிரதேசத்திற்கு வசதியாகவும் அமைந்தது.

யாழ் குடாநாட்டில் காடுகள், மலைகள் இல்லாத குறையை வீதி ஒழுங்கைகள் அமைந்திருக்கும் முறையை வைத்து நிவர்த்தி செய்ய முடிந்தது.

அதனால்தான் ஆரம்ப காலத்தில் சைக்கிள்களில் சென்று தாக்குதல் நடத்தியவர்களைக் கூட படையினரால் வளைத்து பிடிக்க முடியாமல் போனது.

தேடுதல், சுற்றிவளைப்பு போன்றவற்றை உடைத்துச் செல்ல கெரில்லாக்களுக்கு கைகொடுத்து உதவியதும் அந்த ஒழுங்கைகள்தான்.

இவ்வாறான பின்னணியில்தான் யாழ் குடாநாடு நிரந்தர தளப்பிரதேசமாக உருவாக முடிந்தது. இவை மட்டுமே காரணங்கள் அல்ல. ஆனால் இவையும் முக்கிய காரணங்கள்.

ஆக, இப்போது புலிகளிடம் நிரந்தர தளப்பிரதேசம் இருக்கிறது.

அங்கு கிட்டத்தட்ட ஒரு தனி ஆட்சியே நடக்கிறது.

### எக்ஸ்ரே ரிப்போர்ட்

இதனால் அரசுக்கு இரண்டு வகையில் பாரிய நஷ்டம்.

ஒன்று அரசியல் ரீதியில், இரண்டாவது இர்ராணுவ ரீதியில்.

அரசியல் ரீதியாக அரசுக்கு ஏற்பட்டுள்ள பாதகம் என்ன? புலிகள் வடக்கில் தனி ஆட்சி நடத்துகின்றனர் என்று உலகத்திற்கு தெரிகிறது.

அதனால் புலிகளின் எதிர்ப்பை ஏதோ ஒரு குழுவின் தற்காலிகத் தொல்லை என்று சித்தரித்துக்காட்ட முடியாது.

இலங்கையில் அரசு நினைத்தால் மாத்திரம் சமாதானத்தைக் கொண்டுவர முடியாது. பலமான இன்னொரு தரப்பும் இருக்கிறது. அதனிடம் நாட்டின் ஒரு பகுதி இருக்கிறது என்று வெளியுலகம் மதிப்பிட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழர்களில் குறிப்பிட்ட தொகையினர் புலிகளின் வசமுள்ள பகுதியில்தான் இருக்கிறார்கள். அதனால் அவர்களின் சார்பாக அரசு பேசமுடியாது. தமிழர்கள் யாவரும் எம்மோடு என்று கூறி புலிகளை தனிமைப் படுத்திக் காட்டவும் இயலாது.

இராணுவ ரீதியில் எடுத்துக்கொண்டால், தற்போதைய யுத்தத்தின் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் கேந்திர முக்கியத்துவமிக்க பகுதியாக யாழ் குடாநாடுதான் இருக்கிறது.

அதாவது, புலிகளது தளப்பிரதேசமாக யாழ்ப்பாணம் இருக்கும்வரைகிழக்கிலோ வேறு பகுதிகளிலோ படைகள் சந்திக்கும் வெற்றி தோல்விகள் தீர்க்கமான பங்கு வகிக்கப்போவதில்லை.

கிழக்கில் பத்துப் புலிகளை இராணுவத்தினர் பலியாக்கினார்கள் என்றால் மேலும் பத்துப் புலிகளை தயார்படுத்தி அனுப்பக்கூடிய தளப்பிரதேசம் வடக்கில் இருக்கிறது.

படைத்தலைமையைவிட பாதுகாப்பாக இருந்து திட்டமிடக்கூடிய வசதி தளப்பிரதேசத்தில் உள்ள புலிகளின் தலைமையிடம் இருக்கிறது.

எந்த முனையில் புலிகளைத் தாக்குவது என்று படைத்தலைமை முடியைப் பிய்த்துக் கொண்டிருக்கும். ஆனால்,அதே நேரம் கரும்புலிகளாக யாரை அனுப்புவது என்று சீட்டுக்குலுக்கியபடி பதட்டமே இல்லாமல் சிந்திக்கும் வசதி பிரபாவுக்கு இருக்கிறது.

எனவே, வட புலத்தில் புலிகளை முற்றாக ஒடுக்க முடியாவிட்டாலும் ஒரு மூலைக்குள் தள்ளி முனை மழுங்கவைத்தாலாவது வெற்றிதான் என்று அரச தரப்பு யோசிக்கிறது.

ஆனால், அதனைச் செய்ய முன்னர் அரசதரப்புக்கு சில சங்கடங்கள் உள்ளன. மூர்க்கமாக வடக்கில் தாக்கினால் தலைநகரில் புலிகள் தமது மூர்க்கத்தை காட்டக்கூடும். அதனைத் தடுக்க என்ன செய்வது?

வடக்கில் பாரிய நடவடிக்கைகளால் பலத்த உயிரிழப்பு ஏற்படுமானால் வெளியுலகில் தற்போது அரசுக்கு சாதகமாகவுள்ள அனுதாபம் தேயத் தொடங்கலாம்.

கொழும்பில் இனவாதிகள் ஏதாவது வம்பு பண்ணிவிட்டால் அரசுக்குத்தான் வெளியுலகில் பிரசார நஷ்டம் ஏற்படும்.

எல்லாவற்றையும்விட முக்கியமான விடயம் வடக்கில் படைகள் பெறும் வெற்றிகளை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளும் ஆட்பலம் போதுமா என்பது.

ஆயிரக்கணக்கில் படைகளுக்கு ஆட்கள் திரட்டப்பட்டாலும்கூட ஏற்கனவே படையில் இருந்து தப்பிச் சென்றவர்களின் தொகையும் அதிகமாக இருக்கிறது.

அதுதவிர இராணுவத்தை களத்தில் நடத்திச் செல்லக்கூடிய போதிய அனுபவம் உள்ள அதிகாரிகள் பற்றாக்குறையாக இருக்கிறார்கள்.

ஆனால், இப்போது உள்ள பிரச்சனை என்னவென்றால், சாதக, பாதகங்களை ஆற அமர இருந்து யோசித்துக்கொண்டிருக்க அரசுக்கு அவகாசம் போதாது.

எதிர்வரும் அக்டோபர் மாதம் வடக்கே வானம் கறுக்கத் தொடங்கிவிடும்.

கெரில்லாக்களுக்கு வானம் வழங்கும் இருட்டும், கொட்டும் மழையும் நல்ல வாய்ப்புக்கள்.

முகாமில் இருப்பவர்களைவிட தேடி வந்து தாக்குதல் நடத்துகிறவர்களுக்கே மழைக்காலம் உபயோகமாக இருக்கும்.

எனவே, மழைக்காலத்திற்கு முன்னர் வடக்கில் உள்ள முகாம்களது பாதுகாப்பை பலப்படுத்துவதுடன், குறைந்த பட்சம் முகாம்களின் பரப்பளவை விஸ்தீரணப் படுத்தவும் படைத்தரப்பு முயல வேண்டி இருக்கிறது.

வடக்கில் படையினரின் நடவடிக்கைகளில் இரு கட்டங்கள் இருக்கின்றன.

முதல் கட்டம் தற்காப்பு யுத்தம். தற்காப்பு யுத்தத்தில் முகாம்களை பாதுகாப்பது, முகாம்களில் இருந்து குறிப்பிட்ட தூரம் முன்னேறிச் சென்று தாக்கிவிட்டுத் திரும்புவது என்பவை உள்ளடக்கமாக இருக்கும்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் அச்சுவேலி வரை பலாலி இராணுவ முகாமிலிருந்து படைகள் முன்னேறிச் சென்றன.

குறிப்பிட்டதூரம் வரை சென்றுவிட்டு அதே வேகத்தில் படையினர் தமது நிலைகளுக்கு திரும்பினார்கள். இதுதான் தற்காப்பு யுத்தம்.

பலாலி முகாமைச் சுற்றி புலிகள் பதுங்குநிலை எடுத்து தாக்குதலுக்கு தயாராகிவிடக்கூடாது என்ற நோக்கம் முக்கியமாக இருந்திருக்கும். அதாவது முகாம் சூழலை சுத்தப்படுத்தும் நடவடிக்கை என்று சொல்லலாம்.

ஆனால் தாக்குதல் யுத்தம் என்றால் புலிகளிடம் உள்ள பகுதிகளை விடுவித்து அங்கு நிலை கொள்ள வேண்டும். தொடர்ந்து முன்னேறி புலி களை தேடிப் போரை தொடரவேண்டும்.

இரண்டாவது கட்டம் அதுதான். ஆனால் புலிகள் அதற்கு இடம்கொடுப்பார்களா என்பது புலிகளது பலத்தை பொறுத்த விடயம்.

வவுனியாவில் இருந்து ஒரு குறிப்பிட்ட தூரம் வரை சென்று பார்ப்பது, புலிகளது பலத்தை நாடிபிடித்தறிந்துவிட்டு கிளிநொச்சிவரை முன்னேறுவது என்று படையினர் திட்டமிட்டுள்ளதாக ஒரு தகவல் கூறுகிறது.

ஆனையிறவு, கிளிநொச்சி, பூநகரி ஆகிய பகுதிகளில் ஒரு இராணுவ வலைப்பின்னலை உருவாக்கிவிட்டால் இராணுவ பலத்தில் ஓரளவு மேலோங்கி விடலாம் என்று படைத்தரப்பு கணக்குப் போடக்கூடும்.

வவுனியாவில் உள்ள படைகள் தாக்குதல் ஒன்றுக்கு தயாராகிவருவதாகவே தெரிகிறது.

பலாலியில் கடல் வழியாக படையினர் போய் இறங்கியுள்ளனர்.

வடக்கில் உள்ள முகாம்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாயினும் வான்வழி போக்குவரத்துக்கள் மூலம் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வவுனியாவில் இருந்து தாக்குதலை படைகள் ஆரம்பித்தால், அதனைத் தடுக்க புலிகள் தமது முழுப் பலத்தையும்அங்கு கொண்டு வந்து நிறுத்துவர். அப்போது பலாலியில் இருந்து படைகள் முன்னே நகரும்.

பல முனைகளில் இருந்து படைகள் நகரும் போது புலிகளது அணிகள் பரவலாக வேண்டி வரும்.


அணிகள் பரவலானால் பலம் குறையும். அந்த வாய்ப்பை பயன்படுத்தி படைகள் முன்னேறலாம் என்பது படைத்தரப்பின் திட்டமாக இருக்கும் என்று தோன்றுகிறது.

எவ்வாறெனினும் வடக்கில் புலிகள் தமது சுற்றிவளைப்பு தாக்குதலை ஆரம்பிக்க முன்னர் தாம் முந்திக்கொள்ளும் அவசியம் படைத்தரப்புக்கு எழுந்துள்ளது.

அதனால் வடக்கே யுத்தப் புயல் மையம் கொள்ளத் தொடங்கியிருப்பது தெரிகிறது. புயல் வீச காலதாமதமாகாது. புலிகளின் பலத்தை பொறுத்தே வீசப் போகும் புயல் மினிப் புயலா, பாரிய புயலா என்பது தீர்மானிக்கப்படும்.

---

## அதிரடி அய்யாத்துரை



கிழக்கில் ரெண்டு எழுத்தாரின் பெயரில் புரளி கிழப்பிய விவகாரத்தில் அரசியல்வாதி ஒருவரின் பெயரும் அடிபடுகிறதாம். தனிப் படை அமைக்க புலிப்படை பெயரில் புரளி கிளப்புறதோ எண்டு மறு தரப்பு தேனக அரசியல்வாதி பொருமிக்கொண்டிருக்கிறாராம். என்னவோ நடக்குது. ஏதேதோ இருக்குது. எனக்கேன் அந்தச் சோலி. ஆளை விடுங்கோ.

வடக்கில் பணிசெய்யும் புனர்வாழ்வு நிறுவனப் பிரதிநிதிகளை அழைத்து ரெண்டு எழுத்து பிரமுகர் கதைச்சவராம். "நீங்கள் நல்லது செய்யுங்கோ நல்லாச் செய்யுங்கோ. ஆனால் எவ்வளவு செய்மிறியள் எவர் மூலம் செய்மிறியள் என்ற விவரம் எல்லாம் எங்கடை விரல் நுனிக்கு வரவேண்டும். ஏனெண்டால் இது எங்கடை மண். கண்ணீரும், செந்நீரும் சிந்தி மீட்ட மண் எண்டு" ஒரு குட்டிப் பிரசங்கமே நடத்திப்போட்டாராம். பொது நிறுவன வெளி நாட்டுப் பிரநிதிகள் சிலர் கலங்கிப்போயிருக்கினமாம்.

தெற்கு புத்தி சீவிகள் சிலர் சேர்ந்து அதிகார மட்டத்தாருக்கு மனுக்கொடுத்திருக்கினமாம். சமஷ்டி என்றால் அவைக்கு குமட்டிக் கொண்டு வருகுதாம். அதனால் தான் விறுவிறு என்று எழுதி மகஜர் தள்ளிமிருக்கினம். ரெண்டு எழுத்தார் மட்டுமில்லை சகல தமிழ் கட்சிகளுமே இனவாதிகள்தான் எண்டு ஓங்கி அடித்துச் சொல்லியிருக்கினமாம். என்னே புத்திசீவித்தனம் பார்த்தியளோ?!

வவனியாவிலை இருந்து அநுராதபுரம் ஆசுப்பத்திரியிலை பிரசவத்துக்கு போய் இருந்தார். பிள்ளை பிறந்து விட்டது. ஒருவர் வந்து அந்தத் தாய்க்கு விட்டாராம் ஒரு அடி. அடிச்சுப் போட்டு முறைத்தபடி சொன்னாராம் "கொட்டியாவைப் பெத்திருக்கிறாய்." இதை யாரிடம் சொல்லி அழ?

கனடாவிலை ரெண்டு எழுத்தார் நடத்திய ஊர்வலத்திலை நல்ல சனம். அங்கையிருக்கிற கனபேருக்கு கனடா குளிர் வெறுத்துப் போச்சுதாம். விரைவில் ஊருக்குப் போக வேணும், ரெண்டு எழுத்தார் அதுக்கு ஒரு வழி பண்ணிப் போடுவினம் போல கிடக்கு எண்டு புளுகிலை இருக்கினமாம். அக்கரைக்கு இக்கரை பச்சை. இஞ்சை என்ன நடக்குதெண்டா ஏஜென்சிக்காரருக்கு கொடுக்க கரன்சியளை எண்ணிக்கொண்டல்லோ இருக்கினம்.

இந்தியர் ஒருவர் புலிகளின் வரலாறு எழுதிப் புத்தகமாய் வெளியிட்டுப்போட்டார். நல்ல விஷயம் எண்டு புத்தகத்தைப் புரட்டினால் 90 வீதம் அண்டப் புளுகு. அட..நாராயணா! அதில் ஒரு வெடிச் சிரிப்பு விஷயம், துரையப்பாவை சுட தீக்குச்சி மருந்திலை தோட்டா செய்து சுட்டவையாம். ஹி...ஹி...ஹி.

அடையாள அட்டை அலுவலகத்திலை தமிழ் ஆக்கள் படுகிற பாடு சொல்லி விளங்காது பாருங்கோ. கொழும்பிலை அடையாள அட்டை தவறிப்போன ஒருவர் பொலிஸ் ரிப்போட் வாங்கிக்கொண்டு அடையாள அட்டை அலுவகத்திற்குப் போனவர். உம்முடைய சொந்த ஊருக்குப் போய் விண்ணப்பியும் எண்டு ஒரு அதிகாரி பதில் சொன்னவராம். தொலைந்து போன அடையாள அட்டையைப் பெறவும் காவடி தூக்கி அலைய வேணுமோ? விழிப்பாய் இருக்கலாம், அதுக்காக வெறுப்பாய் இருக்கலாமோ?

திருவான மலையில் முன்னாள் மாகாண சபைக் கட்சி, தியாகிகள் தினம் நடத்தினதாம். கலந்து கொண்டவர்களிடம் நன்றியுரை நிகழ்த்தினவர் வளைஞ்சு நெளிய வேண்டியதாய் போச்சுது. ஏன் தெரியுமோ, சேலை தரப்படும் என்று கூறி தாய்க்குலத்தைக் கூட்டி வந்தவையாம். யார் கொடுத்த முறுக்கில் அப்படி அறிவிச்சவையோ தெரியாது. கூட்டம் முடிஞ்சும் சேலைகள் வந்து சேரவில்லை. அதுதான் நன்றியுரை சொன்னவர் மன்னிப்புக் கேட்டவராம்.

இரண்டு தடவை இந்திய தேசிய விருது வைரமுத்துவின் வீட்டுக் கதவை தட்டியிருக்கிறது. கையில் கிட்டியிருக்கிறது. வைரமுத்துவின் கவிதையில் ஒரு துளி. இளம் வயதினருக்குப் பிடித்த தேன் துளி.

"ஒரு முத்துக் குடம்
சத்தம் இடும்
முத்தம் தரும்
இது யார் முகம்?
ஒரு தெரிந்த முகம் தரும்
ஞாபகம்."

www.padippakam.com                                        நன்றி - நூலகத்திட்டம்



# கடற்படை முகாம் மீது மிகப் பெரும் தாக்குதல்!

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது

### அறைக்குள் பூட்டி வைத்து...

யாழ்ப்பாணத்தில் இருக்கிறது சுன்னாகம். யாழ்ப்பாணத்திலுள்ள பெரியளவான பொலிஸ் நிலையங்களில் சுன்னாகம் பொலிஸ் நிலையமும் ஒன்று.

1984 ஆகஸ்ட் மாதத்தில் வடக்கு-கிழக்கில் தமிழர்கள் படையினரால் தாக்கப்பட்டுக் கொண்டிருந்த போது புலிகளும் பதிலடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

சுன்னாகம் பொலிஸ் நிலையமும் தாக்கப்படலாம் என்று பொலிசாருக்குத் தகவல் கிடைத்தது.

பொலிஸ் நிலையத்தைக் காலி செய்து செல்ல அங்குள்ள பொலிசார் முடிவு செய்தனர்.

கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் பொலிஸ் நிலையத்தில் தான் வைக்கப்பட்டிருந்தனர். 25 பேர் வரை இருந்தனர்.

அவர்களது கைகளைக் கட்டி வாயில் பிளாஸ்ரர் ஒட்டி ஒரு அறைக்குள் வைத்துப் பூட்டினார்கள். வாசலில் ஒரு குண்டை வைத்து விட்டு பொலிசார் வெளியேறிச் சென்றுவிட்டனர்.

உள்ளே கிடந்த இளைஞர்களில் சிலர் பிளாஸ்ரர்களை அகற்றிவிட்டு அபயக் குரல் எழுப்பினார்கள். சத்தம் கேட்ட பொதுமக்கள் ஓடிச்சென்று கதவை உடைத்தனர்.

அப்போது குண்டு வெடித்தது. மாடிக் கட்டிடம் உடைந்து வீழ்ந்தது.

அறைக்குள் பூட்டப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களில் இடிபாடுகளில் சிக்கி 22 பேர் வரை உயிரிழந்தனர்.

# கொல்லப்பட்ட மக்களும் — — சொல்லப்பட்ட பொய்களும்

பொதுமக்கள் சடலங்களை மீட்டெடுத்தனர். இடிபாடுகளுக்குள் சிக்கி புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் இருவரும் பலியானார்கள்.

### அமைச்சர் அறிக்கை

இதே வேளை அப்போது அமைச்சராக இருந்த எம்.எச்.முஹம்மட் (பின்னர் சபாநாயகராக இருந்தவர்) மன்னார் பகுதிக்கு நேரடியாகச் சென்று பார்த்தார்.

இராணுவத்தினர்தான் நூற்றுக்கு மேற்பட்ட கடைகளை மன்னாரில் தீயிட்டுக் கொளுத்தினார்கள் என்று எம்.எச். முஹம்மட் அறிக்கை தாக்கல் செய்தார்.

இதனையடுத்து மன்னார் இராணுவப் பொறுப்பதிகாரி கேர்ணல் மோரிஸ் பின்வருமாறு சொன்னார், "மது அருந்தியிருந்த 30 இராணுவத்தினர் அத்துமீறி நடந்துவிட்டார்கள்"

### மணவீடு சென்றோர் பிணமானார்கள்

வவுனியாவிலும் சந்தைகள், கடைகள் எரிக்கப்பட்டன.

'வேல் கபே' என்னும் உணவு விடுதிக்குள்ளும் தமிழர்கள் சிலர் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருக்கிறது கைதடி என்னும் கிராமம்.

தனியார் வாகனமொன்றை வாடகைக்கு அமர்த்தி 16 பேர் திருமணம் ஒன்றுக்காகச் சென்று கொண்டிருந்தனர்.

அந்த வாகனம் இராணுவத்தினரால் வழி மறிக்கப்பட்டது. துப்பாக்கிகள் வேட்டுக்களைப் பொழிந்தன. பெண்கள், குழந்தைகள், உட்பட பலர் இரத்த வெள்ளத்தில் உயிர் துறந்தனர்.

இராணுவ நடவடிக்கைகள் இவ்வாறு தொடர்ந்து கொண்டிருந்த போது புலிகளின் மற்றொரு தாக்குதல். அது நடந்தது மன்னாரில் .

மன்னாரில் இருந்தது தள்ளாடி இராணுவ முகாம்.

மன்னார் மாவட்டத்தில் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் தள்ளாடி இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்படுவார்கள்.

அதன் பின்னர் அவர்கள் பற்றிய தகவல்கள் வெளியே தெரிவதேயில்லை.

11.8.84 அன்று தள்ளாடி இராணுவ முகாமைச் சேர்ந்த 13 இராணுவ வீரர்கள் ஜீப் வண்டி ஒன்றில் ரோந்து சென்று கொண்டிருந்தனர்.

மன்னார்-பூநகரி பிரதான பாதையில் நிலக்கண்ணி வெடிகளை புதைத்து வைத்து விட்டுப் புலிகள் காத்திருந்தனர்.

ஜீப் வண்டி குறிப்பிட்ட இடத்தில் வந்ததும் நிலக் கண்ணிகள் வெடிக்க வைக்கப்பட்டன.

30 அடிவரை உயர்ந்து சிதறியது ஜீப் வண்டி. 13 இராணுவத்தினரும் பலியானார்கள்.

இது மன்னார் தாக்குதல்! மற்றொரு தாக்குதல் வல்வெட்டித்துறையில்.

### ஒரு மணிநேரச் சமர்

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இருந்த பொலிஸ் நிலையம் அதிகாலை 4.30 மணியளவில் சுற்றிவளைக்கப்பட்டது.

பொலிஸ் நிலையப்பாதுகாப்புக்காக பொருத்தப்பட்டிருந்த செக்யூரிட்டி லைட் மீது முதல் சூடு விழுந்தது. அதனால் பொலிஸ் நிலைய சுற்றுப்புறம் இருளானது.

கைக்குண்டுகளை வீசி பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது.

பொலிஸ கமாண்டோக்கள் திருப்பித் தாக்கத் தொடங்கினார்கள்.

சுமார் ஒரு மணி நேரம் துப்பாக்கிச் சமர் தொடர்ந்தது.

பொலிஸ் நிலையத்தின் உள்ளே செல்ல முடியவில்லை. தாக்குதலை நிறுத்தி விட்டு புலிகள் திரும்பினார்கள். 14.8.84 அன்று புலிகள் நடத்திய தாக்குதல் அது.

### வவுனியாவில் குண்டு

வவுனியா மாவட்டத்தில் கெடுபிடி நடவடிக்கைகளோடு தொடர்பு படுத்திப் பேசப்பட்டவர் எஸ்.பி.ஹேரத். வவுனியா மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரியாக அவர்தான் இருந்தார்.

வவுனியாவில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நடத்துவதில் எஸ.பி. ஹேரத் முன் நின்று செயற்பட்டவர்.

வவுனியாவில் காந்தீயம் என்னும் அமைப்பு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிராகவும் செயற்பட்டு வந்தது. அதனால் ஹேரத்தின் கழுகுப் பார்வை காந்தீயம் அமைப்பு மீதும் விழுந்தது.

காந்தீய அமைப்பு புளொட் அமைப்போடு தொடர்பாக இருந்தது. புளொட் அமைப்பின் தலைவர்களில் ஒருவராக இருந்த சந்ததியார் காந்தீய அமைப்பின் ஊடாக வேலை செய்து வந்தார்.

காந்தீய அமைப்புக்கு எஸ்.பி.ஹேரத்தின் நடவடிக்கைகள் பாதிப்பை ஏற்படுத்தி வந்தன.

1984 ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள் (திகதி நினைவில் இல்லை) எஸ்.பி.ஹேரத் தனது அலுவலகத்தில் இருந்தபோது குண்டு வெடித்தது.

எஸ்.பி.ஹேரத் பலியானார். புளொட் அமைப்பே இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

### அப்பட்டமான பொய்கள்

வடபகுதியெங்கும் கொல்லப்பட்ட பொது மக்களின் எண்ணிக்கையைப் பயங்கரவாதிகளின் கணக்கில் சேர்த்துக் கொண்டது அரசு.

இலங்கை வானொலி பின்வருமாறு அறிவித்தது.

**"பாதுகாப்பு படைகளுக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் 70 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.**

**கடந்த 24 மணித்தியாலத்தில் மூன்று இடங்களில் நடைபெற்ற மோதலில் 31 கொரில்லாக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.**

**கைதடியில் மேலும் 10 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்."**

இதுதான் இலங்கை அரசு தனது வானொலி மூலம் சொன்ன செய்தி.

வல்வெட்டித்துறையில் கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதல் தொடர்பாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி என்ன சொன்னார் தெரியுமா?

**"கடற்படையிடம் பீரங்கிகளே இல்லை. பீரங்கித் தாக்குதல் வல்வெட்டித்துறையில் எங்குமே நடைபெறவில்லை" என்றார் அவர்.**

இலங்கை வானொலிச் செய்திப்படி நூற்றிப் பதினொரு பேர் கொல்லப் பட்டார்கள். அவர்கள் அத்தனைபேரும் பயங்கரவாதிகள்.

ஆனால், இயக்க உறுப்பினர்கள் என்று பார்த்தால் புலிகள் அமைப்பைச் சேர்ந்த இருவர் மட்டுமே மாண்டனர். ஏனையோர் அனைவரும் பொதுமக்களே.

### தகவல் கிடைத்தது.

யாழ்ப்பாணத்தில் இருக்கிறது கரவெட்டி. கரவெட்டி மேற்கில் கல்லுவம் மண்டான் என்றழைக்கப்படும் பாதையில் புலிகள் காத்திருந்தனர்.

நிலக்கண்ணி வெடிகள் பாதையில் புதைக்கப்பட்டிருந்தன.

ஆனால், இந்தத் தகவலை யாரோ இராணுவத்தினருக்கு தெரியப்படுத்தி விட்டனர்.

24.8.84 கொளுத்தும் வெய்யில் -பகல் -12.30 மணி.

கோபுரக் கவச வண்டி சகிதம் நிலக்கண்ணிகளை அகற்ற இராணுவ அணி விரைந்து வந்தது.

இராணுவத்தினர் நிலக்கண்ணிகள் புதைக்கப்பட்டிருந்த இடத்தைத் தேடி ஆராய்ந்து கொண்டிருந்தனர். கோபுரக் கவச வண்டி நகர்ந்து நிலக்கண்ணி வெடிகளுக்கு மேலே வந்தபோது பதுங்கியிருந்த புலிகள் அவற்றை வெடிக்க வைத்தனர்.

கோபுரக் கவச வண்டி குப்புறக் கவிழ்ந்து பற்றி எரிந்தது. இராணுவத்தினர் எட்டுப்பேர் பலியானார்கள்.

அதே நாளில் மற்றொரு நிலக்கண்ணி வெடித்தாக்குதல் நீர்வேலியில் நடைபெற்றது.

நீர்வேலிப் பிரதான பாதையில் நிலக் கண்ணிகள் புதைக்கப்பட்டிருந்தன. இத் தகவலும் இராணுவத்தினருக்கு எட்டியதோ தெரியவில்லை.

வாகனம் பின்னால் மெல்ல நகர்ந்துவர முன்னால் நடந்து பாதையை ஆராய்ந்தபடி வந்தனர் இராணுவத்தினர்.

எனினும் நிலக்கண்ணிகள் வெடிக்க வைக்கப்பட்டன. தேடுதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவத்தினரில் மூவர் பலியானார்கள்

இத்தாக்குதலும் புலிகள் அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்டது.

### பாரிய தாக்குதல் திட்டம்.

1984 இல் மிகப் பாரிய தாக்குதல் முயற்சி ஒன்றுக்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப் மக்கள் விடுதலைப் படை தயாரானது.

யாழ்ப்பாணம் காரைநகரில் உள்ள பாரிய கடற்படை முகாமை தாக்கி அங்குள்ள ஆயுதங்களைக் கைப்பற்றுவதுதான் திட்டம்.

இதே நேரம் ஈ.பி.ஆர்.எல்.எஃப் மத்திய குழுவுக்குள் பிரச்சனைகள் ஏற்பட்டிருந்தன.

மக்கள் விடுதலைப் படை பிரதம தளபதியாக இருந்தவர் டக்ளஸ் தேவானந்தா. ஈ.பி.ஆர்.எல்.எஃப் மத்திய குழுவின் அரசியல் பீட உறுப்பினராகவும் அவர் இருந்தார்.

டக்ளஸ் தேவானந்தாவுக்கும் மத்திய குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கிடையிலும் ஏற்பட்ட பிரச்சனைகளில் பத்மநாபா நடுநிலை வகிப்பவராக நடந்து கொண்டார்.

காரைநகர் கடற்படை முகாம் தாக்குதல் திட்டம் குறித்து டக்ளஸ் தேவானந்தா அதிருப்தி தெரிவித்தார். அப்போது அவர் தமிழ் நாட்டில் இருந்தார்.

மற்றொரு மத்திய குழு உறுப்பினரான சுரேஸ் பிரேமச்சந்திரன் யாழ்ப்பாணத்தில் இருந்தார். டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணம் வருவதற்கிடையில் கடற்படை முகாம் மீதான தாக்குதலை நடத்தி முடித்துவிட சுரேஸ் திட்டமிட்டார்.

கடற்படை முகாம் பாரிய நிலப்பரப்பில் அமைந்திருந்தது. ஆட்பலமும் அதிகமிருந்தது.

ஆனாலும் தாக்கி அழித்துவிடலாம் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப் நம்பியதற்கு முக்கிய காரணம் ஒன்று இருந்தது.

அதுதான் மோட்டார் ஷெல். தமிழ் அமைப்புக்களிடையே முதன் முதலில் சொந்தமாக மோட்டார் தயாரித்தது ஈ.பி.ஆர். எல்.எஃப் அமைப்புத்தான்.

### உதவிய புத்தகம்

தமிழ் நாட்டில் கும்பகோணத்தில் வைத்து மோட்டார்களும் அதற்கான ஷெல்களும் தயாரிக்கப்பட்டன.

ஆனால், அது ஒன்றும் தலைமையின் திட்டமிட்ட முடிவினால் நடந்த காரியமல்ல.

திருமலையைச் சேர்ந்தவர் சின்னவன். லெபனானில் பயிற்சி எடுத்த சின்னவன் துணிச்சலுக்கு பெயர் போனவர். குறி பார்த்து சுடுவதில் வல்லவர்.

ஒரு நாள் வெளிநாட்டு புத்தகம் ஒன்றை சின்னவன் காண நேர்ந்தது. அது ஆயுத தளபாடங்கள் சம்பந்தப்பட்ட புத்தகம்.



சின்னவன்

அதில் மோட்டார்கள் மற்றும் ஷெல்கள் தயாரிக்கும் முறை பற்றிப் படங்களோடு விளக்கப்பட்டிருந்தது.

புத்தகத்தை எடுத்துக் கொண்டு நேராக ஆர்.பி.கே. ஸ்ராலின் என்பவரைச் சந்தித்தார் சின்னவன். ஸ்ராலின் கும்பகோணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்புக்கு தன் பல லட்சங்கள் பெறுமதியான சொத்துக்களைக் கொடுத்தவர். திராவிடர் கழகத்தில் மாணவர் தலைவராக இருந்தவர். ஆனால் வெளியே அதிகம் அறியப்படாதவர். விளம்பரம் அவருக்குப் பிடிக்காது. ஸ்ராலின் என்று அவருக்கு பெயர் வைத்தவர் தந்தை பெரியார்.

ஸ்ராலினிடம் கேட்டார் சின்னவன், "நாங்கள் ஏன் மோட்டார் செய்து பார்க்கக் கூடாது".

ஸ்ராலின் கேட்டார்:

"உங்களுக்கு நம்பிக்கை இருக்குதுங்களா சின்னவன்?"

"இருக்குது"

"செஞ்சிடுவோம்!"

### மோட்டார் தயார்

ஸ்ராலினுக்கு சொந்தமான பட்டறையில் வேலை தொடங்கியது. சின்னவனுக்கும் ஸ்ராலினுக்கும் தூக்கமே இல்லை. கிட்டத்தட்ட ஒரு மாதம் ஓயாத வேலை.

மோட்டாரும் தயார், ஷெல்களும் தயார். இருவர் விழிகளிலும் ஆனந்தக் கண்ணீர்.

கும்பகோணத்தில் வைத்து பரிசீலித்துப் பார்த்தார்கள். மோட்டாரில் ஷெல்லைப் போட்டார் சின்னவன். நேர்த்தியாக எழுந்து போய் வெடித்தது.

"வெற்றி"

சின்னவன் கண்களில் இராணுவ முகாம்கள் தெரிந்தன சின்னவன் சொன்னார்;

"இனி ஒரு முகாமும் ஈழத்தில் இருக்காது".

அந்த மோட்டார் தாக்குதலை முதுகெலும்பாக வைத்தே காரைநகர் கடற்படை முகாம் தாக்குதல் திட்ட மிடப்பட்டது.

மோட்டாரும், ஷெல்களும் வந்து யாழ்ப்பாணத்தில் இறங்கின. யாழ் பிராந்திய மக்கள் விடுதலைப் படை தளபதி சுபத்திரன் கேட்டார்;

"பரிசோதிக்கத் தேவையில்லையா?"

"தேவையே இல்லை. வெடிக்கும்" என்றார் சின்னவன்.

சிறிய வேன் ஒன்றை எடுத்து கவச வண்டியாக தயாரித்தனர். முதன் முதலில்

32

தயாரிக்கப்பட்ட கவச வண்டியும் அதுதான். தயாரித்தவர் மக்கள் விடுதலைப் படை யாழ் பிராந்திய முக்கியஸ்தராக இருந்த சுதன்.

### தாக்குதல் ஆரம்பம்

தாக்குதல் ஆரம்பித்தது. மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தும் பொறுப்பை சின்னவன் ஏற்றிருந்தார்.

மோட்டாரில் இருந்து ஷெல்கள் எழுந்து போய் கடற்படை முகாம் கட்டிடங்களில் வீழ்ந்தன. ஆனால் அவற்றில் பல வெடிக்கவேயில்லை.

கவச வண்டி கடற்படை முகாம் வாசல்வரை சென்று மேற்கொண்டு செல்ல முடியாமல் மரம் ஒன்றுடன் சிக்கிக் கொண்டது.

கவச வண்டி செல்லக் கூடிய வழி இருப்பதாக மக்கள் விடுதலைப்படை உளவுப் பிரிவு சொன்ன தகவலினால் ஏற்பட்ட தவறுஅது.

வெடித்த ஷெல்களால் கடற்படை முகாம் கட்டிடங்கள் சேதமடைந்தன. கடற்படையினர் முகாமை விட்டு பின்வாங்கிச் சென்று பதுங்கிக் கொண்டனர்.

முகாமுக்கு வெளியே நின்ற மக்கள் விடுதலைப் படைக்கு உள்ளே நடந்தது எதுவும் தெரியாது.

அதனால் மக்கள் விடுதலைப் படையினரால் கடற்படை முகாமுக்குள் பிரவேசிக்க முயலவில்லை. திட்டம் தோல்வி என்பதால் தாக்குதலை நிறுத்தி விட்டுத் திரும்பினார்கள்.

- **உரிய தகவல்கள் திரட்டப்படாமை.**
- **மோட்டார் ஷெல் மீது மட்டுமே நம்பிக்கை வைத்தமை.**
- **யாழ் பிராந்திய மக்கள் விடுதலைப் படை பொறுப்பாளர்களோடு கூடி ஆராயாமை.**
- **முதல் தாக்குதலையே பாரிய தாக்குதலாக திட்டமிட்டமையால் ஏற்பட்ட முன் அனுபவம் இன்மை.**

போன்றவையே கடற்படை முகாம் தாக்குதலின் தோல்விக்கு முக்கிய காரணங்களாகும்.

கடற்படை முகாமை தாக்குவதற்கு முன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை தாக்கலாம் என்று யாழ் பிராந்திய மக்கள் விடுதலைப்படை பொறுப்பாளர்கள் கூறினார்கள். தலைமை தடுத்து விட்டது.

ஆனால், சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மீது ரெலோ குறி வைத்தது.

(தொடர்ந்து வரும்...)

## நாசகார ஆயுதங்களை ஆக்கபூர்வமானதாக்கும் இன்றைய ஜேர்மனி

அண்மையில் லண்டன் பி.பி.ஸி தொலைக்காட்சிச் சேவை ஒரு சுவாரஸ்யமான விவரணச் சித்திரமொன்றை ஒளிபரப்புச் செய்திருந்தது.

ஜெர்மன் நாட்டில் இன்று மேற்கொள்ளப்பட்டுள்ள புதுமையான ஒரு முன்னோடித் திட்டமொன்றைச் சித்தரிப்பதாகவே அத்தொலைக்காட்சி விவரணம் விளங்கியிருந்தது.

இரண்டாம் உலக யுத்தத்தையடுத்து ஜெர்மனி கிழக்கு, மேற்கு என இரண்டாகப் பிரிந்து, கிழக்கு ஜெர்மனி அன்றைய சோவியத் ரஷ்யாவின்செல்வாக்கிற்குட்பட்டதாகவும், மேற்கு ஜெர்மனி மேற்கத்திய நாடுகள் சார்பானதாகவும் விளங்கியிருந்தன.

அப்போது நேட்டோ(NATO) அமைப்பு, வார்ஸோ(WARSAW) அமைப்பு என்று நிலவிய மேற்கத்தேய மற்றும் சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையிலான வேறுபாடுகள் பெருமளவிலான ஆயுதப்போட்டிக்கு வழியமைத்திருந்தது.

இருதரப்புமே போட்டியிட்டுக் கொண்டு விதவிதமான போராயுதங்களைச் செய்து குவித்தன. மேற்கத்தேய நேட்டோ அமைப்பின் முதன்மை நாடாக அமெரிக்காவும், வார்ஸோ அமைப்பிற்கு சோவியத்யூனியனும் தலைமை தாங்கின.

இந்த இரு நாடுகளும் தத்தமது கொடிய போர்த்தளபாடங்களை நேரடியாகத் தம்மிடையே யுத்தங்களை நடத்திப் பயன்படுத்தாத போதிலும், மறைமுகமாக தமது நேச நாடுகள் ஊடாக மோதல்களைத் தூண்டிவிட்டு, தாம் தயாரித்த வித விதமான யுத்த தளபாடங்களைப் பாவனையில் ஈடுபடுத்தின.

இவ்வகையில் அன்றைய சோவியத் ரஷ்யாவினால் பெருமளவில் தயாரிக்கப்பட்ட கொடிய போர் ஆயுதங்கள், அன்றைய அதன் நேச நாடாகவிருந்த கிழக்கு ஜெர்மனியில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

ஏவுகணைகள், இராட்சதக்குண்டுகள், ராக்கெட்டுகள், துப்பாக்கிகள், வித விதமான பீரங்கி, மற்றும் துப்பாக்கிகுண்டுகள், விமான எதிர்ப்பு பீரங்கிச் சாதனங்கள், அதிசக்தி வாய்ந்த தோட்டாக்கள் என்று பல லட்சக்கணக்கான தொன்கள் எடை கொண்ட கொடிய ஆயுதங்கள் கிழக்குஜெர்மனியில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

உலகம் முழுவதையுமே அழித்து, நாசமாக்கிவிடக்கூடிய சக்தி கொண்டவையாகவே அப்போர் ஆயுதங்கள் விளங்கின.

இந்நிலையில் பி.பி.ஸி தொலைக்காட்சி சேவை தயாரித்த விவரணம், அன்றைய கிழக்கு ஜெர்மனியில் குவித்து வைக்கப்பட்டிருந்த கொடிய போர்த்தளபாடங்கள் பற்றியதாகவே விளங்கியிருந்தது.

இன்று கிழக்கு-மேற்கு என்ற வேறுபாடின்றி ஜெர்மனி ஒரே நாடாக இருக்கின்றது. எனவே அன்றைய கிழக்கு ஜெர்மனியில் இருந்த பெருந்தொகையான போர் தளபாடங்கள் இன்று அநாவசியமானவை என்று ஜெர்மன் உணர்ந்திருக்கின்றது.

இதன்காரணமாக அழிவையும், அவலத்தையும் ஏற்படுத்தவல்ல அப்போராயுதங்களை ஆக்கபூர்வமான முறையில் உபயோகப்படுத்த ஜெர்மன்காரர்கள் முன்வந்துள்ளனர்.

லட்சக்கணக்கான தொன்கள் எடைகொண்ட பல்வேறு ரகத்திலுமான போராயுதங்களை, மின்சக்தியைப் பெறத்தக்க வகையில் பயன்படுத்துவதே ஜெர்மனின் புதிய திட்டமாகும்.

இத்திட்டத்தை விளக்குவதாகவே பி.பி.சி விவரணமும் காணப்பட்டது.

குண்டுகள், ராக்கட்டுக்கள், பீரங்கிகள் உட்பட சிறிய ரகத்திலான கிரனேட்டுகள், துப்பாக்கி ரவைகள் என்பன கூட ஒரு தொழிற்சாலையில் அக்குவேறு, ஆணிவேறாக கழற்றப்படுகின்றன. பின்னர் அவற்றினுள்ளிருந்த வெடிமருந்தைக் கொண்டே மின் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

அழிவைத் தரக்கூடியவற்றின் மூலம் ஆக்கபூர்வமான மின்சக்தியைப் பெறும் ஜெர்மன்காரர்களின் முயற்சி வியப்பையும் ஒரு முன்மாதிரியான செயல் திட்டத்தை உலகிற்கு அறிமுகப்படுத்துவதாகவும் இருக்கின்றது.

இந்த ஆக்கபூர்வமான திட்டத்தின்மூலம் ஜெர்மனியில் பல கிராமங்களுக்கு கூடுதலானளவு மின்சக்தியை வழங்க முடியும் என்று ஜெர்மன் ஆராய்ச்சியாளர்கள், மேற்படி பி.பி.சி விவரணத்தில் தெரிவித்திருக்கக் காணப்படுகின்றனர்.

இருவேறு துருவங்களாக இருந்த கிழக்கு-மேற்கு ஜெர்மனி ஆகியன இன்று ஒன்றுசேர்ந்து தம்மிடையே இருக்கும் கொடிய ஆயுதங்களை தமது மேம்பாட்டுக்கு ஏற்றவகையில் மாற்றமடையச் செய்துவரும் இத்தருணத்தில், உலகில் இன்றும்கூட நாசகார ஆயுதங்களுக்காக நாவில் ஊற்றெடுக்க நிற்கும் நாடுகளும் இருக்கவே செய்கின்றன.

அந்நாடுகளில் ஒன்றாக இலங்கையும் இருப்பதே வேதனைக்குரியதாக இருக்கின்றது.

'ஈழப்போர் 3' ஆரம்பமாகியுள்ள இத்தருணத்தில் அப்போரை நிறுத்துவதற்கான வழிமுறைகள் முன்னெடுக்கப்படாமலிருக்கின்றது.

## வடக்கு-கிழக்கில் 'குண்டுமாரியினால்' மீண்டும் தோன்றியுள்ள இரத்த வெள்ளம்

### அலசுவது—இராஜதந்திரி

# அப்பாவிகளுக்கு ஆறுதலளிக்கும் மனித உரிமைகள் செயலணி!



ஆட்சியாளர்கள் வெளிநாடுகளிலிருந்து இராணுவ ரீதியிலான உதவிகளையே எதிர்பார்ப்பதை அவதானிக்க முடிகின்றது. இதே வேளை எல்.ரி.ரி.ஈயினரின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான திரு.லோறன்ஸ் திலகர் கடந்த வாரம் பிரான்சில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோது தமது இயக்கம் அதன் ஆகாயப்படையை உருவாக்கி வருவதாகவும், விரைவில் ஆகாய மார்க்கமாகவும் தாம் பலமடைந்துவிட முடியுமென்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எனவே இலங்கையின் ஆட்சியாளர்களும் எல்.ரி.ரி.ஈயினரும் தம்மிடையே முழு அளவிலான யுத்தத்தை தொடரும் துரதிஷ்ட நிலையே தற்போது காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்கில் குண்டு மாரிக்காலம் ஏற்பட்டு 'இரத்த வெள்ளம்' பாய்ந்தோடும் அவல நிலை மீண்டும் தோன்றியுள்ளது.

அரசியல் அணுகுமுறைகள் குறித்து அரசு எதுவும் பேசாதிருக்கின்றது. எதிர்வரும் ஜுலை மாதத்தில் அரசியலமைப்புத் திட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்படும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை கலைக்கப்படும். மீண்டும் பாராளுமன்ற ஆட்சிமுறை அமுல்படுத்தப்படும். என்றெல்லாம் பொது ஜன ஐக்கிய முன்னணி கடந்த ஆண்டில் தேர்தல் காலங்களில் முழங்கியிருந்தது.

ஆனால் ஜுலை மாதமும் நெருங்கிவிட்டது, அரசியலமைப்பு மாற்றம் பற்றியோ, அல்லது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை கலைப்பது பற்றியோ பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்கள் எதுவுமே பேசாதிருக்கக் காணப்படுகின்றனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை நிச்சயமாக இந்த நாட்டிலிருந்து நீக்கப்படும் என்று பொது ஜன ஐக்கிய முன்னணிக்காரர்கள் கொடுத்த வாக்குறுதியை அடுத்தே, ஜே.வி.பியின் அரசியல் பிரிவு சார்பில் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராகப் போட்டியிடவிருந்த திரு.நிஹால் கலப்பதி, தமது போட்டியை வாபஸ் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டுமக்களில் பெரும்பாலானவர்கள்கூட இன்றைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை நிராகரித்த நிலையிலேயே சந்திரிக்காவுக்குத் தமது ஆதரவை வழங்கியிருந்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பெற்ற வெற்றி என்பது, ஜனாதிபதிப் பதவியை அவர் நிராகரிக்க வேண்டுமென்ற நாட்டு மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிப்பதாகவே இருந்தது.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்னை தொடர்பாக அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டிய அதேசமயம், தமது வாக்குறுதிகளுக்கமைய அரசியலமைப்பு மாற்றம், ஜனாதிபதி ஆட்சிமுறைக் கலைப்பு ஆகியனவற்றை ஜனாதிபதி சந்திரிகா மேற்கொள்ளவேண்டியுள்ளது.

ஆனால், இன்றைய சூழ்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான அரசியல் தீர்வோ அல்லது அரசியலமைப்பு மாற்றம், ஜனாதிபதி ஆட்சிக் கலைப்பு என்பன கண்ணுக் கெட்டாதவையாகவே இருக்கின்றன.

'புதிய மொந்தையில் பழைய கள்ளு' என்பதைப் போலவே ஆட்சியாளர்கள் மட்டும் புதியவர்களாக இருக்கின்றனரே தவிர நாட்டு நடப்பு, ஆட்சியாளர்களின் போக்கு, பேரினவாதக் கொள்கை, இராணுவக்கெடுபிடி என்பன முன்பு போலவே தொடர்ந்துமிருக்கின்றன.

இருந்த போதிலும் 'மனித உரிமைகள் செயலணிக்குழு' என்று புதிதாகப் பிரஸ்தாபிக்கப்படும் விடயம், கவனத்துக்குரியதொன்றாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்கு மோதல் மீண்டும் ஆரம்பித்த நிலையில் அப்பாவிப் பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாப்பு என்பன கேள்விக்குரியதாகியுள்ள தன்மை தோன்றியுள்ள தாகக் காணப்படுகின்றது.

"யுத்தமென்று ஒன்று ஏற்பட்டு விட்டால் உண்மையே அதற்கு முதலில் இரையாகின்றது" என்று புத்திஜீவி ஒருவர் முன்பு குறிப்பிட்டிருந்தார்.

நீதி, நியாயம், தனிமனித சுதந்திரம், அடிப்படை மனித உரிமைகள் போன்ற பல்வேறு விடயங்களும் புறக்கணிக்கப்பட்டு, மானுட தர்மம் என்ற பேச்சுக்கே இடமில்லாத சூழ்நிலைகள் போரின் விளைவுகளால் தோன்றுகின்றன.

கடந்த ஏப்ரல் மாதம், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்த நிலையில் வடக்கு கிழக்கில் யுத்தம் சூடுபிடித்திருக்கும் அதேசமயம், நாட்டின் ஏனைய பகுதிகளில் தமிழ் மக்கள்மீது அராஜக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அவதானிக்கமுடிகின்றது.

சிறையிலடைக்கப்பட்டும், பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டும், உயிர், உடமைகளுக்கு ஆபத்து ஏற்படுத்தப்பட்டுமிருக்கக் காணப்படுகின்றது.

இத்தருணத்தில் அமைதியையும், ஒரு கௌரவமான அரசியல் தீர்வையும் விரும்பும் அப்பாவிப் பொதுமக்களை தகுந்த வகையில் பாதுகாக்க வேண்டியது ஆட்சியிலிருப்போரின் தலையாய கடமையாகின்றது.

வெடிகுண்டுகள், மற்றும் அனர்த்தங்களால் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதில் முனைப்பாக இருக்கும் ஆட்சியாளர்கள் பாதுகாப்பு நடவடிக்கை என்று குதித்திருக்கும் ஆயுதப்படையினரால் எதுவுமறியாத அப்பாவிகள் எவ்வகையிலும் இம்சிக்கப்படாததையும் உறுதிசெய்ய வேண்டியவர்களாகின்றனர்.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா கடந்த வாரம் அறிவித்த 'மனித உரிமைகள் செயலணி' என்ற விடயமும், அது தொடர்பாக அவர் பாதுகாப்பு படையினர் நடந்து கொள்ள வேண்டிய விதிமுறைகள், ஒழுங்குமுறைகள் என்பன குறித்த பணிப்புரைகளும் நாதியற்ற அப்பாவி மக்களுக்கு ஆறுதலளிப்பனவாக இருக்கின்றன. ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை, எதிர்காலத்தில் தோன்றக்கூடிய அடிப்படை மனித உரிமைகள் சார்ந்த பல்வேறு பிரச்னைகளுக்கும் ஆரம்பத்திலேயே கால்கட்டு போடுவதாகவும் இருக்கின்றது.

'மனித உரிமைகள் செயலணி' என்ற ஜனாதிபதியின் இப் புதிய முன்னோடி நடவடிக்கை மன ஆறுதலைத்தருவதொன்றாக இருந்தபோதிலும், யுத்தப் பிரேதசங்களில் கெடுபிடி களுக்குள்ளாகியுள்ள அப்பாவிப் பொது மக்கள் எதிர்நோக்கும் அவலநிலை மிகவும் வேதனைக்குரியதாவே இருக்கின்றது.

எனவே நாட்டில் முழு அளவில் அனைத்து மக்களினதும் அடிப்படை உரிமைகள், சுயகௌரவம், தனித்துவம், பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்தும் ஓர் அரசியல் தீர்வுத்திட்டத்தை, யுத்தத்தை மேலும் தொடரவிடாது கொண்டுவருவதிலேயே ஜனாதிபதி தனது சகல அதிகாரங்களையும், வளங்களையும் பயன்படுத்த வேண்டியவராகின்றார்.

# கொல் டி காலை கொல் கொல்





தருவது ரசிகன்

சென்ற வாரம்

ஃபிரான்ஸ் அதிபர் டி காலைக் கொலை செய்ய 30 தடவை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இது 31 வது தடவை நடந்த முயற்சி.

அல்ஜீரியா நாட்டுக்கு டி கால் சுதந்திரம் கொடுத்தது பிரான்ஸ் நாட்டின் ஒரு சாராருக்குப் பிடிக்கவில்லை.

14 தீவிரவாதிகள் ஒன்றுசேர்ந்து டிகாலைக் கொல்ல திட்டம் தீட்டுகிறார்கள். அவர்களது தலைவர் கேணல், அல்லது லியோறி. இரண்டுமே உண்மைப்பெயர்களல்ல.

மிக இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும் அதிபர் டிகாலின் நடமாட்டத்தை மோப்பம் பிடித்து கொலைத் திட்டம் தயாரானது. தனது அலுவலகத்தில் இருந்து காரில் விமான நிலையம் செல்லும் அதிபர் டிகாலை கொலையாளிகள் இருகார்களில் வந்து வழிமறித்து சுடுகிறார்கள்.

இனி..

பிரான்ஸ் அதிபர் டி காலின் தலைக்கு குறிவைத்துப் பறந்து வந்த தோட்டா ஒரு மில்லிலீற்றர் தூரம் விலகியதால் குறி தவறியது.

டி காலின் முகம் கோபத்தில் இரத்த மாகச் சிவந்தது.

அவரது காரின் முன் இருக்கையில் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தார் மெய்ப்பாதுகாவலர்.

டி காலின் காருக்கு பாதுகாப்பாக மோட்டார் சைக்கிள்களில் வந்த பாது காவலர்கள் திகைத்துப் போய் செய்வதறியாது நின்று கொண்டிருந்தனர்.

டி கால் காருக்குள் இருந்து உரத்த குரலில் சத்தமிட்டார்.

"சுடுங்கள் - சுட்டுத்தள்ளுங்கள்! கொலையாளிகளை ஒழியுங்கள்!"

டி காலின் கம்பீரக் குரல் பாது காவலர்களின் அதிர்ச்சியை பனிபோலக் கரையவைத்தது.

காவலர்கள் சுடத்தொடங்கினார்கள். டி காலின் காருக்குள் இருந்த மெய்ப் பாதுகாவலரும் துப்பாக்கியை வெளியே நீட்டி சுடத் தொடங்கினார்.

பாதுகாவலர்கள் உஷராகிவிட்டதால் இரு கார்களிலும் வந்த கொலையாளிகள் பின்வாங்கத் தொடங்கினார்கள்.

பின்சக்கர டயர்கள் வெடித்திருந்த நிலையிலும் டி காலின் கார் சாரதி அபாரத் திறமையுடன் விமான நிலையம் நோக்கி காரைச் செலுத்திச் சென்றார்.

கொலையாளிகள் தமது கார்களைத் திருப்பிக் கொண்டு வேகமாய் பறந்து மறைந்தனர்.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் அனைவரும் கூடினார்கள்.

கொலையாளிகள் யார்? மிகவும் இரகசியமாக வைக்கப்படும் ஜனாதிபதியின் நடமாட்டம் பற்றி எப்படி மோப்பம் பிடித்தார்கள்?

அதிகாரிகளுக்கு அடர்த்தியான குழப்பம். லெப்டினன்ட் கேணல் பஸ்தியான் தன் கை முஷ்டியால் மேசையில் ஓங்கிக் குத்தினார்.

"எங்கள் வெள்ளாட்டு மந்தையில் ஒரு கறுப்பு ஆடு. உள்ளேயே இருக்கிறது!"

"யெஸ்! யார்.....யார் அது?" இன்னொரு அதிகாரி அவசரக் குரலில் கேட்டார். லெப்டினன்ட் கேணல் இகழ்ச்சியாகப் புன்னகைத்தார்.

"கேட்பது சுலபம். கண்டுபிடிப்பது தான் சிரமம்! என்றாலும் பிடித்துவிடலாம், கண்டுபிடித்துவிடலாம்!"

"அதிபர் அகோரமான கோபத்தில் இருக்கிறார். கொலையாளிகளை மடக்குவது தாமதமானால் அவமானம் எங்களுக்குத் தான்!"

பொலிஸ் அதிகாரியொருவர் தொண்டையைச் செருமிச் சரிப்படுத்திக் கொண்டு, அதிகாரிகளை விழிகளால் சுற்றிப் பார்த்து விட்டு,

"ஒரு தகவல்! இன்று காலையில்தான் கிடைத்தது. உபயோகமாக இருக்கலாம். ஆராயவேண்டும்!"

அவர் சொல்ல லெப்டினன்ட் பஸ்தியான் ஆர்வமான குரலில், "தகவலை சொல்லுங்கள், நாமும் அறிவது உபயோகமல்லவா?"

"காரில் ஏறி தப்பிச் செல்லும் போது கொலையாளிகளில் ஒருவன் தனது காலை நொண்டியபடி. ஓடியிருக்கிறான்."

"ஓ.காட்! தங்கமான தகவலாச்சே!"

என்று உற்சாகம் கொட்டிய பஸ்தியானை அதிகாரிகள் ஆர்வமாக நோக்கினார்கள். பஸ்தியான் தொடர்ந்து சொன்னார்.

"அவனேதான், புத்திசாலி ராஸ்கல்! பயங்கரவாத நடவடிக்கைகள் என்றால் அவனுக்கு வெல்லம் சாப்பிடுவது மாதிரி! என்ன, இன்னுமா தெரியவில்லை, அவன் பெயர் பாஸ்கல்! அவனுக்கு ஒரு அமர்க்கள அழகான சகோதரி இருக்கிறாள், பெயர் மோணியா!"

ஒரு தகவல், ஒரேயொரு தகவல் அதனைவைத்தே அதற்குரியவனின் சாதகத்தையே சொல்லும் லெப்டினன்ட் கேணல் பஸ்தியானை சக அதிகாரிகள் ஆச்சரிய விழிகளுக்குள் வாங்கிக்கொண்டிருந்தார்கள்.

□□

பாஸ்கால் கைது செய்யப்பட்டான். சகோதரி மோணியாவும் விசாரிக்கப்பட்டாள்.

"அதிபர் டிகாலை நீதானே கொலை செய்ய முயன்றாய். கூட வந்தவர்கள் யார்? நல்லபிள்ளையாக நடந்து கொள்! அதுதான் உன் உடம்புக்கு நல்லது?"

மிரட்டப்பட்ட பாஸ்கால் சிரித்தான்.

"நல்ல கற்பனை! கதை எழுதக்கூடியவர்கள் விதிவசத்தால் பொலிஸ் வேலைக்கு வந்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன்!"

"யூ....ராஸ்கல்!"

"சும்மா துள்ள வேண்டாம் தலைவா! கொலையாளிகள் வெளியே சீட்டு விளையாடிக்கொண்டிருப்பார்கள். அல்லது தங்கள் காதலிகளிடம் எதையாவது தேடிக் கொண்டிருப்பார்கள். போய் பிடித்து வந்து உள்ளே தள்ளுங்கள். அது புத்தி!"

அவன் வார்த்தையில் தெளிவு இருந்தது. ஒரு குற்றவாளி இப்படி அலட்சியமாக, பதட்டமே இல்லாமல் இருப்பது சிரமம். அதிகாரியின் நெற்றி யோசனையால் சுருங்கியது.

## கிரைம் ஸ்பெஷல்

தொலைபேசி அழைப்பதாக வந்து சொன்னார் உதவியாளர்.

"இன்னும் யாராவது மொட்டைத் தலையன் கிடைப்பான் கொண்டு வந்து முழங்காலுடன் முடிச்சுப்போடப் பாருங்கள்."

என்றான் கேலியாக பஸ்கால். அதிகாரி சென்று தொலைபேசி ரிசீவர் எடுத்து,

"ஹலோ.....யார்...."

"அதிபர் டிகால் கொலை முயற்சி விசாரணைக்கு உதவ விரும்புகிறவன். என் பெயர் அனாவசியம். சொல்லும் விபரம் உங்களுக்கு அவசியம்!"

"சரி சொல்லு"

"விமான நிலைய வீதியில் உள்ள தங்குவிடுதிகளில் சமீபத்தில் வந்து தங்கிச் சென்றவர்கள் யார் யார் என்ற விபரங்களை திரட்டிவிட்டீர்களா சேர்?"

"இல்லை.....ஏன்?"

மறுமுனையில் தகவல் சொன்னவன் சிரித்தான். நிச்சயமாகக் கேலிதான்!

எங்கெங்கோ தடவிக்கொண்டிருக்கிறீர்கள். தேவையான இடத்தை மட்டும் துருவ மறந்துவிட்டீர்கள். பாவம் பாஸ்கால். அவன் பயங்கரவாதி என்பது ஓகே. ஆனால் இந்த விடயத்தில் அவன் அப்பாவி!"

"ரைட்! இதெல்லாம் உனக்கு..."

"எப்படித் தெரியும் என்று கேட்கிறீர்கள். உங்களுக்கும் தெரியவரும். போய் விடுதிகளில் ஆராயுங்கள். பதிவேடுகளில் மர்மம் துலங்கும்!"

□□

பாரிஸ் நகரில் துணிகரத் திருடன் ஒருவனை மடக்கினார்கள் பொலிசார்.

"வரேவா. இனி ஆயுள் முழுக்க உனக்கு சிறையில்தான் வாசம். எத்தனை திருட்டு. கூட்டிக் கழித்துப் பார்த்தாலும் உன் ஆயுள் காலத்துக்குப் பின்னரும் தண்டனை நீளுமப்பா!"

திருடன் வியர்த்துப் போனான்.

"ஐயா என்னிடம் ஒரு புதையலைப் போன்ற இரகசியம் இருக்கிறது. சொன்னால் எனக்கு மன்னிப்புக் கிடைக்குமா?"

"அட... அதென்னடா ராஜா இரகசியம்?"

"அதிபர் டிகால் கொலை முயற்சி பற்றிய பெறுமதியான தகவல்"

பொலிசார் அதிர்ந்து போனார்கள். அதிகாரிகளுக்கு தகவல் பறந்தது. வந்தார்கள்.

"சொல், தெரிந்தது அனைத்தும் சொல்! உனக்கு தண்டனையில் இருந்து விலக்குத் தரப்படும்."

"உண்மையாகவா?"

"யெஸ்! ஆனால் அதற்கு முன் ஒரு கேள்வி. இந்த மதிப்புக்குரிய இரகசியமெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது?"

திருடன் சட்டென்று சொன்னான்,

"கொலையாளிகள் இரு காரில் வந்தார்கள். அதிபர் காருக்கு பின்புறமாக ஒரு கார் வந்தது அல்லவா, அதை செலுத்தி வந்தது யார் என்று நினைக்கிறீர்கள்?"

"யார்?"

"நானேதான்!"

அதிகாரிகள் சுறுசுறுப்பானார்கள். திருடன் சொன்ன தகவல்கள் திருப்பமாக, 'ஆச்சரியம் ஆனால் நம்புங்கள் உண்மை' போன்ற ரகமாக இருந்தன.

□□

விமான நிலைய பாதையில் இருந்த விடுதிகளில் பொலிசார். விசாரித்தனர்.

திருடன் சொன்ன தகவலின்படி பெறப்பட்ட கேணல், லியோறி என்ற பெயர்களால் அழைக்கப்பட்டவரின் புகைப்படமும் பொலிசாரின் கையில் இருந்தது.

"இவர் இங்கு வந்து தங்கியதுண்டா?"

என்ற கேள்விக்கு பல விடுதிகளிலும் "இல்லை" என்று பதில் வர, ஒரேயொரு விடுதியில்,

"ஆம்", என்றார் பாதி மார்புகள் பார்வைக்கு தெரிந்த றிசப்சனிஸ்ட்.

"எப்போது?"

என்ற கேள்விக்கு பதிவேடுகளை குனிந்து புரட்டி குனிந்தபோது எதிரேயுள்ளவர்களை மேலும் அவஸ்தைப்படுத்திவிட்டு,

"ஆகஸ்ட் 21ம் திகதி; இவரோடு மேலும் சிலர் தங்கியிருந்தார்கள் சேர்." என்றாள் லிப்ஸ்டிக் மிகையாக இருந்த உதடுகளால்.

□□

லெப்டினன்ட் கேணல் பஸ்தியான் உற்சாகமாக இல்லத்தில் இருந்து புறப்பட்ட போது, உள்ளே பொலிஸ் படை புகுந்தது.

பஸ்தியான் விழிகளை உயர்த்திப் பார்த்தார்.

"ஏன்..என்ன..! பிடித்துவிட்டீர்களா?"

முன்னே வந்த அதிகாரி சொன்னார்,

"இல்லை, இனிமேல்தான் பிடிக்க வேண்டும்."

"சரி, இங்கே ஏன் வந்தீர்கள்?"


"குற்றவாளி இருக்குமிடத்தில்தானே பொலிசாருக்கு வேலையும் இருக்கும்."

"நீங்கள் என்ன சொல்கிறீர்...கள்?"

"லெப்டினன்ட் கேணல்....சே....இனி எதற்கு அது, மண்ணாங்கட்டி, மிஸ்டர் பஸ்தியான் நீங்கள்.....சே....நீ கைது செய்யப் படுகிறாய்!"

"எதற்கு?"

"அட... இது நல்ல கேள்வி! பதில் பொலிஸ் நிலையத்தில் பத்திரமாக



இருக்கிறது. அறிய ஆவலா? வா எம்மோடு!"

□□

கேணல், லியோறி என்ற பெயர்களில் நடமாடி தீவிரவாதிகளை திரட்டி, தேச பக்தியின் பெயரால் ஆட்சியை அமுக்க நினைத்தார் பஸ்தியான்.

நீதிமன்றம் பஸ்தியான் உட்பட அவரது குழுவில் எட்டுப் பேருக்கு மரணதண்டனை விதித்தது. 5 பேருக்கு சிறைத்தண்டனை.

கருணை மனுப் போட்டார் பஸ்தியான்.

"மன்னிக்கவே முடியாது" என்று விட்டார் அதிபர் டி கால்.

துப்பாக்கி முனை முன் நிறுத்தப் பட்டார் பஸ்தியான். வன்.டூ.திறி. டூமில்! மரணம் முத்தமிட்டது!

இன்னொரு இராணுவ அதிகாரி சிறையில் தற்கொலை செய்து கொண்டார்.

எல்லாம் சரி, பஸ்தியான் தவிர இன்னொரு சூத்திரதாரி இருந்தாரே! அவர் யார் என்பது மட்டும் இன்றுவரை அவிழாத புதிர்!

---

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ + விந்தைகள்

## நன்றாக உடல் இருந்தும் 'டல்லாக' இருப்பது ஏன்?

நன்றாக உடல் இருந்தும் 'டல்லாக' இருப்பது ஏன்?

கடுமையான உழைப்பு அல்லது நீண்ட பயணம் போன்றவற்றின் பின் சோர்வு தலைகாட்டுவது வழக்கம்தான்.

விடியும் வரை தூங்காமல் இருந்தாலும் சோர்வு வரும். தூங்காமல் இருந்ததுக்கு உற்சாகமான காரணங்கள் இருந்தாலும் விடிந்த பின்னர் சோர்வு வரத்தான் செய்யும். கவலைப்பட வேண்டாம்.

சுறுசுறுப்பாக இருக்க நினைத்தாலும் 'தூங்கினால்தான் சொர்க் கம்' என்று மனதுக்குள்ளே சோம்பல் சத்தம் போடுகிறது என்றால் அது கவலைப்பட வேண்டிய சமாச்சாரம்தான்.

தூங்கி எழுந்தாலும் மீண்டும் தூங்கும் மனநிலை இருந்து கொண்டே இருந்



தாலும் எங்கோ கோளாறு என்றுதான் அர்த்தம். இதனை மந்தப்போக்கு என்று அழைக்கிறார்கள்.

மந்தப் போக்கு கூடவே சில கோளாறுகளையும் கொண்டுவருகிறது.

அவை யாவை?

1. நினைவுச் சக்தி குறைந்து விடும்.
2. சாதாரண விஷயங்கள் கூட எளிதில் புரியாது.
3. முழு சேம்பேறித்தனம் காணப்படும்.
4. வேலை செய்வதில் நடமாடுவதில் மந்தத்தன்மை இருக்கும்.
5. முகத்தோற்றம் டல்லாக தெரியும்.

மந்தப் போக்குக்கு சில காரணங்கள் இருப்பதாக கண்டறியப் பட்டுள்ளது. அவை என்ன?

1. குளிர் காலத்தில் வெப்ப சக்தி குறைவதால், உடலிலும் வெப்பம் குறைகிறது. இதனால் உடல் இயக்கம் சோர்ந்து போகிறது. போர்வைக்குள் புகுந்து சுருண்டு கொள்ள ஆசை வருவதும் அதனால்தான்.

2. போதை மருந்து, சிகரெட் பாவிப்பவர்களுக்கும், அடிக்கடி தூக்க மாத்திரை உபயோகிப்பவர்களுக்கும் மந்தம் ஏற்படும்.

3. கடுமையான நோய்களும் மந்தத் தன்மைக்கு காரணம்.

சாதாரண மந்தப் போக்கை நாம் முயன்றால் சரிப்படுத்திவிடலாம்.

ஆனால், மந்தப்போக்குதானே என்று அலட்சியமாக இருப்பது ஆபத்து.

சில பெரிய வியாதிகளுக்கு முன்னறிவிப்புப் போலவும் மந்தநிலை ஏற்படுகிறது. தலைவலி, மயக்கம், வாந்தி, காய்ச்சல், போன்றவை பொல்லாத மந்தநிலைக்கு அறிகுறிகள். உடனே டாக்டரை நாடுவது நல்லது.

நீரிழிவு நோயும் மந்தப் போக்கு காரணமாக ஏற்படுகிறது. நீண்டநாள் மந்தப் போக்கும் நீரிழிவு நோய் வருவதற்கான முன்னேற்பாடுதான்.

ஒரிருநாள் மந்தப்போக்கு இருந்தால் பதறத் தேவையில்லை. தொடர்ந்து இருந்தால் அலட்சியம் நல்லதல்ல.

## உருமாறும் முட்டை

முட்டை சாப்பிடுவது உடலுக்கு பலம் என்பது தெரியும்.

வைட்டமின் சத்துக்களும், புரோட்டினும் முட்டையில் இருப்பதால் மருத்துவர்களும் முட்டைக்கு சிபாரிசு செய்கிறார்கள்.

முட்டையை நேராகச் சாப்பிடாமல் பலகாரங்களில் முட்டையைச் சேர்த்து 'பலே பலே' என்றும் சாப்பிடுகிறார்கள்.

இப்போது முட்டையில் ஷாம்புகளும் தயாராகிவருகின்றன. கூந்தலுக்கு ஆரோக்கியம் என்கிறார்கள்.

எப்படியோ முட்டைக்கு பலத்த மவுசு. அதனால் விலை கிடு கிடு வென்று உயருகிறது.

சரி, கோழி முட்டை கிடைக்காத இடத்தில் என்ன செய்வார்கள். கவலையே இல்லை. பாலை பவுடராக்கி பாக்கெட்டுக்களில் அடைத்துவிற்கிறார்கள் அல்லவா, அதே பாணியில் இப்போது முட்டையையும் பவுடர் செய்து பாக்கெட்டுக்களில் அடைத்து ஏற்றுமதி செய்யும் தொழில் வெளிநாடுகளில் ஆரம்பித்து விட்டது. சத்தான வியாபாரம்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# பாம்போடு விளையாடும் பாவை!
# நங்கையவள் நகம் பட்டால் நாசம்!

ஷஹ் ஸாதி ஸர்கா என்பதுதான் இந்த அழகியின் பெயர். வயது 17. பிறந்தது பாகிஸ்தானில். விரும்புவது பாம்புகளை. இதுவரை 30 பாம்புகளை வளர்த்து ஆளாக்கியிருக்கிறாள். அத்தனையும் கொடிய விஷப் பாம்புகள். பாம்புகளுக்கு செல்லம் அதிகம். அதனால் அடிக்கடி அவளைக் கடித்துப் பார்க்கின்றன. (அய்யய்யோ விஷம் ஏறுமே என்று பதறுவீர்களே) ஒரு விஷயம் தெரியுமா? பாம்பின் விஷம் ஏறாவிட்டால் இந்தப் பாவைக்கு தூக்கமே வராதாம். விஷம் சற்று அதிகமானால் பாம்பு கடித்த இடத்திலிருந்து உதடுகளால் உறிஞ்சி விஷத்தை எடுத்துவிடுவாள். அழகான பெண்ணாச்சே என்று அருகில் போக ஆசைப்பட்டு நெருங்கினால் நாசம் நிச்சயம். இவளது விரல் கீறல் பட்டாலே போதும், சாவு பிரியமாய் தழுவிக்கொள்ளும்.

அழகி தனது வாய்க்குள் பாம்புகளை விட்டு விளையாடும் காட்சியைக் காண கூட்டம் அலைமோதுகிறது. சேரும் பணத்தில் ஒரு பகுதியை காஷ்மீர் விடுதலைக்காகப் போராடும் கிளர்ச்சிவாதிகளிடம் கொடுத்துவிடுகிறாள்.

இவளது அப்பா என்ன சொல்கிறார் தெரியுமா? "இதென்ன பிரமாதம், இவள் பிறந்த உடனேயே ஊட்டி வளர்த்தது பால் என்றா நினைக்கிறீர்கள், தப்பு! பாம்பு விஷம்தான் ஊட்டி வளர்த்தோம்." நம்ப முடியவில்லையா? ஆனால் நங்கை வாழ்ந்து கொண்டுதானே இருக்கிறாள். பாம்புகள் அவள் வாயில் புகுந்து விளையாடும் காட்சியைப் படத்தில் காண்கிறீர்கள் அல்லவா?

# 14 மணி நேரம் பிரிவினைப் போராட்டம்



## தகவல் பெட்டி

சவுதி அரேபியாவில் றியாட்டில் இருக்கிறது கிங் ஃபெமிசால் ஸ்பெசலிஸ்ட் மருத்துவமனை.

மருத்துவமனையின் திறமைக்கு ஒரு சவால். ஒட்டியிருந்த இரட்டைக் குழந்தைகளை கருப்பையிலிருந்து பத்திரமாக மீட்கவேண்டும்

டாக்டர் அப்துல்லா அல்றபீ உட்பட 11 டாக்டர்கள், 18 சர்ஜன்கள் கூட்டமாகப் போராடியதில் பிரசவம் வெற்றி!

14 மணிநேரம் நீடித்த சத்திர சிகிச்சையால் ஒட்டியபடியே பிறந்த பெண் குழந்தைகள் இரண்டும் பிரித்தெடுக்கப்பட்டன.

சமார், சஹாரா என்று பெயர் வைத்துள்ளனர்.

இரண்டு குழந்தைகளுக்கும் ஆரோக்கியமான எடை கிட்டும்வரை எட்டு மாதங்கள் மருத்துவக்கண் காணிப்பில் இருக்க வேண்டும். கண்ணின் மணிபோல காப்பது என்பது இதுதானோ.

தகவல்: கே.குட்டி.

# கண்மணி அன்போடு-சௌக்கியமா-




பெற்ற பிள்ளைகளோடு பொழுதைக் களிப்பதில் பெற்றவர்களுக்குத்தான் எத்தனை பிரியம்! பிரியம் என்பது மனிதனுக்கு மட்டும் உள்ள சமாச்சாரம் அல்லவே. படத்தில் பெண் புல்டோக் தனது சூட்டிகைகளான இரு குட்டிகளுடன். முகம் முழுக்க குதூகலம்! "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு"

# ஆரம்பம் இங்கே ஆரம்பம்!

பின்புறமாய் வந்து குட்டி விமானம் சட்டென்று தழுவியதால் ஏற்பட்ட விபத்தோ என்று நினைத்தீர்களானால் தப்புக் கணக்கு.

குட்டி விமானம் போல இருப்பதுதான் விண்வெளிக் கலம். தானாக எழுந்து விண்நோக்கிச் சீறிப்போகும் ஆற்றல் அதற்கு கிடையாது. அதனால்தான் போயிங் 747 விமானத்தின் முதுகில் ஏறியிருக்கிறது. போயிங் எழுந்து வேகமாய்ச் செல்லும் போது அந்த வேகம் விண்வெளிக் கலத்திலும் தொற்றிக் கொள்ளும். வேகம் வந்ததும் போயிங்கிலிருந்து கழன்று கொண்டு விண்வெளிக்கலம் தனது பயணத்தை ஆரம்பித்து விடும். பிறகென்ன? விண்ணுக்குள் புகுந்து புதிர் அறிந்து பூமிக்கு செய்தியனுப்பும். ஆரம்ப கட்டத்தில் எடுக்கப்பட்ட படமே இங்கேயுள்ளது.



# உன்னோடு ஒரு போட்டோ

உலகில் உயர்ந்த மனிதன் ஹாஜி முஹம்மட் அலம் சன்னா. ஏழு அடி எட்டு அங்குலம் உயரம். பாகிஸ்தானில் சிந்து மாநிலத்தில் பிறந்த உயர்ந்த மனிதனுக்கு சாதாரண வாகனங்களில் பயணம் செய்ய முடியாது. முதுகெழும்பு முறிந்து விடும். அதனால் பெனாசீர் பூட்டோ நேரடியாக கவனித்து பிரத்தியோக வாகனம் ஒன்றைப் பரிசளித்தார். ஆனால் அந்த வாகனத்தில் கூட நிமிர்ந்து இருந்து பயணம் செய்யமுடியவில்லை. அதனால் இடுப்பில் பிடிப்பு வர அந்த வாகனத்திற்கும் ஒரு கும்பிடு போட்டுவிட்டார்.

இப்போது பாகிஸ்தான் விமான சேவையின் உதவியோடு இந்த உயர்ந்த மனிதன் மத்திய கிழக்கு நாடுகளுக்கு விசிட் அடித்திருக்கிறார். சவுதி அரேபியா பத்தாயிரம் ரியால் பணத்தை உதவியாக வழங்கியிருக்கிறது.

துபாய் நாட்டுக்கு போன சன்னாவுக்கு பிரமாதமான வரவேற்பு. அவரோடு சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொள்ள பலத்த போட்டி. சளைக்காமல் , களைக்காமல் அபிமானிகளோடு போட்டோ எடுத்துக் கொண்டார் சன்னா. அதில் ஒரு காட்சிதான் படத்தில்.




# ஒரு முறை ஒரே ஒரு முறை!

நடிகரும், இயக்குநருமான பாக்யராஜுக்கு ஒரு பழக்கம் இருக்கிறது. ஒருமுறை அணிந்த உடையை மறுமுறை தொடவே மாட்டாராம். அதனால் அவரது வீட்டில் உடைக் குவிப்பு காரணமாக நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பாக்யராஜ் தற்போது தீவிரமாக இருப்பது ஸ்ரீதேவியையும், அனில்கபூரையும் சரியான கோணத்தில் கடுவதில்.

அதாகப்பட்டது, கமராவால் கடுவதில்! கமராவை அவர் இயக்காவிட்டாலும் கோணம் சொல்வது இயக்குநரின் வேலை தானே. சரி, என்ன படத்துக்காக என்று சொல்லவில்லையே? 'வீட்ல விசேஷங்க' படத்தை மிஸ்டர் பேச்சரா என்ற பெயரில் இந்தியில் படுவேகமாக இயக்கிக் கொண்டிருக்கிறார் பாக்யராஜ். இந்தியில் பேச்சரா என்றால் தமிழில் என்ன அர்த்தம் அப்பாவி!



## பிரபுவின் புதிய படம்

'பொன் ஜுமனி' படத்தையும் தயாரித்தவர் ராஜாரவி. இவர் 'கஸ்தூரி மஞ்சள்' என்ற படத்தையும் இயக்கியுள்ளார். அடுத்து இவர் பிரபு நடிக்கும் படமொன்றை இயக்கித் தயாரிக்க விருக்கிறார். அடுத்த வருட ஆரம்பத்தில் இப்படத்தின் படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகும்.

# 'பம்பாய்' படம் கமல் பாய்ச்...


'பம்பாய்' பட இயக்குநர் மணிரத்னம் கமலின் உறவினர். கமலின் அண்ணன் நடிகர் சாருஹாசன் சுகாசினியின் கணவர்தான் மணிரத்னம் என்பதெல்லாம் தெரியும்தானே.

ஆனாலும் 'பம்பாய்' படம் பற்றி கமல் துணிச்சலாய் விமர்சித்திருக்கிறார்.

படத்தில் முஸ்லிம்களும் தாக்குதல் நடத்துவது போல சித்தரிக்கப்பட்டுள்ளது. அதுதான் ... பார்வையில் அடிபட்டிருக்கிறது.

கமல் என்ன சொல்கிறார்? "கலவரம் நடந்தபோது முஸ்லிம்கள் பயத்தோடு இருந்தார்கள். ... நானும் பம்பாய்க்குப் போயிருக்கிறேன். அங்கே நடந்த பிரச்சினைகளுக்காக பிரதமரிடமும் வாத... என்ன நடந்தது அரசாங்கம் எப்படிக் கண்ணை மூடிக்கொண்டு இருந்தது என்று பார்த்திரு...

என்று சென்னையில் நட... சொல்லியிருக்கிறார் கமல். மனதில் ... கமல் 'நாயகன்'தான்.



நாகார்ஜுன்-ராம்யாகிருஷ்ணன் படம்-எல்லாமே என் காதலி

## வெட்டியது...

பெரிய குடும்பம் பட... ஜோடியாக நடித்ததும் பி... சினி விசிட் வாசகர்க... பிரபுவும், குஷ்பு... காட்சிகளை வெ... ஒளித்துவிட்டார... பத்திரிகையா... கூடாதே ... காரணம...

## கோபம்...

செவாலியே... ரஜினிகாந்த ... தமிழக பத்தி... இது நடந்து ... அந்தப் ப... ரஜினி, "சிவா... விழாவில் ... இப்படியொரு... றையைப் ... சிவாஜி (மு... வாலியின் ... பான்னாடை... இப்படியிரு... சென்னை இரு... பத்திரிகையா... ரஜினி, இரண்...

## செவாலியே சிவாஜி ஆரம்பம் இது ஆரம்பம்

செவாலியே சிவாஜிகணேசன் இன்று இமயத்தின் உச்சியை தொட்டு அவரே இமயமாகியுமிருக்கிறார். இமயத்தைத் தொடும் அவரது பயணத்தின் ஆரம்ப படிக்கட்டுக்களை அடையாளம் காட்டுகிறார் அறந்தை நாராயணன். தமிழ் படவுலகை அடிமுதல் இன்றுவரை அறிந்தவர் அறந்தை நாராயணன். தமிழ் நாட்டவர்! சிறந்த படைப்பாளி!

திருச்சி சங்கிலியாண்டபுரத்தில் 'கட்டபொம்மன்' தெரு நாடகம் நடந்தது.

"வானம் பொழிகிறது பூமி விளைகிறது. மன்னவன் காணிக்கு ஏது கிஸ்தி?" நாடக கட்டப்பொம்மன் உணர்ச்சி பொங்க நடித்தார்.

சிறுவன் கணேசன் ரசிகர் கூட்டத்தில் மெய்மறந்து ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அன்று இரவு தூங்கவில்லை. கண்முன்னே கட்டப்பொம்மன் பெரிய மீசையோடு, 'நாடகத்தில் நடிக்க வேண்டும்' என்று கணேசனை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான்.

நடிகனாவதா? குடும்பத்தில் யாருமே நடிகர்கள் இல்லை. தந்தை சின்னையாபிள்ளை ரயில்வேயில் வேலை பார்த்து வந்தார். 1928 அக்டோபர் முதல் தேதி இந்தப் பையன் பிறந்த அன்று சின்னையாப்பிள்ளை வெள்ளையனை எதிர்த்து போராடி சிறை சென்றார். வேலையும் போயிற்று. குடும்பம் அடிக்கடி இடம்பெயர்ந்ததால் பையன் படிக்க முடியவில்லை.

குடும்பத்தின் சிரமமான நிலைமை சிறுவயதிலேயே 'ஏதாவது வேலை செய்ய வேண்டும்' என்ற நிலையைக் கணேசனுக்கு ஏற்படுத்தியது.

என்ன வேலை செய்வது? சின்ன வயது படிப்பும் இல்லை.

ராத்திரி முழுக்க கட்டபொம்மன் நடிப்பதற்கு கூப்பிட்டுக் கொண்டிருந்தான்.

நாடகக் கம்பனியில் சேரப்போகிறேன் என்றால் அப்பா சின்னையாபிள்ளையோ, அம்மா ராஜாமணியோ அனுமதிக்க மாட்டார்கள்.

வாத்தியார் யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளையின் மதுரைஸ்ரீபால கானசபா(மங்கள கானசபா) திருச்சியில் முகாமிட்டிருந்தது. கம்பனிக்கு வந்து சேர்ந்தான் சிறுவன் கணேசன்; வீட்டில் சொல்லிக் கொள்ளாமல்தான்.

கன்னிமாட சீதையாக (சின்ன சீதை)கணேசன் நாடக மேடையில் பிரவேசித்தான். அப்புறம் சூர்ப்பனகை! அப்புறம்.....ஒரே நாடகத்தில் முற்பகுதியில் கன்னிமாட சீதை, பிற்பகுதியில் சூர்ப்பனகை, கடைசி காட்சியில் இந்திரஜித்.

ஆச்சு ஆறு வருஷம். 'இறந்த காதல்' நாடகம் பொள்ளாச்சியில் நடந்து கொண்டிருந்த சமயம்: "கணேசா உன்னைப்பார்க்க யாரோ வந்திருக்காங்க"

ஒரு கையில் பையும், இன்னொரு கையில் சின்னப் பையனுமாக தாயார் ராஜாமணி அம்மாள். "உன் தம்பிடா! சண்முகம்னு பேரு! நீ ஓடிப்போனதுக்கப்புறம் பிறந்தவன்."

தீபாவளிப் பண்டிகைக்காக லீவுகேட்டு கணேசனை அழைத்துக் கொண்டு அம்மா திருச்சிக்குத் திரும்பினார்.

திருச்சியிலிருந்தபோது கணேசன் வீட்டிற்கு எம்.ஆர்.ராதா வந்தார். அவரது புதிய நாடகக் கம்பனியில் சேரும்படி கூட்டிக் கொண்டு போனார்.

எம்.ஆர்.ராதாவுடன் 'லட்சுமி காந்தன்' நாடகம். ராதாவின் கம்பனி கைமாறியதும் திருச்சிக்குத் திரும்பினார் கணேசன்.

நடிப்புக்கு முழுக்கு! திருச்சி ஸ்ரீரங்கம் டிரான்ஸ்போர்ட் பஸ் கம்பனியில் மெக்கானிக் வேலை செய்யத் தொடங்கினார்.

கும்பகோணத்தில் மறுபடியும் தனது நாடகக் கம்பனியை யதார்த்தம் பொன்னுசாமிப்பிள்ளை ஆரம்பித்தார். கணேசனைக் கூப்பிட்டார். மறுபடி நாடக வாழ்க்கை.

இந்த நாடகக் குழுவை அப்படியே என்.எஸ்.கிருஷ்ணன் வாங்கினார். என்.எஸ்.கிருஷ்ணன் சிறை செல்ல நாடக சபா பிளவுண்டது.

சி.என்.அண்ணாத்துரை எழுதிய 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' என்ற நாடகம் சென்னையில் பெரியார் தலைமையில் நடைபெற்றது. கணேசன் சிவாஜியாக நடித்தார்.

"இன்று முதல் கணேசன் சிவாஜி கணேசனாகி விட்டார்" என்று தலைமையுரையில் பெரியார் பாராட்டினார்.

சிவாஜிகணேசன் எப்படி திரையுலகில் நுழைந்தார்? அதுவும் ஒரு ருசிகரக் கதைதான். அறிய அடுத்தவாரம்வரை காத்திருக்கவும்.

## இருவரோடு ஆடுகிறார்.

'அசுரன்' படத்தில் ரோஜாவுக்கு அருண்பாண்டியனுடனும் பாடல் காட்சி இருக்கிறது. நெப்போலியனுடனும் பாடல் காட்சி இருக்கிறது. இது போதாதென்று வில்லன் மன்சூரலிகானுடனும் ரோஜா ஆடுவது போல் ஒரு காட்சியை எடுத்தால் என்னவென்று யோசிக்கிறாராம். யார்? படத்தின் இயக்குநரும் ரோஜாவின் இதயம் கவர் கள்வனுமான ஆர்.கே.செல்வமணி.

## மலையாள... தமிழ்ப் ப...

மலையாள... தயாராகிவரு... பிரபு மு... யாளப்படத்தி... பிரபுவுக்கு ... என்றால் ... தமிழில் பேசி...

இந்திய ... அந்தமான் ... கதைதான் ... கதாநாயகன்...

மோகன்... இந்திப்படம... ஒருவரான ...

தமிழ் மொ... போகிறது ... ரசிகர்களுக்... இருக்கிறது...

'தபு' ... நாயகிகள் ... ளார்கள். அது... இந்தி இறக்கு... விளைவுகளை... தான் தாங்க...

## பெ...


இந்தியா... ரீதியில் ... ஹொலிவுட... தொழில்நுட்ப... வந்துவிட்டன...

இந்திய ... வித்தைகாட்டு...

இந்திப் ... ஷாருக்கான் ... பெரிசு! தொ... இதுவும்!

## பசும்பொன் டவுன்

50 நாட்களின் பின்னர் வசூலில் தள்ளாடுகிறது 'பசும்பொன்'. சென்னை ...ல் மூன்று திரையரங்குகளில் பகல் காட்சியாக மட்டுமே ஓடிக் கொண்டிருக்கிறது. எப்படியாவது நூறு நாள் விழாவரை பகல் காட்சியாவது ஓடவேண்டும் ... ஓடி முடிக்கத் திட்டம்.



குஷ்பூ



ஷாருக்கான்

## குஷ்புவின் அன்பளிப்பு

தமிழில் தள, தள உடம்போடு வந்த குஷ்புவா இவர்? எப்போது இப்படி மெலிந்து போனார் என்று ஆச்சரியப்படுபவர்களுக்கு ஏமாற்றம் நிச்சயம்!

தமிழில் நடிக்க வரமுன்னரே இந்தித் திரைப்படங்களில் சின்னச் சின்ன வேசங்களில் தாராளமாக நடித்திருக்கிறார் குஷ்பு. தெலுங்கு, மலையாள, கன்னடப் படங்களிலும் வஞ்சகமில்லாமல் கவர்ச்சி காட்டி நடித்திருக்கிறார். அதற்கு சின்னதாய் ஒரு 'பளிச்' மேலே உள்ள படம்.

சரி, குஷ்பு பற்றி லேட்டஸ்ட் வம்பு ஏதாவது இல்லையா? என்று கேட்பவர்களுக்கு ஒரு பெறுமதியான கிசு, கிசு.

முறைமாமன் படத்தின் இயக்குநர் சுந்தருக்கு தனது சொந்தச் செலவில் (பலபல லட்சங்கள்) நன்னரக கார் ஒன்று அன்பளித்திருக்கிறார் குஷ்பு. விஷயமறிந்து சுந்தரின் மனைவி சூடாகியிருக்கிறார் என்று தகவல்.

## தேடி...

## திரையில் புதியவை

தமிழ்நாட்டில் திரைக்கு வந்து நமநாட்டில் வீடியோ கொப்பிகளாகவும் வந்துவிட்ட படங்கள்.

'அவதாரம்' (நாசர்-ரேவதி) 'ஏகலைவன்' (சுரேஷ் கோபி-கீதா) 'வில்லாதிவில்லன்' (சத்யராஜ்-நக்மா-ராதிகா) 'கிரீடம்' (நாகார்ஜுன்-ஸ்ரீதேவி)


www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

...சல்!
...மகன் சுகாசினி.
...விமர்சனப்
...நடத்தவில்லை.
...க்கிறேன். அங்கே
...விழா ஒன்றில்
...கோட்டுவதில்

...பாத்திரம்!
...தபு முதலில்
...தூக்கப்பட்டதும்
...செய்தி!

## முகப்பில்

செவாலியே சிவாஜிகணேசன்
—தபு—
(காலாபாணி கதாநாயகி)



விஜய்-இந்திராஜா
படம்-ராஜாவின் பார்வையிலே

## கார்த்திக் நடிக்கும் புதுசு.

கார்த்திக் நடித்து தற்போது ஓடிக்கொண்டிருக்கும் படம் 'நந்தவனத் தெரு' வசூலுக்கு பாதகமில்லை என்று தகவல்.

தற்போது கார்த்திக் புதிதாக நடிக்கும் படம் 'கட்டப் பஞ்சாயத்துக்காரன்' (நாட்டாமைப்பாணிப்படமோ?) மே 19ம் திகதி துவக்கவிழா நடைபெற்றது. ஜூன்மாதம் 2ம் திகதி படப்பிடிப்பு ஆரம்பமானது.

இசை, இளையராஜா. கார்த்திக் நடித்த 'விக்னேஷ்வர்' 'சின்னக் கண்ணம்மா' படங்களை இயக்கிய ஆர்.ரகு இயக்குகிறார். இவர் நடிகர் வி.கே.ராமசாமியின் மகன்.

## புடவை கட்ட ஆசை

கட்டழகைப் 'பளிச்' பண்ணும் பாத்திரமா? கூப்பிடு சங்கவியை என்னுமளவுக்கு சங்கவி தாராளமானவர். ஏதோ சென்சாரின் புண்ணியத்தால் கொஞ்ச ஆடைகளாவது மிச்சம் மீதி இருப்பதுண்டு. அதே சங்கவி சமீபத்தில் ஒரு பேட்டியில் சொன்ன கருத்து சின்ன வெடிகுண்டு வெடித்ததுபோன்ற அதிர்ச்சி. அப்படி என்ன சொன்னார் சங்கவி? "எனக்கும் புடவை கட்டி நடிக்க ஆசை" கவர்ச்சி ராணிகள் எல்லாம் இப்படி ஆசைப்பட்டால் துணிப் பஞ்சம் நிச்சயம்!

# சினி விசிட்

## பிஸி நடிகர்

தமிழ் நடிகர்களிலேயே இன்று மிக மிக பிஸியான நடிகர் விஜயகுமார்தான். இவரை விட்டால் அப்பா வேடத்திற்கு நடிக்க வேறு ஆட்கள் இல்லை. அத்துடன் விஜயகுமார் என்றால் விநியோகஸ்தர்களும் போட்டி போட்டு வாங்குகிறார்களாம்.

## ...தில் ரஜினிகாந்த்

...க்கு நடந்த பாராட்டு விழாவில் ...முதல்வரை கண்டித்தது போல ...அன்று செய்தி வெளியிட்டிருந்தது. ...மாதம் ஆகிவிட்டது.

...வருத்தமாக இருக்கிறார் ...திரைப்பட நகர் திறப்பு ...அழைக்கவில்லை. இப்போது ...விழாவை நடத்தி அந்தக் ...ர்கள்" என்றுதான் ரஜினி ...வெளிவந்திருந்தது) அதுதவிர ...கதா தமிழக முதல்வருக்கு ...போர்த்தினார்.

...தமிழக அரசியல் சர்ச்சையில் ...வேண்டும் என்று தமிழக ...காட்டமாகக் கேட்டாராம் ...தீராத கோபமோ?



தபு

## ...தமிழ் பேசும் பிரபு ...புது வரவு தபு!

...பெரும் பொருட்செலவில் ...'காலாபாணி' ...நேரடியாக மலை ...காலாபாணியில்தான். ...வேடம். என்ன ஒரு வசதி ...படமானாலும் பிரபு ...பாத்திரம் அப்படி. ...போராட்டக் காலத்தில் ...வாடிய தியாகிகள் பற்றிய ...மோகன்லால் தான்.

...ஜோடியாக நடிக்கிறார் ...கவர்ச்சிப் புயல்களில்

...'காலாபாணி' தயாராகப் ...'தபு' தமிழ்ப்பட ...கொக்கிபோட வாய்ப்பு

...பாவம், தமிழ்ப்பட ...ஓரம்கட்டப்படப்போகி ...தமிழ்ப்படவுலகில் ...போட்டியால் ஏற்படும் ...ரசிகர்கள் எப்படித் ...கிறார்களோ?


## ...ய....காது!

...உலகம் தொழிநுட்ப ...முன்னேறி வருகிறது. ...உலகைப் போல ...இந்தியாவிலும்

...தொழில் நுட்ப ...கிறது. ...இளம் நாயகன் ...பாருங்கள் எவ்வளவு ...ஜாலம்தான்

## ...த வசதி

...படத்தில் நடித் ...பல ...போறாமை ...கேட் ...நடித்தவுடன் ...எப்படி ...சோடு



படம் புள்ளகுட்டிக்காரன்
பார்த்திபன்

## மினி சினி

• ரஜினியின் 'அண்ணாமலை' பெரு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, 'அண்ணாமலை' படத்தின் முதல் படப்பிடிப்பு நடந்த ஏ.வி.எம்.ஸ்டூடியோவில் உள்ள பிள்ளையார் கோவிலில் 'வீரா' 'பாட்ஷா' போன்ற படங்களின் முதல் படப்பிடிப்பை நடத்தினார் ரஜினி. அண்மையில் 'முத்து' படத்தின் முதல் படப்பிடிப்பையும் அங்குதான் நடத்தினார்.

• 'ராஜபார்வை', 'தம்பிக்கு எந்த ஊரு' போன்ற படங்களில் கதாநாயகியாக நடித்த மாதவி இதுவரை 200க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். இவர் விரைவில் படமொன்றை இயக்குவதற்குத் திட்டமிட்டுள்ளார்.

• 'பம்பாய்' படத்திற்குப் பின் மணிரத்னம், சிரஞ்சீவி நடிக்கும் தெலுங்குப் படத்தை அல்லது மோகன்லால் நடிக்கும் மலையாளப்படத்தை இயக்குவார் என செய்திகள் வெளிவந்தன. வரும் ஓகஸ்டில் மணிரத்னத்தின் புதிய படம் ஆரம்பமாகவுள்ளது. கதாநாயகனாக மம்முட்டி நடிப்பார் என்று தெரிகிறது.

• 'ஆண்பாவம்' படத்தின் மூலம் அறிமுகமாகி, பார்த்திபனைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டு, நடிப்பதை நிறுத்தியிருந்த சீதா, மீண்டும் நடிக்கவுள்ளார். இவரது கணவர் பார்த்திபன் இயக்கி நடிக்கும் 'பரியமானவன்' படத்தில் கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

• தெப்போலியன், அனந்தபாபு நடித்த 'மணி-ரத்னம்' படத்தை இயக்கிய ஜெயபால், அடுத்து இயக்கும் படத்திற்கு 'கஜபதி' என்று பெயரிட்டுள்ளார்.

• சென்ற ஆண்டின் சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெறுபவர் வங்காள நடிகை தேவ்ஸ்ரீராய். இவர் பாண்டியராஜனின் 'மனைவிரெடி' படத்தில் பாண்டியராஜனுக்கு ஜோடியாக சிந்தாமணி என்ற பெயரில் நடித்தவர்.

• பாரதிராஜாவின் 'என்னுயிர்த்தோழன்' படத்தில் அறிமுகமாகி சில படங்களில் நடித்தவர் பாபு. 'பொண்ணுக்கு சேதி வந்தாச்சி' படப்பிடிப்பின் போது விபத்துக்குள்ளாகி பலகாலமாகச் சிகிச்சை பெற்று வரும் பாபு, மீண்டும் படங்களில் நடிக்கவுள்ளார்.

• 'பொன்விலங்கு' ரஞ்சித்-கீர்த்தனா ஜோடியாக நடிக்கும் 'நெஞ்சைத்தொடு' என்ற படத்தின் பாடல்கள் முழுவதையும் அமரர் கவியரசு கண்ணதாசனின் மகள் விசாலி கண்ணதாசன் எழுதியிருக்கிறார்.

• ராம்கி கதாநாயகனாக நடிக்கும் 'ஒன்பைடு' படத்தின் தயாரிப்பாளரான பிரசாத், 'ஒன்பைடு' படத்தில் தனது தங்கை திவ்யாஸ்ரீயை கதாநாயகியாக்கியுள்ளார்.

செம்மாதுளையோ பனியோ— மஞ்சுமோ
உன் சிரித்த முகமென்ன?
சிறு தென்னம் பாளை, மின்னல் கீற்று
வடித்த சுகமென்ன? — கவியரசு கண்ணதாசன்

...படத்தில் நடிப்பதற்கு முன் 'பட்டத்துராணி' ...டித்திருந்தார் ரவாலி. யாரும் கண்டு ...ர்த்தியில் விஜயகாந்துக்கு ஜோடி ...தான் கண்டு கொள்ளப்பட்டாராம். ...நடித்துவரும் படம் 'காந்தி பிறந்த ...விஜயகாந்த்!

## பாட்டுவாத்தியார் ரெடி

டி.பி. கஜேந்திரன் இரண்டு வருடங்களுக்கு முன்பு 'பாட்டு வாத்தியார்' என்ற படத்தைத் தொடக்கினார். பின் படம் நிறுத்தப்பட்டது. இப்போது படப்பிடிப்பு மீண்டும் தொடரப்பட்டு இறுதிக் கட்டத்தை அடைந்து விரைவில் வெளி வரவுள்ளது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# எப்படி கூந்தல் எப்படி?
## அணியும் ஆபரணம் அப்படி?

டியர்ஸ்.....

போன வாரம் யார் யார் என்ன கூந்தல் அலங்காரம் பண்ணிக்கொள்வதென்று பார்த்தோம். இப்போ அந்தந்த கூந்தல் அமைப்புக்கு ஏற்ப என்னென்ன அணிகலன்கள் அணியலாம் என்று பார்ப்போமா!

★ ஒற்றைச் சடை போடும் பெண்கள் மெல்லிய தங்கச் சங்கிலி+காதுகளில் கல்வைத்த குட்டி கம்மல் அணியலாம்.

★ போனி டெயில் போடுபவர்கள், காதுகளில் பெரிய வளையங்கள் அணிந்தால் அழகாக இருக்கும்.

★ இரட்டைச் சடை போடும் இளஞ் சிட்டுக்கள் காதுகளில் ஜிமிக்கி, அடுக்கு ஜிமிக்கி, தொங்கட்டான் போட்டால் மிகவும் அழகாக இருக்கும்.

★ 'டொப் நொட்' அதுதாங்க நதியா கொண்டை போடுபவர்கள் கல்பதித்த கம்மல், கல்செட், குட்டி நெக்லெஸ் அணிந்து வந்தால் கவர்ச்சியாக இருக்கும்.

★ 'பொப் அல்லது கூந்தலை அழகாக 'U' கட் பண்ணி விட்டு விடுபவர்கள் கழுத்திற்கு 'நெக் ஸ்கொட்ச்' எனப்படும்–அதுதாங்க 'நாய் பெல்ட்' மாதிரி வந்திருக்கே...நம்ம நடிகைகள் மீனா,



ரோஜா அணிவது போல் கழுத்தை ஒட்டி அணிந்து பாருங்களேன்... சூப்பரா இருக்கும் தெரியுமா?

இப்பவெல்லாம் இவ்வளவு அழகா 'டிரஸ்' பண்ண எங்க கத்துக்கிட்டீங்கன்னு உங்களைப் பார்த்து எல்லாரும் கேட்கிறாங்களா?

# முகத்தைப் பார்த்து புருவத்தைத் தீட்டு!

முகத்தை நன்றாக 'அழகு'படுத்தி விட்டு...அதன் மெயின் அட்ராக்ஷனான



புருவத்தை சரியா கவனிக்காம விட்டுட்டா எப்படி மிஸ்.! அதையும் அழகாக்க வேண்டாமா?

சிலருக்கு புருவத்தில் சுத்தமா முடியே இருக்காது. இவர்கள் இரவில் படுக்கச் செல்வதற்கு முன் சுத்தமான விளக்கெண்ணையை புருவம், இமைகளில் தடவி வந்தால் நாளடைவில் முடி கருகருவென வளரும்.

### இனி அழகு புருவம் பற்றி...

**நீள் வட்ட முகம்:** புருவம் லேசாக மேலேற வெளிப்புறம் கொஞ்சமாக கீழிறங்க வேண்டும். பார்ப்பதற்கு தூரத்தில் பறவை பறப்பது போல் இருக்க வேண்டும்.

**சதுர முகம்:** புருவ வளைவு அகன்று இருக்க வேண்டும். உள் பக்கமாக உள்ள முடிகளைத், தான் அகற்ற வேண்டும்.

**வட்ட முகம்:** புருவம் மிகவும் குட்டையாக இருக்க வேண்டும். பருமனாக ஆரம்பித்து, அடுத்தடுத்து சின்னதாக வர வேண்டும். வெளிப்புறம் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க வேண்டும்.

**நீளமான முகம்:** எவ்வளவுக்கெவ்வளவு நேராக, வளையாமல் இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது. புருவ முடிவில் மட்டும் சற்று வளைத்து விடுங்கள்.

**என்ன... உங்கள் முகத்துக்கேற்ற புருவத்தை 'சூஸ்' பண்ணிவிட்டிங்களா?**


# ஃபேஷன் ஸ்பெஷல்



## வெற்றிப் பெண்

ஜெர்மனில் மொடல் அழகிகள் பலர் இருந்தாலும் மகா பிரபலமானவர் கிளாவுடியா சிபெஃர். பாரிஸ் நகரில் மொடல் அழகிகளுக்கிடையில் நடந்த போட்டியில் கிளாவுடியாவின் கரத்தில் தவழ்ந்தது வெற்றிக்கனி. காரணம்: அசத்தலான கூந்தல் அலங்காரம். கிளாவுடியாவின் அழகுக்கு காரணம் என்ன?. கூர்ந்து பார்த்துச் சொல்லுங்கள். கவர்ந்திழுக்கும் கண்களா? அல்லது கவிந்திருக்கும் கூந்தலா?

# தூங்கலாமா?
## கொஞ்சம் தூங்கலாமா?



- கால்களை விறைத்துக்கொண்டு படுப்பது நல்லதல்ல.
- குட்டி, குட்டி தலையணைகளை கழுத்து, முழங்கை, முழங்கால்களில் வைத்துக் கொண்டு நன்றாக ரெஸ்ட் எடுக்கலாம்.
- கீழே படுத்துக்கொண்டு உங்கள் கால்களை கதிரை, சோபா மீது வைத்துக் கொண்டும் ஓய்வு பெறலாம்.
- இவ்வாறு செய்யும் போது இரத்தம் தலைக்குச் செல்வதால் மூளை நன்றாக வேலை செய்யும். சோர்வு பறந்து போகும்.
- ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையையும் உங்களது உடல் அழகு பெறும் நாளாகக் கருதி...அன்று நன்றாக உறங்கி, ஓய்வெடுத்து, சத்துள்ள உணவு உண்டு அழகு+ஆரோக்கியம் தரும் நாளாக கொண்டாடினால் அடுத்துவரும் திங்கட் கிழமையில் இருந்து உங்கள் நளாந்த வேலைகளை ஆரம்பிக்க எவ்வளவு ஜாலியாக இருக்கும் தெரியுமா?

ஹாய்.....

**இந்த அழகுக் குறிப்பு எல்லாருக்கும் பொதுவானது. இது உடல் அழகை மட்டும் தருவதல்ல. ஆரோக்கியத்தையும் தருகிறது. ஓ.கே..!**


- அழகாய் நாம் தோற்றமளிக்க வேண்டுமானால் போதுமான ஓய்வு தேவை. ஒவ்வொரு நாளும் உடல் கெஞ்ச.. கெஞ்ச.. வேலை செய்யக் கூடாது. உடம்புக்கு ரெஸ்ட் தேவை!
- நாம் உண்ணும் உணவை எல்லா பாகங்களுக்கும் ஊட்டும் செயல் நாம் தூங்கும் போதுதான் நடைபெறுகிறது. எனவே தூங்காமல் இருக்கக்கூடாது.
- பூனை மாதிரி சுருட்டிக் கொண்டு தூங்குவதுதான் நல்ல தூக்கத்திற்கு அடையாளம் தெரியுமா?
- அப்போதுதான் எலும்புகளும், தசை, நரம்புகள் அனைத்தும் துன்பமின்றி ஓய்வு பெறுகிறது.

### குட்டி விஷயம் ஒன்று!

உடல் அழகு பெற நினைத்து இந்த கோழித் தூக்கம், குட்டித்தூக்கம், வசதியற்ற படுக்கை உறக்கம் அல்லது செல்லத் தூக்கம் தூங்குகிறேன்என்று கிடைத்த இடத்தில் உறங்குவதால் எந்த பயனும் இல்லை! ஆழ்ந்த உறக்கமே நல்ல பலனைத் தரும்!

என்னது ! இந்த 'அழகுக்' குறிப்பை நான் சொல்றது க்குள்ள...'ஆ...வ...னு' கொட்டாவி விட்டுகிட்டு போறீங்களே... ஹலோ...ஓ...நீங்க நன்றாகத் தூங்கி அழகி+அழகனாக போறீங்களா.... அப்போ ஓ.கே. ஆ....வ..! அய்யோ! எனக்கும் தூக்கம் வருதுங்க..!

# ஸ்ரைலு ஸ்ரைலுதான் சூப்பர் ஸ்ரைலுதான்!



பெண்களுக்கான அழகுக் குறிப்பு மட்டும்தான் போடுவீர்களா? ஆண்களுக்கு அழகுக் குறிப்பு இல்லையா என்று கேட்டவர்களுக்காக இந்தவாரம் அழகர் பற்றிய குறிப்பு. (அடுத்தவாரம் அழகாகும் குறிப்பு கண்டிப்பாய் தரப்படும் சரிதானே)

40 வயதுக்கு மேற்பட்ட உலக ஆணழகர்களுக்கு 'மாஸ்டர்ஸ் ஒலிம்பியா' என்ற பெயரில் உலக ஆணழகன் போட்டி ஆண்டு தோறும் நடைபெற்று வருகிறது.

கடந்த ஆண்டு இறுதியில் அட்லாண்டா நகரில் நடந்த போட்டியில் 'மாஸ்டர்ஸ் ஒலிம்பியா' பட்டத்தை வென்றவர்தான் படத்தில் இருக்கிறார். (அடேங்கப்பா உடம்பா அது) வயது 48. அமெரிக்காவைச் சேர்ந்தவர். பெயர் ராபி றொபின்சன். சிறப்புப் பட்டம், கறுப்பு இளவரசன்.

# வீட்டுக் குறிப்புக்கள்

★ கத்தரிக்காயை நறுக்கும் போது கைவிரல்களில் கறை படிந்து நிறம் மாறிவிடும். இதைத்தடுக்க, கத்தரிக்காயை நறுக்குவதற்கு முன்பு கைகளில் கொஞ்சம் எண்ணெயைத் தடவிக் கொள்ள வேண்டும்.

★ எலுமிச்சம் பழத்தைச் சிறிது நெருப்பு அனலில் வாட்டி எடுத்துப் பிறகு பிழிந்தால், அதில் அதிக சாறு கிடைக்கும்.

★ இறைச்சி, மீன் போன்றவற்றைச் சந்தையிலிருந்து வாங்கி வரும் போது காகிதத்தில் சுற்றி வாங்கி வரக்கூடாது. இலையில் சுற்றி வாங்கி வர வேண்டும். இவற்றைக் காகிதத்தில் சுற்றி எடுத்து வந்தால் விரைவில் கெட்டுப் போய்விடும்.

★ சட்டைகளில் இருக்கும் ஸிப் (ZIP) களை இழுக்கவோ, மாட்டவோ கஷ்டமாக இருந்தால் அதன் இருபுறமும் மெழுகு அல்லது சோப்பு போட்டு தேய்த்து விட்டால் சுலபமாக இருக்கும்.

## சமைப்போம் சுவைப்போம் -தொகுத்துத் தருவது சுகந்தனி-

# உருளைக்கிழங்கு சிப்ஸ்

**தேவையான பொருட்கள்:**

உருளைக்கிழங்கு 1 கிலோ
நல்லெண்ணெய் - ½ லீற்றர்
மிளகாய்த்தூள் - ¼ தேக்கரண்டி
மஞ்சள் தூள் - சிறிதளவு
தேங்காய்த் துருவல் - சிறிதளவு
உப்பு - அளவாக

**செய்முறை:**

முதலில் உருளைக்கிழங்கை நீரில் கழுவி எடுத்துக் கொண்டு அதை அரை சென்றி மீற்றர் கனத்தில் வட்டவட்டமாக நறுக்கி எடுத்துக்கொள்ளுங்கள். தேங்காய்த்துருவலை வாணலியில் போட்டுப் பொன்னிறமாக வறுத்து எடுத்துக்கொள்ளுங்கள். வாணலியில் நல்லெண்ணெயை ஊற்றி உருளைக் கிழங்கைப் பொரித்து எடுத்து, வறுத்த தேங்காய்த் துருவல், மிளகாய்த்தூள், மஞ்சள் தூள், உப்பு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து. சூட்டோடு சூடாகக் கிளறிய பின், அதை ஆறவைத்துச் சாப்பிட்டுப் பாருங்கள். காற்றுப் புகாத ஒரு டப்பாவில் இதைப் போட்டு ஒரு மாதம் வரை வைத்துச் சாப்பிடலாம்.

# அசத்தலான போட்டி
## நெத்தியடியான சுவரொட்டி

"மகா ஜனங்களே! வணக்கம்.

எம்மிடம் ஒளிவு மறைவில்லை எங்களை நம்புங்கள். உங்கள் பொன்னான கரங்களால் அல்லது திருக்கரங்களால் கண்ணான வாக்குகளைப் போடுங்கள்." என்று அரசியல் வாதிகள் பலர் பேசக் கேட்டிருப்பீர்கள் தானே.

ஒளிவு மறைவில்லாதவர்கள் என்ற வாசகத்துக்கு எத்தனை அரசியல் வாதிகளுக்கு அர்த்தம் தெரிகிறதோ இல்லையோ ஜெர்மன் நாட்டு அரசியல்வாதி ஒருவர் அசத்திக் காட்டிவிட்டார்.

அப்படி என்னதான் செய்தார்? பெரிதாக ஒன்றுமில்லை. நேராக ஒரு புகைப்பட ஸ்ரூடியோவுக்கு போனார். உடம்பில் இருந்த சகல துணிகளையும் கழற்றி ஓரமாக




வைத்துவிட்டு ஒரு போட்டோ எடுத்தார். பின்னர் அந்தப் போட்டோவை வைத்து சுவரொட்டி தயாரித்து அதில் ஒரு வாசகத்தை தடித்த எழுத்தில் போட்டார்.

அந்த வாசகம் கீழே;

**"என்னிடம் மறைக்க எதுவுமில்லை!"**

அந்தக் கில்லாடி அரசியல்வாதியின் பெயர் தாமஸ்கிருகர். போட்டியிட்டது ஜெர்மன் செனட் தேர்தலில். போஸ்டரின் முன் எக்கச்சக்க கூட்டம். போஸ்டரில் எதையும் மறைக்காத தாமஸைப் பார்த்து யார் கலங்கினார்களோ இல்லையோ போட்டி வேட்பாளரான பெண்மணி கிறிஸ்டி கதிகலங்கிப் போனராம். ஆனாலும் தாமஸின் போட்டோவை உற்று உற்றுப் பார்த்துவிட்டு அதிரடி அறிக்கை ஒன்று விடுத்தார் கிறிஸ்டி!

"மீசை, தாடியுடன் இருக்கிறார் தாமஸ். ஆனால் உடம்பில் கொஞ்சம்கூட முடியில்லையே ! ஆக இந்தப் படம் ஒரு ஒட்டு வேலை" என்று விட்டார் கிறிஸ்டி.

**பரிசுக் கூப்பன்**
**மகளிர் மட்டும்**
**இல 18**

# மகளிர் மட்டும்
## –பரிசுப் போட்டி–

### முதல் அதிஷ்டசாலிக்கு
# தங்க நகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.






## ஆசை

கடலுக்கு
அலைமீது.....
ஆசை!

★★

காதலிக்கு
கடிதம் மீது
ஆசை!

★★

இரவிற்கு
நிலவுமீது.....
ஆசை!

★★

விடியலுக்கு
பனித்துளி மீது...
ஆசை!

★★

காற்றுக்கு
இலைமீது.....
ஆசை!

★★

பகலிற்கு
சூரியன் மீது......
ஆசை!

★★

உடலுக்கு
உயிர்மீது......
ஆசை!

★★

உஷ்ணத்திற்கு
வியர்வைமீது....
ஆசை!

★★

நிர்வாணத்திற்கு
உடைமீது....
ஆசை!

★★

பெண்ணே.....!
என் இதயத்திற்கு
மட்டும்.....ஏன்?
உன்மீது......ஆசை!

**வி.சுதாகர், அக்கரைப்பற்று-08**

## இதுதான் வாழ்க்கையா

அந்நிய மண்ணில் அகதிகள் நாங்கள்
அடிமைகள் ஆனோம், அநாதரவானோம்
பண்ணிய பாவம் யாரறிவாரோ?
படுகுழி மேலே எங்கள் வாழ்க்கை!

□□

உள்ளே ஓடும் இரத்தம் சிவப்பு
இறைவன் படைப்பில் இதுதான் பொதுமை
தோலின் நிறங்கள் வெள்ளையாய், கறுப்பாய்
ஏனோ படைத்தான்? இதுதான் வேற்றுமை!


□□

கறுப்புத் தோலை வெறுப்பாய் பார்க்கும்
வெள்ளைத் தோல்கள் இதுதான் பேதமை
இது தான் வேதனை எமக்குள் என்றும்!

□□

எங்கள் நாட்டில் வாழப்பயந்தோம்
வெளியே போனோம் சீவன் காக்க
சீவியம் பண்ண வந்தோமென்று
சீறிச் சினந்தும், மற்றவர் எம்மை
எட்டி உதைக்கும் நிலைதான் இங்கு!

□□



### வெளிநாட்டிலிருந்து குமுறு ம் குரல் கேளுங்கள்!

ஏங்கி ஏங்கி வாழ்கிறோம் நாமே
எங்கள் தம்பி எங்கள் அண்ணா
எங்கள் உறவினர் வெளியே என்று
பெருமை பேசி வாழும் எங்கள்
உறவுகள் தன்னை எண்ணிட வேதனை

□□

'கோலில்' பேசி காசை வாங்கி
காலங் கழிக்கும் உறவுகள் ஒருபுறம்
காலில் வீழ்த்தும் பேரம் பேசி
காசை வாங்கி வீட்டை வாங்கி
செருப்பிற் கீடாய் எம்மை ஆக்கும்
பெற்றோர் சிலரும் இங்கே மறுபுறம்!

□□

கம்பளிப் போர்வைகள் தஞ்சம் என்று
வாழும் எங்கள், கூட்டுப் புழுக்கள்
போன்ற வாழ்க்கை
யாரறிவாரோ? யாரிடம் சொல்வோம்?

□□

இதுதான் உலகம்
இதுதான் வாழ்க்கை
என்றேயானால்
என்னே செய்வோம்

**எஸ்.கோபாலகிருஸ்ணன்.**

## கல்லறைகள்

பேய்
பிசாசு
சாத்தான்களின்
சர்வகலாச்சாலைகள்!

□□

நரி
வௌவால்
ஓநாய்களின்
ஓய்வறைகள்!

□□

ஆடியடங்கிய
மனிதன்
நீண்டுறங்கும்
நித்தலம்!

□□

கல்மனம்
படைத்த மனிதன்
கல்லிற்கடிமையானதன்
தத்துவம்!

□□

ஆறாவதுமாடியில்
ஆனந்தமாய்......
வாழ்ந்தவன்
ஆறடிநிலத்துக்குள்
அமைத்த....
நிலக்கீழ்மாடிகள்!

□□





காதலில்
தோல்வியுற்றவர்கள்
தங்களுக்கு(த்)
தாங்களே.....
கட்டிக் கொண்ட
தாஜ்மஹால்கள்!

□□

ஆண்டானும்
அடிமையும்
அடுத்தடுத்துறங்கும்
பொதுவிடம்!

□□

நிரந்தரமாய்
நித்திரையானவர்களின்
சுயமுகவரிப் பதித்த(ச்)
சுவர்கள்!

□□

நானும்
நீங்களும்
"நாளை"
நிரந்தரமாய்......
நீண்டுறங்கும்
நினைவாலயங்கள்!

**சோ.ஸ்ரீதரன்-பொகவந்தலாவை.**

## தோல்வி

புதையலெடு - நான்
புதை குழியில்
அழுது தொலைக்கிறேன்.

***

எல்லாப் பக்கமும்
இருட்டு
கிழக்கிலும்கூட
சூரியனில்லை.
இதயத்தில் மாத்திரம்
உன்னை வைத்துக் கொண்டு
எப்போது நான்
உயிர்த்தெழப் போகிறேன்.

***

எனக்கு மாத்திரம்
நிரந்தர அழுகை
எந்த முனிவனின்
சாபத்துக்காக

***

கவலைப் புதைகுழியில்
காணாமற் போன எனக்கு
கண்ணீர் தான் விதியா.

***

பொறுத்தது போதும்
பூங்குயிலே—என்னை
புதையலெடு
நான்
புதைந்து போக முன்பு




**-அம்தரவல்ல நிலாவாசன்-**

## கத்தரித்த கடி ஜோக்ஸ்







**சைக்கிள்காரர்:** எதுக்கு அபராதம் கட்டணும்?
**பொலிஸ்காரர்:** சைக்கிள்ல பிரேக், பெல், விளக்கு இல்லாம போனதுக்கு.
**சைக்கிள்காரர்:** சைக்கிளே இல்லாம போறாங்களே சேர், அவங்களுக்கு அபராதம் இல்லியா?

□□

**நீதிபதி:** பிக்பாக்கெட் அடிச்ச குற்றத்திற்காக உனக்கு 500 ரூபா அபராதம் விதிக்கிறேன்.
**குற்றவாளி:** ஒரு அரை மணிநேரம் வெளியே விடச்சொல்லுங்க...வந்து கட்டிடறேன்.

□□

**அவர்:** சர்வர் தம்பி! ரெண்டு தோசை ஒரு வடை ஒரு காப்பி, அல்லது 2 வடை ஒரு தோசை 2 காப்பி, அல்லது ஒரு வடை ஒரு தோசை ஒரு காப்பி, இதில எது பில் குறைவா வருமோ அந்த செட் கொண்டாப்பா...
**சர்வர்:** ஐயா நீங்க 'விசு' ரசிகர்தானே!

□□

**நோயாளிகள்:** காலில்தானே ஒப்பரேசன் செய்தீங்க. கன்னத்தில் எப்படி காயம் பட்டிருக்கு?
**டாக்டர்:** ஓ..அதுவா, உங்களுக்கு மயக்கம் தெளிஞ்சிருச்சான்னு பார்க்க நர்ஸ் உங்களை கிள்ளிக் கிள்ளிப் பார்த்தாங்க. அதுதான்..!

□□

**நிருபர்:** உங்கள் கூந்தல் மணம் இயற்கையா? செயற்கையா?
**நடிகை:** என் கூந்தலே செயற்கைதானே!

## நிகழ்கால ஏக்கம்

இருளில் நிற்கின்றோம்
இன்னமும் விடியவில்லை
உடன்பிறப்பைக் காணவில்லை
உணர்விழந்து துடிக்கின்றோம்.

***

பிணங்களில் நடக்கின்றோம்
பிரிவுகள் ஓயவில்லை
நிகழ்வுகள் புரியவில்லை
நிம்மதி நீங்கினோம்

***

சரித்திரம் இழந்தோம்
சண்டைக்கு முடிவில்லை
ஏவும் திசையில் அம்புபோல்
ஏங்கித் தவிக்கின்றோம்

***

வழி தேடி ஓடுகின்றோம்
விழி மூட நேரமில்லை
சமாதானத்தைக் காணவில்லை
சக்தியிழந்து முடங்கினோம்



எரிந்து போன எங்கள்
வாழ்வு எப்போ மாறும்
பிரிந்து போன பந்தங்கள்
எப்போ ஒன்று சேரும்?

**ஆரையம்பதி மனோ- ஆரையம்பதி கிழக்கு**



## பண்டிதர் பாஷை

தமிழ் பண்டிதர் ஒருவர் ஒரு பெண்ணுடன் பஸ் நிலையத்தில் நிற்கிறார். ஒருவர் அந்தப் பெண்ணைப் பற்றி விசாரிக்கிறார்.

"இது அக நானூறா? புற நானூறா?"

**பண்டிதர்:** புறநானூறுதான் அக நானூறு வீட்டிலிருக்கு.



## இந்த வாரம் உங்கள் பலன்

(25.06.95 முதல் 01.07.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| **ஞாயிறு-** முயற்சி பலிதம், காரியானுகூலம் | பி.ப. 1 மணி |
| **திங்கள்-** தொழில் சிறப்பு, கௌரவம். | காலை 7 மணி |
| **செவ்வாய்-** காரியசித்தி, பொருள்வரவு. | பி.ப. 2 மணி |
| **புதன்-** மனக்கவலை, பணத்தட்டுப்பாடு. | காலை 6 மணி |
| **வியாழன்-** பயனற்ற செயல், மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| **வெள்ளி-** உயர்ந்த நிலை, அந்நியர் நட்பு. | காலை 6 மணி |
| **சனி-**செய்தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-1**

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு-** பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| **திங்கள்-** புதிய முயற்சி, கௌரவம். | பகல் 11 மணி |
| **செவ்வாய்-** செலவு மிகுதி, மனக்கவலை. | காலை 6 மணி |
| **புதன்-** அந்நியர் நட்பு, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| **வியாழன்-** வெளியிட வாழ்க்கை, பிரயாணம். | காலை 6 மணி |
| **வெள்ளி-** துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| **சனி-** பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன் அதிஷ்ட இலக்கம்-2**

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| **ஞாயிறு-** தொழில் விருதி, பணவரவு. | பகல் 12 மணி |
| **திங்கள்-** பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| **செவ்வாய்-**உறவினர் உபத்திரவம், கௌரவக் குறைவு | காலை 9 மணி |
| **புதன்-** பணக்கஷ்டம், காரியத்தடை. | பகல் 12 மணி |
| **வியாழன்-** உயர்ந்த நிலை, பெரியோர் அனுகூலம். | காலை 6 மணி |
| **வெள்ளி-** முயற்சி தடை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| **சனி-** பணவரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3**

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு-** அந்நியர் உதவி, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| **திங்கள்-** பொருள் வரவு, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| **செவ்வாய்-** வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | காலை 7 மணி |
| **புதன்-** உறவினர் பகை, மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| **வியாழன்-** வீண்விரயம், முயற்சி தடை. | காலை 6 மணி |
| **வெள்ளி-** பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| **சனி-** பிரயாச மிகுதி, பணவரவு. | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5**

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு-** தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| **திங்கள்-** உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| **செவ்வாய்-** காரிய சித்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| **புதன்-** துன்பம் நீங்கும், பெரியோர் நட்பு. | பி.ப. 1 மணி |
| **வியாழன்-** மனக்கலக்கம், புதிய முயற்சி. | காலை 6 மணி |
| **வெள்ளி-**காரிய சித்தி, உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| **சனி-** வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4**

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன, புதன், வெள்ளி |
| சிம்மம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |

★ சந்திரன்-மேடம்,இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| **ஞாயிறு-** துன்பம் நீங்கும், பணவரவு. | பகல் 12 மணி |
| **திங்கள்-** வீண் மனஸ்தாபம், வெளியிடப் பயணம் | காலை 7 மணி |
| **செவ்வாய்-** பயனற்ற செயல், மனக்கவலை. | பி.ப. 1 மணி |
| **புதன்-** பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| **வியாழன்-** இடப்பிரிவு, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| **வெள்ளி-** புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| **சனி-** வீண் விரயம், அநறியர் நட்பு. | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4**

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| **ஞாயிறு-** காரிய சித்தி, பொருள வரவு. | காலை 7 மணி |
| **திங்கள்-** துன்பம் நீங்கும், பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| **செவ்வாய்-**எதிர்பார்த்த நன்மை, உறவினர் பகை. | காலை 6 மணி |
| **புதன்-** மனக்குறை நீங்கும், கௌரவக் கேடு. | மு.ப. 10 மணி |
| **வியாழன்-** வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| **வெள்ளி-**பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 6 மணி |
| **சனி-** புதிய முயற்சி, பணத்தடை. | காலை 7 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -5**

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு-** பொருள் வரவு, காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| **திங்கள்-** துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| **செவ்வாய்-**மனக்கவலை நீங்கும், பயனுள்ள செயல். | பகல் 11 மணி |
| **புதன்-** தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| **வியாழன்-** அந்நியர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| **வெள்ளி-** மனக்கவலை, வைத்தியச் செலவு. | பகல் 12 மணி |
| **சனி-** தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9**

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு-** பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| **திங்கள்-** மனக்கலக்கம், அந்நியர் நட்பு. | காலை 6 மணி |
| **செவ்வாய்-** தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 10 |
| **புதன்-** துயர் நீங்கும், வெளியிட வாழ்க்கை. | மணி |
| **வியாழன்-** பயனற்ற செயல், தொழில் கேடு. | காலை 7 மணி |
| **வெள்ளி-** பெரியோர் உதவி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| **சனி-** காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3** பகல் 12 மணி

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| **ஞாயிறு-** தொழில் விருத்தி, காரியசித்தி. | காலை 6 மணி |
| **திங்கள்-** வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| **செவ்வாய்-** காரிய சித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| **புதன்-** வீண்விரயம், காரியத் தடை. | பி.ப. 2 மணி |
| **வியாழன்-** பெரியோர் உதவி, உத்தியோகச் சிறப்பு. | பி.ப. 1 மணி |
| **வெள்ளி-** மறைமுக எதிரி, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| **சனி-** உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-சனி, அதிஷ்டட இலக்கம்-8**

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு-** பெரியோர் உதவி, காரியாநுகூலம். | காலை 7 மணி |
| **திங்கள்-** வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| **செவ்வாய்-** மனக்கலக்கம், உறவினர் பழி. | காலை 6 மணி |
| **புதன்-** பெரியோர் நட்பு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| **வியாழன்-** முயற்சி பலிதம், உத்தியோக முயற்சி. | காலை 7 மணி |
| **வெள்ளி-** வீண் மனஸ்தாபம், அந்நியர் சகவாசம். | காலை 6 மணி |
| **சனி-** மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 4**

### கன்னி: சுப நேரம்


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| **ஞாயிறு-** பொருள் வரவு, காரிய சித்தி. | மு.ப. 1 மணி |
| **திங்கள்-** வீண் விரயம், செல்வாக்கு மிகுதி. | காலை 7 மணி |
| **செவ்வாய்-** காரிய சித்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| **புதன்-** துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| **வியாழன்-** அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| **வெள்ளி-** தொழில் சிறப்பு, பயனற்ற செயல். | காலை 6 மணி |
| **சனி-** உறவினர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்






## பாப்பா முரசு

பாப்பா முரசு-
பாலர் எமக்காய்
கோப்பாய் அமைத்து;
கொட்டும் முரசு!

கதைகள்; கவிதை
கருத்துச் செறிந்த
புதையல், அமுதாய்
புகட்டும் முரசு!

சின்னக் கதைகள்
சிரிப்புக் குவியல்....
வண்ணக் கலவை
வழங்கும் முரசு!



இளமை நினைவை
இனிமை சேர்த்து
வளமாய் சுவையாய்
வழங்கும் முரசு!

வளரும் பயிராம்,
வாரிசு எம்மை
தளரா நிலையில்
தாங்கும் முரசு!

அறிவோம், புரிவோம்,
அறிவு பெறுவோம்
செறிவாய் எமக்கு
கொட்டு முரசே!

— செல்வி: சிரின் சிபாயா முகமட்-ஏறாவூர்-03. —

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்.
விழலுக்கு நீர் பாய்ச்சி மாயமாட்டோம்-வெறும்
வீணருக்கு உழைத்துடலம் ஓயமாட்டோம்.

சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறு கதை



# மிலுக்காவின் நாட்டுப் பற்று.

முற்காலத்தில் ஆபிரிக்காவில் இரண்டு வகையான மக்கள் வசித்தனர். என்ன காரணம் என்று அறியாமலே அவ்விரண்டு மக்களும் ஒருவர் மீது ஒருவர் பகையுடன் வாழ்ந்தனர். ஒருவர் நாட்டை மற்றவர் அபகரிக்கத் திட்டம் தீட்டினர்.

ஒரு பிரிவிலுள்ள மக்களுக்குத் தலைவனாக இருந்தான் மிலுக்கா. அவன் வசிக்கும் பகுதி சிறியதாக இருந்தது. அதுபோல மக்களின் பெருக்கமும் குறைவாக இருந்தது. அதனால் அங்கிருந்த பிரிவு நாட்டை எப்படியும் பிடித்து தன் நாட்டின் பரப்பளவை அதிகப்படுத்த விரும்பினான் மிலுக்கா.

அடுத்த பிரிவு நாடு பெரியதாக இருந்தது. மக்கள் தொகையோ அதிகமாக இருந்தது. அத்தோடு இயற்கை வளங்களும் குறைந்து நாடு செழிப்பற்று இருந்தது. மக்கள் அதிகமாக இருந்து-உணவு விளைச்சல் குறைவாக இருந்ததால் பஞ்சம் வந்துவிடும்போல் இருந்தது. அதனால் அந்தப் பிரிவு நாட்டுத் தலைவனான உலூக்கா, மிலுக்கா ஆளும் நாட்டைப் பிடிக்க போருக்குத் தயாரானான்.

மிலுக்கா நாட்டுப் படையும், உலூக்கா நாட்டுப் படையும் மோதின. உலூக்கா நாட்டுப்படை வீரர்கள் அதிகமாக இருந்தும் உடலில் போதிய உணவு சாப்பிட்டுச் சக்தியோடில்லாததால் மிலுக்கா நாட்டுப் படையை வெற்றி கொள்ள முடியாது திணறினர். அவர்களால் மிலுக்கா நாட்டு படையினரில் சிலரையே கொல்ல முடிந்தது.

ஏற்கனவே மிலுக்காவின் நாட்டில் சனத்தொகையே குறைவு. போரில் வீரர்கள் மடிந்து கொண்டு வந்ததால் நாட்டில் வீரர்கள் கிடைக்காது போய்விடுவார்களோ என்ற பயம் மிலுக்காவுக்கு ஏற்பட்டது.

மிலுக்கா இயற்கையில் ஒரு வைத்தியன். காடுகளில் வளரும் மூலிகைகளின் குணம் அறிந்தவன். அவன் அபூர்வமான சில மூலிகைகளைக் கஷ்டப்பட்டுத் தேடிப்பிடித்து, ஒரு களிம்பு மருந்து தயாரித்தான். அந்தக் களிம்பு மருந்து ஒரு அபூர்வ சக்தி வாய்ந்தது. போரில் காயமுற்ற வீரர்களின் காயங்களின் மீது அந்தக் களிம்பைத் தடவினால் போதும் காயங்கள் உடனே மாறிவிடும். போரில் இறந்து போன வீரர்களின் மூக்கினுள் அந்தக் களிம்பைத் தடவினால் சிறிது நேரத்திற்குள் தூங்கி எழுந்தது போல உயிர் பெற்று விடுவார்கள்.

இப்படிப்பட்ட அபூர்வ மருந்தை மிலுக்கா கண்டுபிடித்து விட்டதால் அவன் படையில் வீரர்களின் எண்ணிக்கை ஒரே சீராக இருக்க ஆரம்பித்தது. அதனால் உலூக்கா நாட்டுப் படைவீரர்களை எதிர்த்து நிற்க முடிந்தது.

உலூக்கா சின்னஞ் சிறிய மிலுக்கா நாட்டைப் பிடிக்க முடியாமல் திணறினான். போரில் மிலுக்கா நாட்டுப் போர்வீரர்கள் காயமுற்றும், மரணமடைந்தும்கூட அவர்கள் எண்ணிக்கை ஒரே சீராக இருக்கிறதே, என்று ஆராய்ந்தான் உலூக்கா.

அப்போது, மிலுக்கா ஓர் அபூர்வ சக்திவாய்ந்த மருந்து தயாரித்திருப்பதையும், அந்த மருந்தைக் கொண்டு படுகாயமுற்றவர்களை அடுத்த கணமே குணப்படுத்தி விடுவதாகவும், இறந்தவர்களை உயிர்ப்பிப்பதாகவும் அறிந்தான் உலூக்கா.

தனக்குப் பிறகு அந்த மையைத் தயாரிக்கும் ரகசியத்தைத் தன் மகன் ஒகாயாவுக்குச் சொல்லிக் கொடுத்த மிலுக்கா, மகனை அழைத்துக் கொண்டு, மூலிகைகளைச் சேகரித்து வரக் காட்டிற்குச் சென்றான்.

மிலுக்காவும், ஒகாயாவும் மூலிகைகளைச் சேகரித்துக் கொண்டிருந்த பொழுது உலூக்கா நாட்டுப் படைவீரர்கள் அவர்கள் இருவரையும் பிடித்துச் சென்று, உலூக்கா முன் கொண்டு போய் நிறுத்தினார்கள்.

"மிலுக்கா! உனக்கும், உன் மகன் ஒகாயாவுக்கும் காயமுற்றவர்களைக் குணமாக்குகின்ற, இறந்தவர்களை உயிர்ப்பிக்கின்ற அபூர்வ மருந்து தயாரிக்கும் ரகசியம் தெரியும். அதை நீங்கள் எனக்குத் தெரிவிக்கிறவரை உங்களை நான் விட மாட்டேன், சொல்லுங்கள்" என்றான் உலூக்கா.

"நீ எங்களை என்ன செய்தாலும் நாங்கள் சொல்லமாட்டோம்" என்று மிலுக்காவும், ஒகாயாவும் உறுதியாகச் சொன்னார்கள்.

அவர்களை சித்திரவதை செய்து பார்த்தான் உலூக்கா. அப்படியும் அவர்கள் சொல்ல வில்லை.

"சரி, உங்களை நான் அணு அணுவாக வெட்டிக் கொல்லப்போகிறேன்" என்றான் உலூக்கா.

இதைக் கேட்டதும் சிறுவனான ஒகாயா பயந்து விட்டான். அவன் பயப்படுவதை அறிந்து விட்டான் மிலுக்கா. மருந்து தயாரிக்கும் இரகசியத்தை எங்கே சொல்லிவிடுவானோ என்று அஞ்சினான் மிலுக்கா.

அதனால் உலூக்காவை தனியாக அழைத்து, "மருந்து தயாரிக்கும் ரகசியத்தை நான் கூறுவதானால், நான் உனக்குக் கூறுவது என் மகனுக்குக் கூடத் தெரியக்கூடாது. ஏனென்றால் மருந்து தயாரிக்கும் ரகசியத்தை உன்னிடம் சொல்லி விட்டேன் என்று என் நாட்டு மக்களிடம் சொல்லி விடுவான். அதனால் நான் சொல்வதற்கு முன் என் மகனைக் கொன்று விடு" என்றான்.

உடனே உலூக்கா, ஒகாயாவைக் கொன்று விட்டான், பிறகு, மிலுக்காவிடம் வந்து மருந்து தயாரிக்கும் ரகசியத்தைத் தனக்குச் சொல்லுமாறு கேட்டான்.

மிலுக்காவோ, "மாட்டேன் நான் சொல்ல மாட்டேன். இப்போது அந்த ரகசியத்தை அறிந்தவன் நான் ஒருவன்தான் இருக்கிறேன் அது என் மக்களுக்கு எதிராகப் பயன் படக்கூடாது" என்று சொன்னான்.

அதைக் கேட்டுத் திகைத்த உலூக்கா, "அப்படியானால் உன் மகனை ஏன் கொல்லச் சொன்னாய்?" என்று கேட்டான்.

"நீ அந்த அபூர்வ மருந்தைத் தயாரிக்கும் ரகசியத்தை அறியும் வாய்ப்பை இழக்க வேண்டுமென்பதற்காகத் தான் அப்படிச் சொன்னேன். உன் மிரட்டலால் என் மகன் உயிர்போய் விடுமே என்று பயந்து மருந்து தயாரிக்கும் ரகசியத்தைச் சொல்லி விடுவானோ என்று பயந்து அவனைக் கொல்லச் சொன்னேன். என் உயிர், என் மகன் உயிர் போவதைப்பற்றி நான் கவலைப் படவில்லை. என் மக்கள் அழிய நான் இணங்க மாட்டேன். இந்த ரகசியத்தை நான் உனக்குக் கூறினாலும், நீ என்னைக் கொல்லத்தான் போகிறாய். எனக்கு என் நாடுதான் முக்கியம். அதனால் நான் உனக்குக் கூறமாட்டேன்" என்று சொன்ன மிலுக்கா மலையில் இருந்து, ஆழமான பள்ளத்தாக்கில் குதித்து தற்கொலை செய்து கொண்டான்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01.07.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 96
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 93

பரிசுக்குரியவர்:
செல்வி. பாத்திமா சானாஸ் ஷபா
முஸ்லிம் வித்தியாலயம், நாங்கல்ல, துல்ஹிரிய.

பாராட்டுக்குரியவர்கள்

| | |
|---|---|
| பிரியதர்சகா<br>மெதடிஸ் கல்லூரி கொழும்பு-03. | செல்வன். த. சுதாகர்<br>பலாத்வெல, த.வி. மாத்தளை. |
| ஆர். அழகுசுந்தரி<br>மொக்கா த.வி. மஸ்கெலியா. | து. அஜந்தன்<br>இந்துக்கல்லூரி, கொழும்பு-04. |
| க. வினோத்<br>அமிர்த்தகழி சித்திவினாயகர் வித்தியாலயம் மட்டக்களப்பு. | செல்வி. ஸஜிதா<br>புனித சிசிலியா பெண்கள் பாடசாலை மட்டக்களப்பு. |
| ஆ. முஹம்மத் அஸாம்<br>ஸாஹிரா தேசிய கல்லூரி புத்தளம். | ச. சக்திராஜ்<br>ஸ்ரீகோனேஸ்வரா இ. கல்லூரி திருமலை. |
| யூ. சோவினி<br>குழந்தை யேசு பாடசாலை மட்டக்களப்பு | பீ.எம். மாஸ்றூன்<br>அல்ஹிதாயா வித்தியாலளம், மிறாவோடை. |

## அறிவோம் மனதில் பதிவோம்



அவுஸ்திரேலியாவில் பழுப்பு நிற கிவி பறவைகளுக்குக் கால்கள் மிகவும் தடிப்பாக அவற்றின் உடல் எடையில் மூன்றில் ஒரு பகுதியாய் இருக்கும். அதனாலேயே அவற்றால் பறக்க முடியாது.



மின்சார நாற்காலியில் மரண தண்டனைக் குற்றவாளிகளை அமரவைத்து மின்சாரம் பாய்ச்சிக் கொல்லும் முறை அமெரிக்காவில்தான் நடைமுறையில் உள்ளது. மின்சார நாற்காலி மூலம் உயிரை விட்ட முதல் குற்றவாளி வில்லியம் கெம்லர்.



அன்டார்டிக்கா கண்டத்தில் வாழும் பெண்குயின் பறவைகளின் உடல் கடுங்குளிரைத் தாங்கும் அளவு உறுதியாக உள்ளது. ஐஸ் போன்ற நீரில் நீண்டதூரம் நீந்தும். பெண்குயின் பறவைகளிலேயே மிக வேகமாக நீந்தக்கூடிய ஜெண்ட் பெண்குயின் ஆகும். இது மணிக்கு 27.4 கிலோ மீற்றர் வேகத்தில் நீந்தக் கூடியது.

குதிரை, மான் போன்ற குளம்புகள் உள்ள மிருகங்கள் வேகமாக ஓடக்கூடியவை. இப்படிக் குளம்புகள் கொண்ட மிருகங்களிலேயே மிகச்சிறியது எலிமான் ஆகும். இதன் உயரம் 30 சென்ரிமீற்றர்.



## வாரம் ஒரு நாடு

### கொஸ்டா ரீக்கா



**அமைவிடம்:** மத்திய அமெரிக்கா, நிக்கரகுவா மற்றும் பனாமா நாடுகளுக்கிடையே உள்ள நாடு.

**பரப்பு:** 51,100, ச.கி.மீ (19,600 ச.மைல்)

**மக்கள் தொகை:** 33,00,000

**தலை நகரம்:** சான் ஜோஸ் (மக்கள் தொகை 280,000)

**மொழி:** ஸ்பானிய மற்றும் ஆங்கிலம்.

**மதம்:** உரோமன் கத்தோலிக்கம்.


**ஆட்சி முறை:** குடியரசு.

ஸ்பானிய அமெரிக்காவின் ஒரு பகுதியாக இருந்தஇந்நாடு, 1821ல் சுதந்திரநாடாகியது. விவசாயத்தில் ஈடுபடும் இந்நாட்டில் கோப்பி அதிகமாக விளைந்து 50 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சீனி உற்பத்தியும் அந்நியச் செலாவணியைத் தேடித்தருகிறது. வாழைப்பழங்கள், கொக்கோ ஆகியனவும் உற்பத்தியாகின்றன.

**பார்க்கவேண்டியவை:** பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட மக்கள் பயன்படுத்திய தங்க ஆபரணங்களையும் தங்கத்தால் உருவாக்கப்பட்ட பொருட்களையும் கொண்ட நூதனசாலை சான் ஜோஸ் நகரில் பார்க்கவேண்டிய முக்கியமான இடங்களில் ஒன்று. இவை கொலம்பிய நாட்டு மரபினை ஒட்டியே உருவாக்கப்பட்டவையாகும். ஒரோ ஸிமிஷன் என்ற தேவாலயமும் கலையம்சங்களைக் கொண்ட ஒரு சிறப்பான அமைப்பாகும். தேசிய கலை அரங்கில் அந்நாட்டுக் கலை வடிவங்கள் வளர்ச்சியடைய வழி வகுத்துத் தருகிறது. இசை அரங்குகள் நாடக-நாட்டிய அரங்குகள் என்று கலாபிமானிகளை இவை கவர்ந்திழுக்கும்.

பல விளையாட்டுக்களுடன் இந்நாட்டு தேசிய விளையாட்டான உதைப்பந்துப் போட்டிகள் ஒவ்வொருநாளும் பல்லாயிரக் கணக்கான மக்களைக் கவர்ந்திழுக்கும். இரவு விடுதிகளும் களியாட்டங்களும் எங்கும் காணப் படுகின்றன.

இங்கு உயிருடன் குமுறிக் கொண்டிருக்கும் இரு எரிமலைகள் உள்ளன. இந்நாட்டுக்கு வருவோர் எவரும் இவற்றைப் பார்க்காமல் திரும்ப மாட்டார்கள்.




உலக மக்கள் தொகை நிமிடத்திற்கு 170 வீதம் அதிகரித்து வருகிறது. கி.பி.2050 இல் உலகின் மொத்த சனத்தொகை எவ்வளவாக உயரப் போகிறது தெரியுமா? 12,506 மில்லியன்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

5

# ஒரு தேவி என்னைத் தேடுகிறாள்

## திகில் கதை மன்னன்

## ராஜேந்திர குமார்



ஆச்சரியமாக இருந்தது.

"இந்த சின்னஹாலை நான் கடந்து வரும் முன் அவ்வளவு தூரம் நடந்து போயிருக்கிறான்! மனித சாத்தியமா இது?"

வானத்தில் திடீர் என்று குமுறல் கேட்கவே அண்ணாந்து பார்த்தாள். வந்து கொண்டிருந்தன, கறுப்பு மேகங்கள்.

பளீர் பளீரென மின்னல்களைச் சீறவிட்டு இடியை முழங்கின.

புரியாமல் இவள் பார்க்கும் போதே-

சடசடவென்று மழை பெய்தது. கல்மழை! அதுவும் இரவில்!

என்ன இது? இயற்கைக்கு மாறாக என்ன இது இரவில் ஆலங்கட்டி மழை! மீண்டும் போகத் திரும்பிய போது குரல் கேட்டது, எங்கோ தொலைவில்-

துல்லியமாக-மிகத் துல்லியமாகக் கேட்டது.

"லக்ஷ்மம்மா...!"

அழைக்கிறார்கள். யாரோ அழைக்கிறார்கள்.

மவுனமாக திரும்பிச் சாப்பிடப் போனாள்.

சாப்பாட்டு மேஜையில் அப்புண்ணி கேட்டார்: ஏன் லக்ஷ்மம்மா குழப்பமாகத் தெரிகிறாய்? என்மகன் திரும்புவதில் உனக்குச் சந்தோஷமில்லையா?"

"சந்தோஷம் தான். ஆனால் உங்கள் மகனை வரவேற்கத்தான் நான் இங்கே இருப்பேனோ, மாட்டேனோ"-

என்று தேவி சொன்னதும் மீண்டும் அலறினாள் மெர்லின்.

"ஐயோவ் வேணாம்."

"சரி. இப்போதைக்கு மூன்றாவது கதை வேண்டாம். விஷயத்துக்கு வருவோமா?"

"செய்" என்றாள் மெர்லின். இந்த கதை தவிர கேஸ் விஷயமாக எதைச் சொன்னாலும் கேட்டுக்கறேன்.

"சொல்றேன்" என்று ஆரம்பித்தாள் தேவி.

□□

"எனக்கும் என் சினேகிதிகளுக்கும் ஆவியுலக ஆராய்ச்சி இறந்தவர்களுடன் பேசுவது எல்லாம் ரொம்பவும் பிடிக்கும்.

ஒரு நாள் பேசும்போது திடீரென்று மூன்று ஆவிகள் வந்து அழுதன.

"எங்களைக் கொன்றவன் இன்னமும் இருக்கிறான். அவனைத் தேடிக் கண்டு பிடித்துச் சட்டப்படி தண்டனை வாங்கிக் கொடு" என்று அழுதன.

"அதெப்படி?" கேட்டேன். "பன்னிரண்டு வருஷத்துக்கு, மேலே மூடிக்கிடந்த கேஸ் பைலை ஆராய்கிறார்களே."

"ஏன்? இத்தனை வருஷம் கழித்து மெர்லின் மன்றோ கேஸ் பைலை ஆராய்கிறார்களே."

"அது இப்ப நடந்தது. அதாவது இந்த மெர்லின் கன்சீவ் ஆன தேதியில் நடந்தது. உன் வயசு என்ன மெர்லின்?"

முறைத்தாள்.

"நாளைக்கு வரும்போது உன் பர்த்டே சர்டிபிகேட்டை கொண்டு வா."

"வ்ரேனே, எனக்கென்ன பயம்?" என்றவள்,

"அப்பதான் தெரியும். உன் நிஜவயசு" என்று நான் சொன்னதும்-

"ஏன்?"

"ஏற்காடு போகிறேன். திரும்ப நாளாகும் என்று நினைக்கிறேன்."

"எப்போ போகிறாய்?"

"நாளைக்கு மத்தியானம்."

"இவன் காலையில் விடியும் போதே வந்துவிடுவான். பார்த்து வரவேற்ற பின்னாலேயே நீ போகலாம்."

பதில் சொல்லாமலே எழுந்து போய் கை கழுவினாள்.

"இன்னைக்கு நான் நிம்மதியாத் தூங்கப் போறேன். யாரும் என்னைத் தொல்லைப்படுத்தாதீங்க."

"லக்ஷ்மம்மா....ஆ...ஆ..."

"யாராவது பெயர் சொல்லிக் கூப்பிட்டீங்களா?" என்று கேட்டவள். எல்லோரும் விநோதமாகப் பார்க்கவே-

மெல்ல நடந்து போய் அறைக்குள்ளே சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

அதுதான் அவளை அவர்கள் கடைசியாகப் பார்த்தது.

நள்ளிரவு கடந்து கொஞ்ச நேரமானதும்.

கதவு காற்றில் அடித்துக் கொள்ளும் சத்தம் கேட்டு எழுந்து வந்த வேலைக்காரி 'யார் கதவைத் திறந்து போட்டிருப்பார்கள்?' என்று குழம்பியபடி கதவைச் சாத்த முயன்றவளின் கண்ணில் பட்டது அது.

மின்னல் வெளிச்சத்தில் படிக் கட்டுக்குக் கீழே இருட்டில்-எதுவோ குந்தியிருந்தாற் போல தெரிய-

வெளியே வராண்டா விளக்கைத் தட்டி விட்டு வெளியே போய்ப் பார்த்து அலறிய பயங்கர அலறலில்-

அத்தனைப் பேரும் எழுந்து வந்து பார்த்து அதிர்ந்தார்கள்.

அங்கே லக்ஷ்மம்மாவின் தலை மட்டும் கோரமாக விழித்தவாறு வைக்கப் பட்டிருந்தது.

மறுபடியும் அலறினாள் மெர்லின். "இது என்ன? இந்தப் பெண் பயங்கரக் கதையாகவே சொல்லுது. யா.. ஆ.. ஆ.. ஆ... ஆவ்.."

"ஏய் சும்மா இரு" என்றேன் கத்தலாக. "சுவாரஸ்யமான இடத்தில் கூச்சல் போட்டுக் கெடுக்கறே?"

"எனக்குப் பயமா இருக்கு. கதை வேண்டாம். பாஸ், ப்ளீஸ்"

"எனக்கு வேணும். வேணுமானால் நீ வீட்டுக்குப் போய்க்க"

முறைத்தாள்.

"என்ன முறைக்கிறே?"

"இப்ப எதுக்கு என்னைத் துரத்தறீங்க? எனக்குத் தெரிஞ்சாகணும்."

"நானும் இந்த தேவியும் கொஞ்ச நேரம்..."

"வாட்?"

"முறைக்காதே; முறைக்காதே-!" சிரித்தேன்.

"பேசணும்னு சொன்னேன்."

"அதெல்லாம் ஒத்துக்க மாட்டேன். கேஸ் விபரம் தெரியாம அப்புறம் மொட்டை தாத்தா குட்டையில விழுந்தார்னு சொல்லிக் குழப்புவீங்க. பரவாயில்லே. கதை தான் முடிஞ்சுதே. இனிமே என்ன பயம்?"

"இன்னும் ஒரு கதைதான் பாக்கி"

"சும்மா சொல்லு"

"பதினாறு முடிஞ்சு பதினேழு ஆரம்பம். இனிய பதினேழு."

"எத்தனை வருஷமாகன்னு கேட்கமாட்டேன். என்கிட்ட வேலைக்கு சேர்ந்தப்ப அப்ளிகேஷனில் போட்ட வயது. நீ வேலையில் சேர்ந்தே பதினேழு வருஷமாகிறது."

"பின்னே? இன்றைக்கு ஒண்ணும் நாளைக்கு ஒண்ணுமாகவா பேசுவாங்க?"

"உன் வயசை சொல்லுங்கறேன்."

"நாகரீகமில்லாத கேள்வி" அழுத்திச் சொன்னாள்: ஸாரி பதில் சொல்லுவதற்கில்லை."

"அதைவிடு. நீ சொல்லு. எங்கே இருக்கிறானாம் அந்தக் கிழவன்?"

"கிழவனில்லே. ஏற்கெனவே சொன்னேன் போலிருக்கிறதே? அவன் இன்னமும் வாலிபனாவே இருக்கிறான்."

"எங்கே?"

"இந்த ஏரியாவில் அடிக்கடி வந்து போகிறதாக அந்த ஷோபாவின் ஆவி சொல்லிற்று. என் கம்ப்யூட்டரும் அதையே சொல்லுகிறது."

"ரீல். கம்ப்யூட்டர் பெயரைச் சொன்னால் எதையும் நம்பி விடணுமாக்கும்? அந்தக் காலத்தில் ஏது கம்ப்யூட்டர்?"

"சரி, சரி. சண்டை போடாதே. மெர்லின்" நான் சொன்னேன்: சும்மா அவள் சொல்கிறதை மட்டும் கேட்டுக்க. அப்படி சரித்திரக் கதையைச் சொல்லும் கம்ப்யூட்டர் இருக்கக் கூடாதா என்ன?"

"சரி, கம்ப்யூட்டர் வைத்துக் கேட்டேன். அது திரும்ப திரும்ப இந்த ஏரியாவையே காட்டுகிறது. அவன் இங்கேதான் அடிக்கடி வந்து போகிறான்?"

"அதெப்படி அவ்வளவு... சரி.சரி. கம்ப்யூட்டரை விடு. என்னிடம் மனோ வியாதிக்காகவும் நிம்மதிக்காகவும் நிறையப் பேர் வருகிறார்கள். நீ யாரைச் சொல்கிறாய் என்றே புரியவில்லையே?"

"அதைத்தான் கண்டுபிடிக்கப் போகிறேன். அதற்குத்தான் உங்கள் உதவியைக் கேட்கிறேன்."

"என்ன உதவி?"

"உங்கள் ஆள், நண்பர்கள், பேஷண்டுகள் எல்லோரையுமே நான் சந்திக்க வேண்டும்."

"சந்தித்து-?"

"அவனைக் கண்டு பிடிப்பேன். எனக்கு நம்பிக்கை இருக்கிறது."

"அவன் என்று எப்படிச் சொல்கிறாய்? நீ சொன்ன கதைகளில் அவனை விட அவள் தான் அதிகமாக சந்தேகத்தைத் தருகிறாள்."

"அப்படியானால் பெண்களையும் கூப்பிடுங்க?

"இவளா இருக்குமா பாரேன்" என்று மெர்லீனைக் காட்டி அலற வைத்தேன். "இவளுக்கும் முப்பத்தைஞ்சு நாற்பது வயசாகிறது. ஆனாலும் பாரேன், எவ்வளவு இளமையாக அழகாக அவள் சொல்லும் பதினேழை நம்புகிற மாதிரியே இருக்கிறாள்."

"பாஸ்"-என்று ஆரம்பித்து பத்து நிமிஷம் இருபது வினாடிக்கு கத்தி விட்டு ஓய்ந்தாள். "என்னைப் போய் நாற்பது-எத்தனை தைரியம்?"

-சட்டென்று அடங்கிப் போனாள்.

"அது... அது...இல்லே. ஸ்கூல்ல சேர்க்கிறப்பவே அப்பா தேடிக்கிட்டிருந்தார். தொலைஞ்சு போச்சு நாற்பது! நான் போறேன்" என்று கிளம்பியவளை-

இழுத்து அமர்த்தினேன். "உட்கார். சொன்னால் உடனே பொசுக்கென்று புறப்பட்டு போயிடறதா? ஸ்டுப்பிட் கேர்ள்."

"முதல்ல நாற்பது என்கிறதை வாபஸ் வாங்கு."

"சரி. வாபஸ்"

"சொல்லு. நான் இளம்பெண் என்கிறதில் சந்தேகமில்லை."

"நீ ஒரு பேரிளம்பெண் என்பதில் சந்தேகமில்லை."

பேரிளம் பெண்ணுக்கு அர்த்தம் தெரியாததினால் பூரித்துப் போனாள் நிஜமாகவே.

இந்த தேவியிடம் திரும்பினேன்.

"நீ சொல்கிறது எனக்குப் புரியலே. நீ ஏதோ மனநிலை சரியில்லாமல் உளறுகிறாய் என்று நினைத்தேன்."

"நோ. ஐயாம் ஸீரியஸ்!"

"நீ சொல்கிறதை நம்பி ஒரு பார்ட்டி ஏற்பாடு செய்து செலவு செய்தால் என்னைப் போல முட்டாள் அகில உலகத்திலுமிருக்க மாட்டான்."

"உங்களைப் பார்ட்டி ஏற்பாடு செய்யத்தான் சொன்னேனே தவிர, செலவுகளை ஏற்கச் சொல்லவில்லை. பூரா செலவையும் நானே ஏற்கிறேன். தயவு செய்து எனக்கு உதவுங்கள்."

"உதவுவதாக நினைக்கவில்லை. உதவாக்கரையாக நேரத்தை வீணடிக்கிறதாக நினைக்கிறேன்."

"இல்லை. நான் சொல்கிறதை நம்புங்க. ப்ளீஸ்"

"சரி, பார்ட்டி ஏற்பாடு செய்துட்டதாகவே நம்பு. ஆனால் ஒரு விஷயம் புரியல்லே."

"என்ன அது?"

"அதெப்படி அந்தக் கூட்டத்தில் ஆளைக் கண்டு பிடிப்பாயாம்?"

"என்னால் முடியும்!"

"அதைத்தான் எப்படின்னு கேட்கிறேன்"

"அந்த விழாவில் மைக்கில் நின்று மூன்றாவது கதையைச் சொல்லுவேன்"

"சொன்னால்...?"

"அசல் குற்றவாளி முகம் கொஞ்சமாவது வெளிறிப் போகும். சட்டென்று அடையாளம் கண்டுபிடித்துவிட என்னால் முடியும்."

"ஸில்லி!"

"இல்லே. எனக்கு நம்பிக்கையிருக்கு! நம்புங்க. என்னால் அது முடியும்."

நம்பாமல் பார்த்தேன்.

கொஞ்சம்போனால் அழுதேவிடுவாள் போலிருக்கவே- சம்மதித்தேன்.

"சரி. அடுத்த சனிக்கிழமை ஏற்பாடு செய்கிறேன் மெர்லீன்-"

"நான் பார்ட்டிக்கு வர்லே பாஸ்"

"ஏம்மா?"

"மூணாவது கதையைச் சொல்றேன் யார் முகம் மாறுமோ அவன்தான் குற்றவாளின்னா, இங்கேயே கதையைக் கேட்டு அலர்றேன் பார்ட்டியில வேறா? நான் மாட்டேன். இதை மறக்கவே எனக்கு நாளாகும்."

"நீ வருகிறாய்."

"மாட்டேன். நான் வர்லே! ப்ளீஸ் பாஸ். என்னை விட்டுடுங்க."

"பயப்படாதே பெண்ணே! உன் பயத்தை உணர்ந்ததினால் உன்னை அந்த இடத்தில் கண்டுக்க மாட்டேன். உன் எக்ஸ்பிரஷன் மன்னிக்கப்படும்; தவிர்க்கப்படும்."

"இருந்தாலும்-"

"மெர்லீன்" அதட்டினேன். "சொல்லுவதை முழுசாக கேட்காம இருக்கக் கூடாது."

"சொல்லுங்க! பாஸ்" முணுமுணுப்பாகச் சொன்னாள்.

"கதையே கேட்டுட்டேன். அதைவிட பயங்கரமா என்னத்தைச் சொல்லிடப் போறீங்க?"

"பார்ட்டிக்கு ஏற்பாடு செய்! இப்போது இங்கே வருகிற மன நோயாளிகள் என் சிநேகிதர்கள்-"

"சிநேகிதிகள்?"

"விரோதி நீ உட்பட எல்லோரையும் பார்ட்டிக்குக் கூப்பிடு!"

"விரோதியா? நானா?"

"சரி, என் இனிய சிநேகிதி நீ உட்பட எல்லோரையும் கூப்பிடு."

"பார்ட்டின்னா காரணம் வேண்டாமா?"

"உன்னுடைய பதினெட்டாம் ஆண்டு பிறந்த நாள்னு குறிப்பிடு!"

"மாட்டேன்! வயசெல்லாம் வேண்டாம் பாஸ்!"

"ஏன்?"

"பதினெட்டுன்னு நம்பர்ல எழுதி தவறிப் போய் திரும்பிட்டா எண்பத்தி ஒண்ணு ஆயிடும். நான் மாட்டேன். பிறந்த நாள்னுதான் மொட்டையாக குறிப்பிடுவேன்."

"என்னவோ செய்!

"தாங்க்யூ பாஸ்! ஐயோ, தெரியாத்தனமாய் என் பிறந்தநாள் போன வாரமே வந்து சந்தடியில்லாம போயிடுச்சே!"

"சரி. அழைப்பை எழுதிக்க. டியர் ப்ரெண்ட்ஸ்" என்று நான் ஆரம்பிக்க-

"தாங்க்யூ. வரேன் சார்" என்று கிளம்பினாள் அந்த தேவி.

"சனிக்கிழமை ஓ.கே.தானே?"

"ஓ.எஸ். நல்ல நாள்! அமாவாசை. அமானுஷ்யங்கள் மிக சாதாரணமாக உலாவும்."

"பாஸ், மறுபடியும் கதை ஆரம்பிக்கிறது இந்தப் பெண்."

"இல்லே; இல்லே வரேன்" என்று அவள் கிளம்பிப் போனதும்-

பார்த்தேன்.

காபியிங் பென்சில் முனையில் நாக்கில் சின்ன பொட்டு தெரிய நோட்டுப் புத்தகத் துடன் "ஙே" என்று விழித்தவாறு அமர்ந்திருந்தாள் இந்த மெர்லீன்.

சிரிப்பு வந்தது.

"என்ன விழிக்கிறே?"

"இல்லே. இவள் சொன்னதில் எவ்வளவு தூரம் நம்பலாம்னு பார்த்தேன்."

"எவ்வளவு பர்சண்ட் நம்பரே?"

"ஒரு பர்சண்ட் கூட நம்ப முடியல்லே! பணத்தை வீணடிக்கிறது வீண். உங்கள் நேரம் வீண். அவள் பணம் வீண்."

"இன்னொண்ணும் சேர்த்துக்க."

"எது?"

"உன் பயமும் வீண்!"

"நான் ஒண்ணும் பயப்படல்லே. ஒரு.....ஒரு இது..... அவ்வளவுதான்."

"என்ன ஆச்சரியம் பார்த்தியா? ரெண்டு பேர் தலையையும் வெட்டித் துண்டாக்கிக் கொண்டு வந்து நிமிர்ந்த நிலையில் வைச்சுட்டு-" என்றவன் அவள் முகத்தில் பயம் தெரியவே நிறுத்தி-

"மூணாவது தலையை வெட்டி எங்கே வைச்சாங்கண்ணு தெரியலியே!"

"யாவ்?"

"ஒரு வேளை நடுவீட்டிலே கொண்டு வந்து வைச்சிருப்பான்-"

அலறிவிட்டாள். "சும்மாவே இருக்க மாட்டீங்களா பாஸ்?"

சிரித்தேன்.

"அப்ப ஒத்துக்க. உன் பயம் வீண்."

"சரி. என் பயமும் வீண்."

அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினேன். "இங்கே வாயேன்."

வந்தாள்?

"அந்தப் பெண் சொன்ன நபர் நீயாக இருக்குமோ என்கிற சந்தேகம் எனக்கு அடிக்கடி வருகிறது."

"ஏன்?" என்றவளின் மார்பை வருடினேன்.

"பாரேன். என்ன இளமை! என்ன திண்மை! எத்தனைக் கவர்ச்சி!"

கையைத் தள்ளி விட்டாள் "விஷயத்துக்கு வாங்க."

"அதுக்குத்தானே ஆரம்பிச்சேன்"

"த்தூ. வெட்கமில்லாத பேச்சு. அழைப்பிதழ் டிக்டேஷன் விஷயத்துக்கு வரச் சொன்னேன்."

"எழுது. எதுவரை சொன்னேன்?"


"டியர், ப்ரெண்ட்ஸோடு நிற்கிறது."

மேலே எழுது. யூவார் கார்டியலி இன்வைடட்....."

சொல்லி முடித்தேன்.

*(தொடர்ந்து வரும்)*

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்:-எம். நியாஸ்
வயது:-21
முகவரி:-13, பொதுச்சந்தை, பசறை
பொ.போ:- பத்திரிகை வாசித்தல்.



பெயர்:-எம். இம்தியாஸ்
வயது:-24
முகவரி:- KING FAHAD PALACE P.O.BOX-554775 RIYADH-11534, K.S.A.
பொழுது. போக்கு:- கதைப்புத்தகங்கள், கிரிக்கெட்.



பெயர்:- சி. கவிதா
வயது:- 17
முகவரி:-வன்னியர் வீதி, அக்கரைப்பற்று-08.
பொழுது போக்கு:-பத்திரிகை, வானொலி, கதைப்புத்தகம்.



பெயர்:-கே. தியாகராஜன்
வயது: 24
முகவரி: இல. 96, செட்டியார் தெரு, கொழும்பு-11.
பொழுது போக்கு:- நாவல்கள் படித்தல்



பெயர்:- அப்துல்லா பீபீ
வயது:-25
முகவரி:-கலாவெவ, விஜிதபுர.
பொழுது போக்கு:- ரீ.வி., பேனாநட்பு, வானொலி.

பெயர்:-ஏ. மஜீத்
வயது:-37
முகவரி:- இல. 41, முஸ்லிம் கொலனி, கதுறுவெல, பொலநறுவை.
பொ.போ:-வானொலி பத்திரிகை, பேனா நட்பு.

பெயர்:-ஆர். விக்னேஸ்வரன்
வயது:-23
முகவரி:-10, FULWOOD AVENUE. WEMBLEY, MIDDLESEX, HAOILT, U.K.
பொ. போ.:-தொலைக்காட்சி, பத்திரிகை, கதைப்புத்தகம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தாய் 30

## மக்சீம் கார்க்கி



"என் மனம் புண்பட்டுத்தான் போயிருக்கிறது; உங்கள் மனமும் அப்படித்தான். ஆனால் உங்கள் வேதனை என் வேதனையைவிடக் கொஞ்சம் உயர்ந்த ரகம். அவ்வளவுதான்! நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் போக்கிரிகளாக நடந்து கொள்கிறோம். அவ்வளவுதான் நான் சொல்வேன். நீ இதற்கு என்ன சொல்லப் போகிறாய்? உம். சொல்வதைச் சொல்லு."

அவன் அந்திரேயின் முகத்தைக் கூரிய கண்களால் பார்த்தான்; இறுகக் கடித்த பற்களோடு பதிலுக்காகக் காத்திருந்தான். அவனது சிவந்த முகத்தில் உணர்ச்சியின் உத்வேகம் மாறவில்லை; எனினும் தடித்த உதடுகள் மட்டும் நெருப்பால் சூடுபட்டது போல் நடுங்கின.

"நான் எதுவுமே சொல்ல முடியாது" என்று கூறிக்கொண்டே குரோதம் நிறைந்த நிகலாயின் பார்வைக்கு எதிராக, தனது நீலநிறக் கண்களில் அன்பு நிறைந்த சிரிப்புக் குமிழிடப் பார்த்தான் ஹஹோல். "இதயத்தின் சகல புண்களும் இரத்தம் கொட்டிக் கொண்டிருக்கும் ஒருவனோடு எதை விவாதித்தாலும் வேதனைதான் அதிகரிக்கும். அது எனக்குத் தெரியும், தெரியும் தம்பி!"

"நீ என்னோடு விவாதிக்க முடியாது. எனக்கு எப்படியென்று தெரியாது" என்று தன் கண்களைத் தாழ்த்திக் கொண்டே முனகினான் நிகலாய்.

"நாம் ஒவ்வொருவரும் தனித்தனி முள்ளடர்ந்த பாதையில் தான் நடந்து சென்றிருக்கிறோம். உன்னைப் போல ஒவ்வொருவருக்கும் துன்பம் எதிர்ப்பட்டிருக்கிறது....." என்றான் ஹஹோல்.

"நீ எனக்கு எந்தச் சமாதானமும் சொல்ல முடியாது" என்று நிகலாய் மெதுவாகச் சொன்னான்; "என் இதயம் ஓநாயைப் போல் உறுமி ஊளையிட்டுக் கொண்டிருக்கிறது"

"நான் உனக்கு எதுவுமே சொல்ல விரும்பவில்லை. என்றாலும் உன்னுடைய இந்தச் சஞ்சலம் போய்விடும்; பரிபூரணமாகப் போகாவிட்டாலும், ஓரளவாவது போய்விடும் என்பது மட்டும் எனக்குத் தெரியும்."

அவன் லேசாகச் சிரித்தான்; பிறகு நிகலாயின் தோள் பட்டைமீது தட்டிக் கொடுத்துக் கொண்டு பேசத் தொடங்கினான்:

"இது இருக்கிறதே, இது ஒரு குழந்தை நோய் மாதிரி; மணல்வாரி நோய் மாதிரி. நம் எல்லோருக்குமே இந்த நோய் என்றாவது ஒருநாள் வந்துதான் தீரும். பலமுள்ளவனை அது அவ்வளவாகப் பாதிக்காது; பலமில்லாதவனை மோசமாகவும் பாதிக்கக்கூடும். இந்த நோய் எப்போது பற்றும் தெரியுமா? நம்மை நாமே உணர்ந்து கொள்ள முனையும் சமயம் பார்த்து, எனினும் வாழ்க்கையைப் பரிபூரணமாக உணர்ந்து கொள்ளாமல், அதில் நமக்குரிய இடத்தை உணர்ந்து கொள்ளாமல் இருக்கின்ற குறைப்பக்குவ சமயம் பார்த்து, நம்மை வந்து பற்றிக் கொண்டுவிடும். நீதான் உலகத்திலேயே உயர்ந்த ரகச் சரக்கு என்றும், எனவே ஒவ்வொருவரும் உன்னைக் கடித்துத் தின்னவே பார்க்கிறார்கள் என்றும் உனக்குத் தோன்றும். ஆனால் கொஞ்ச காலம் போனால் எல்லோருடைய இதயங்களும் உன் இதயத்தைப் போலவேதான் இருக்கின்றன என்ற உண்மையை நீ உணர்ந்து கொள்வாய். உணர்ந்த பின்னர் உன் மனம் ஓரளவு சமாதானம் அடையும். கூப்பிடு தூரத்துக்குக்கூட ஒலிக்காத உனது சின்னஞ் சிறு மணியைக் கோபுரத்தின் உச்சியிலே கொண்டு கட்டி ஊரெல்லாம் ஒலிக்கச் செய்ய விரும்பிய உன் அறியாமையைக் கண்டு நீயே நாணம் அடைவாய். உனது மணியைப்போன்ற பல்வேறு சிறு மணிகளின் சம்மேளனத்தோடுதான் உனது மணியோசையும் ஒன்று பட்டு ஒலிக்க முடியும் என்பதை நீ உணர்வாய். நீ மட்டும் தன்னந் தனியே ஒலி செய்ய விரும்பினால், கோபுரத்தின் கண்டாமணியின் ஒலி உன் மணியோசையை மூழ்கடித்து விழுங்கிவிடும். எண்ணெய்ச் சட்டியில் விழுந்த ஈயைப் போல் உனது குரல் கிறுகிறுத்து வெளிக்குத் தெரியாமல் தனக்குத் தானே ஒலித்துக் கொண்டிருக்கும். நான் சொல்வது உனக்குப் புரிகிறதா?"

"எனக்குப் புரியலாம்; ஆனால் நான் அதை நம்பத்தான் இல்லை" என்று தலையை ஆட்டிக்கொண்டே சொன்னான் நிகலாய்.

ஹஹோல் சிரித்துக் கொண்டே துள்ளியெழுந்தான்; பரபரவென்று நடக்க ஆரம்பித்தான்.

"ஏ, பார வண்டி! நானுங்கூடத்தான் அதை நம்பவில்லையடா!" என்றான் ஹஹோல்.

"என்னை ஏன் பார வண்டி என்று சொன்னாய்?" என்று உயிரற்ற சிரிப்போடு ஹஹோலைப் பார்த்துக் கேட்டான் நிகலாய்.

"ஏனா? நீ அப்படித்தானே இருக்கிறாய்?"

திடீரென்று நிகலாயும் வாய்விட்டு உரக்கச் சிரித்தான்; சிரிக்கும் போது அவன் வாய் விரிந்து திறந்திருந்தது.

"என்னப்பா இது, என்ன சிரிப்பு?" என்று நிகலாயின் முன்னால் சென்று நின்று வியப்புடன் கேட்டான் ஹஹோல்.

"இல்லை, திடீரென்று ஒன்றை நினைத்துக் கொண்டேன், சிரிப்பு வந்தது. உன் மனதைப் புண்படுத்த எண்ணுபவன் உண்மையிலேயே முட்டாளாய்த் தானிருக்க வேண்டும்" என்றான் நிகலாய்.

"என் உணர்ச்சியை எப்படி புண்படுத்த முடியும்?" என்று தோளை உலுப்பிக் கொண்டே கேட்டான் ஹஹோல்.

"அது எனக்குத் தெரியாது" என்று அன்பு கலந்த இனிய புன்னகையோடு சொன்னான் நிகலாய். "உன்னை ஒருவன் புண்படுத்தி விட்டால், பின்னால் அவன்தான் அதை யெண்ணி வெட்கப்பட்டுக் கொள்ள வேண்டும். அதைத்தான் நான் சொல்ல வந்தேன்."

"வழிக்கு வந்துவிட்டாயா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் ஹஹோல்.

"அந்திரியுஷா!" என்று சமையலறையில் இருந்து அழைத்தாள் தாய்.

அந்திரேய் போய் விட்டான்.

தன்னந் தனியாக விடப்பட்ட நிகலாய் சுற்றும் முற்றும் பார்த்தான். பிறகு முரட்டுப் பூட்சுக்குள் புதைந்திருந்த தன் காலை எடுத்து நீட்டினான்; காலைப் பார்த்தான்; தடித்துப் போன காலின் கெண்டைக்காலைத் தடவிவிட்டுக் கொண்டான்; கையை உயர்த்தி, தனது கொழுத்த உள்ளங்கையையும் உருண்டு திரண்டு, கணுக்களில் மஞ்சளாய்ப் பூமயிர் வளர்ந்திருந்த தன் குட்டையான கைவிரல்களையும் பார்த்துக் கொண்டான். ஏதோ ஒரு கசப்புணர்ச்சியோடு கையை உதறிவிட்டு அவன் எழுந்தான்.

அந்திரே தேநீர்ப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்த சமயத்தில் நிகலாய் கண்ணாடியின் முன் நின்று தன்னுருவைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"என் உருவைக் கண்ணாடியில் பார்த்தே எவ்வளவோ காலமாகிவிட்டது. என் மூஞ்சியில் விழிக்கக்கூட யாரும் துணிய மாட்டார்கள்!" என்று ஒரு வறட்டுப் புன்னகையோடு சொல்லிக் கொண்டான்.

"உன் முகத்தைப் பற்றி இப்போது ஏன் கவலைப்பட ஆரம்பித்தாய்?" என்று நிகலாயைக் கூர்ந்து கவனித்தவாறே கேட்டான் அந்திரேய்.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று சாஷா சொன்னாள்."

"அபத்தம்!" என்று கத்தினான் ஹஹோல். "அவள் மூக்கோ மீன் பிடிக்கிற தூண்டில் முள் மாதிரி இருக்கிறது; கன்னத்தின் எலும்புகளோ கத்தரிக் கோலைப் போலிருக்கிறது; ஆனால் அவள் உள்ளமோ நட்சத்திரம் போல் ஒளிவிடுகிறது. அகத்தின் அழகாவது, முகத்தில் தெரிவதாவது?"

நிகலாய் அவனைப் பார்த்தான்; சிரித்தான்.

அவர்கள் தேநீர் அருந்த உட்கார்ந்தனர்.

நிகலாய் ஒரு பெரிய உருளைக் கிழங்கை எடுத்தான்; ஒரு ரொட்டித் துண்டின்மீது அமிதமாக உப்பைத் தூவிக் கொண்டான். பிறகு மெதுவாக, ஒரு எருதைப்போல், அசைபோட்டுத் தின்னத் தொடங்கினான்.

"சரி, இங்கே நிலைமை எல்லாம் எப்படி இருக்கிறது?" என்று தன் வாய் நிறைய ரொட்டித்துண்டு நிரம்பியிருக்கும் போதே கேட்டான் அவன்.

தொழிற்சாலையில் தங்கள் பிரச்சாரம் எப்படி வலுப்பெற்று வருகிறது என்ற விவரத்தை உற்சாகத்தோடு எடுத்துரைத்தான் அந்திரேய். ஆனால், நிகலாயோ அதைக் கேட்டு மகிழ்வுறவில்லை; சோர்வடைந்தான்.

"ரொம்ப நாள் இழுத்தடிக்கிறது. இந்த ஆமைவேகம் கூடாது. அசுர வேகம் வேண்டும்!"

தாய் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்; திடீரென ஒரு வெறுப்புணர்ச்சி அவள் மனதில் கிளர்ந்தெழுந்தது.

"வாழ்க்கை என்பது குதிரையல்ல; நீ அதைச் சவுக்கால் அடித்து விரட்ட முடியாது!" என்றான் அந்திரேய்.

நிகலாய் தன் தலையைப் பலமாக ஆட்டிக்கொண்டான்.

"எவ்வளவு காலம்? என்னால் பொறுத்திருக்கவே முடியவில்லையே! நான் என்ன செய்வேன்?"

ஏதோ ஒரு பதிலை எதிர்பார்த்து அவன் ஹஹோலின் முகத்தை நிராதரவான பாவத்தோடு பார்த்தான்.

"நாம் அனைவரும் இன்னும் கற்க வேண்டும்; கற்றதைப் பிறருக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அது தான் நாம் செய்ய வேண்டிய காரியம்" என்று தலையை குனிந்தவாறே சொன்னான் அந்திரேய்.

"நாம் எப்போது தான் சண்டைக்குக் கிளம்புவது?" என்றான் நிகலாய்.

"நாம் போருக்குக் கிளம்புவது எப்போது என்பது எனக்குத் தெரியாது. ஆனால், அப்படிக் கிளம்புவதற்கு முன்னால், நாம் நம் எதிரிகளிடம் எத்தனை எத்தனையோ தடவை உதை படத்தான் செய்வோம். அது மட்டும் எனக்குத் தெரியும்" என்று சிரித்துக்கொண்டே சொன்னான் ஹஹோல். "இருக்கிற நிலையைப் பார்த்தால் நமது கைகளைப் பலப்படுத்திக் கொள்வதற்குமுன்னர், நமது மூளையைத்தான் முதலில் பலப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது"

நிகலாய் மீண்டும் சாப்பிடத் தொடங்கினான்; அவனது அகன்ற முகத்தைக் கள்ளத்தனமாக ஓரக்கண்ணிட்டு பார்த்துக் கொண்டிருந்தாள் தாய். அவனைக் கண்டதும் தனக்குள் ஏற்படும் வெறுப் புணர்ச்சியைத் தவிர்ப்பதற்காக அந்தக் கனத்த சதுர உருவத்தில் ஏதோ ஒரு அமைதியைத் தேடுபவள் போலத் தோன்றினாள் அவள்.

திடீரென நிமிர்ந்து நோக்கிய அவனது சிறிய கண்களின் கூரிய பார்வையை எதிர்கொள்ள முடியாமல், அவளது புருவங்கள் நெளிந்தன. அந்திரேய்க்கு அங்கு இருக்கவே நிலை கொள்ளவில்லை. எனவே அவன் வாய்விட்டுச் சிரித்தான்; பிறகு பேசினான். பேச்சை இடையிலே நிறுத்தி விட்டு, சீட்டியத்துக் கொண்டிருந்தான்.

அவனது அமைதியின்மையின் காரணத்தை தாய் உணர்ந்து கொண்டதாகத் தோன்றியது. நிகலாய் வாய் மூடி மௌனியாகி அசையாது உட்கார்ந்திருந்தான். ஹஹோல் ஏதாவது பேசினால் மட்டும் அதை எதிர்த்து வரட்டுத்தனமாக, பொறுப்பற்று, ஏதேனும் பதில் கூறிக்கொண்டிருந்தான் அவன்.

அந்தச் சிறிய அறை அந்திரேய்க்கும், தாய்க்கும் நெரிசலாய் வசதிக் குறையாயிருந்தது, எனவே அவர்கள் இருவரும் ஒருவர் மாற்றியொருவர் தங்கள் விருந்தாளியைப் பார்த்தார்கள்.

கடைசியாக நிகலாய் எழுந்திருந்து சொன்னான்:

"நாம் படுக்கப் போகலாமே, சிறையில் உட்கார்ந்து உட்கார்ந்து பழகிப் போய் விட்டது. திடீரென்று அவர்கள்என்னை விடுதலை பண்ணி விட்டார்கள். நானும் வெளிவந்து விட்டேன். எனக்கு ஒரே களைப்பாயிருக்கிறது."

அவன் சமையலறைக்குள் நுழைந்தான். அங்கு சிறிது நேரம் தூக்கம் பிடிக்காமல் புரண்டு புரண்டு படுப்பது தெரிந்தது. பிறகு சவம் மாதிரி அசைவோ சத்தமோ அற்றுக் கிடந்தான். தாய் அந்த அமைதியைக் கவனித்து விட்டு, பிறகு அந்திரேயிடம் திரும்பி இரகசியமாகச் சொன்னாள்:

"அவன் மனதில் பயங்கரமான எண்ணங்கள் இருக்கின்றன."

"ஆமாம், அவன் ஒரு அழுத்தமான பேர்வழி" என்று தலையை அசைத்துக் கொண்டே சொன்னான் ஹஹோல். "ஆனால் அவன் சரியாகிவிடுவான். நானும்கூட முன்னால் இப்படித்தானிருந்தேன். இதயத்தில் தீக்கொழுந்துகள் பிரகாசிப்பதற்கு முன் முதலில் வெறும் புகைதான் மண்டிக்கொண்டிருக்கும். சரி, நீங்கள் படுக்கப்போங்கள், அம்மா. நான் கொஞ்ச நேரம் உட்கார்ந்து படிக்கப் போகிறேன்."

மூலையிலே துணித்திரைகளுக்குப் பின்னால் மறைந்திருந்த படுக்கையை நோக்கிச் சென்றாள் தாய். வெகு நேரம் வரையிலும் அவளது பெருமூச்சையும் பிரார்த்தனையின் முணுமுணுப்பையும் அந்திரேயால் கேட்க முடிந்தது. அவன் புத்தகத்தின் பக்கங்களை அவசர அவசரமாகப் புரட்டினான்; நெற்றியைத் தேய்த்து விட்டுக் கொண்டான்; தனது நீண்டு மெலிந்த விரல்களால் மீசையைத் திருகிவிட்டுக் கொண்டான்; கால் மாற்றிக் கால் போட்டுக் கொண்டான். கடிகாரம் தன் பாட்டில் சப்தித்துக் கொண்டிருந்தது. ஜன்னலுக்கு வெளியே காற்று முனகி ஓலமிட்டது.

"ஆ! கடவுளே!" என்று தாயின் மெதுவான தணிந்த குரல் ஒலித்தது; "உலகில் எத்தனையோ பேர். அத்தனை பேரும் அவரவர் துக்கத்தால் அழுது கொண்டே இருக்கிறார்கள். அழாமல் இருக்கும் அந்தப் பாக்கியசாலிகள் எங்கே தான் இருக்கிறார்களோ?"

"இருக்கிறார்கள், அம்மா" என்றான் ஹஹோல்; "சீக்கிரமே அவர்களில் பலரை, பல்லாயிரம் பேரை, நீங்கள் காணப்போகிறீர்கள்."

*(தொடர்ந்து வரும்.)*



# எதுவரை?

களுவாஞ்சிக்குடி யோகன்-சுவிஸ்

அப்பாவை நினைக்க ஆத்திரமாய் வந்தது அவனுக்கு. படிப்பு, படிப்பு, படிப்பு எப்போது பார்த்தாலும் படிப்புத்தான். பள்ளிக்கூடம், ரியூசன் கிளாஸ், இரவுவீடு, படிப்பு பின்னர் நித்திரை.

இப்படியே தொடர்கிறது வாழ்க்கை சக்கரம் போல.

சரி, படிப்பதுதான் கட்டாயமென்றால், ஒரு விசேட நாட்கள், திருவிழாநாட்கள், பண்டிகை நாட்கள் எதற்கும் அனுமதியில்லை. படிப்பதுதான் முக்கியமாம்.

இப்படியான நாட்களில் சுதந்திரமாய் விட்டாலென்ன? அப்படியென்ன படிப்புக்கெட்டா போய்விடும்?

உறவினர்வீடு, பக்கத்துவீடு, சிநேகிதன்வீடு அங்கெல்லாம் கிடையவே கிடையாது.

கிட்டத்தட்ட சிறை வாழ்க்கைதான்-கம்பியில்லாச்சிறை.

'பேங்கில்' மனேஜராம் மனேஜர். எப்படி இவருக்குக்கீழ் வேலை செய்கிறார்கள்? எந்த நேரமும் சிடுமூஞ்சி. சிரிக்கவே மாட்டார். ஒரு நாளைக்குச் சிரித்தால் அன்றுதான் அம்மாவிற்குக் கொண்டாட்டநாள்.

கதவருகில் அப்பாவின் செருமல் சத்தம். படிப்பது போல் புத்தகத்தை விரித்திருந்த அவன் உஷாராகின்றான். எதையோ தேடுகிறமாதிரி றூமிற்குள் வருகிறார். அவனை நோட்டம் பார்த்துவிட்டு வெளியேறுகிறார்.

'கொன்றோல்' பண்ணுகிறாராம்.

சின்ன வயதில் தான் இப்படியென்றால் இப்போ பத்தாம் வகுப்பு படிக்கும் போதுமா? இப்படியென்றால் எப்படியாம் படிப்பு வரும்? குடும்பத்தில் அவன் ஒரே பிள்ளை.

அப்படியொன்றும் சலுகைகள் கிடையாது.

ஆரம்பத்திலிருந்தே அப்பாவென்றால் அவனுக்கு வெறுப்பு. அதை ஊட்டி வளர்த்தவரும் அவர்தான். நாலாம் வகுப்புப் படிக்கும்போது ஒருநாள்:

'கிட்டிப்புள்ளு' விளையாடினான். ஒருவன் தடியை அடிக்கும்போது அருகிலிருந்த வீட்டுக் குழந்தையின் முதுகில் பட்டுவிட்டது. குழந்தையின் அம்மா கத்திவிட்டாள். எழுத முடியாத வார்த்தைகளால் திட்டினாள்.

அந்த நேரம் பார்த்தா அப்பா வரணும்?

பிறகென்ன? அடியும், உதையும்தான்.

பலமான அடியொன்று கைவிரலில் பட்டு விரல் எலும்பு முறிந்துவிட்டது.

கொஞ்ச நஞ்சமாயிருந்த அன்பும் அன்றிலிருந்து வெறுப்பாய் மாறியது.

கண்டிப்பு! அப்படியொரு கண்டிப்பு.

இன்றும் கூட மாமா ஊரிலிருந்து வந்திருந்தார். அங்கு கோயில் திருவிழாவாம். இவனை அழைக்க அப்பாவிடம் கேட்டார். "இந்த வருடம் ஓ/எல் பரீட்சை எடுக்கிறான். முடியாது" என்று மறுத்துவிட்டார்.

ஏதோ இதற்கு முதல் விட்டவர்போல் கதைத்தார். இரவு பன்னிரண்டு அடித்தது. சட்டென நினைவுக்கு வந்தவனாய், புத்தகத்தை மூடிவிட்டு நித்திரைக்குப் போனான்.

திங்கட்கிழமை விடிந்தது. பாடசாலைக்குப் புறப்பட்டான். வகுப்பில் ஆங்கிலப்பாடம் நடத்திக் கொண்டிருந்தார் சர்மா மாஸ்டர். அப்பாவின் ஆத்ம நண்பர்.

பாடசாலைப் பியோன் வந்து, "தம்பி உங்களை 'பிறின்ஸ்பல்' கூப்பிடுகிறார்" அழைத்தான்.

'பிறின்ஸ்பல்' றூமிற்குள் நுழைந்தான்.

"சேர்..."

"துஷ்யந்தன் நீர் இப்போ வீட்டுக்குப் போகலாம்"

"எதற்கு சேர்....?"

"நீர் இனி இங்கிருக்க வேண்டாம். புத்தகத்தை எடுத்துக்கொண்டு போம்." கட்டளையிட்டார் அவர்.

வீட்டடிக்குப் போனபோது, கூட்டம் கூடியிருந்தது. அழுகை ஒலிகள். அம்மாவின் கதறல் காதைக் கிழித்தது.

நேற்று இவனைத்திட்டிய அப்பா- இவன் வெறுக்கும் அப்பா-இன்று கட்டிலில் பிணமாகக் கிடந்தார்.

இரத்தக்கொதிப்பாம். வேலையிலிருந்தபோது நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழுந்தாராம். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக முடிஞ்சிதாம்.

அதிர்ந்துவிட்டான். அப்பாவின் மேலிருந்த வெறுப்பு மெதுவாக இறங்கி அழுகை பீறிட்டது.

அப்பா என்று கத்திக் கொண்டு காலடியில் விழுந்தான்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# சுவரில் சில சித்திரங்கள்

ஷர்மிளா இஸ்மாயில்



'கவலைகள்!
பொதுவானவையா? இல்லை எனக்கு மட்டும் சொந்தமானவையா?'

தண்டவாளத்தில் உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தான் ரகு.

இருள். இரவு முற்றியிருந்தது.

நேரம்? தெரியவில்லை.

தெரிந்தும் பயனில்லை.

வீட்டில் தேடுவார்களோ? மாட்டார்கள்!

"ஒழுங்கா ஒரு வேலையைச் செய்யத் தெரியாத பயல். எனக்குன்னு வந்து பொறந்தானே!"–அப்பா.

வேலை செய்த நிறுவன மேலதிகாரியிடம் மனஸ் தாபப்பட்டு, ஆத்திரம் தலைக்கேற, வேலையை உதறிவிட்டு வந்த போது தலையில் அடித்துக் கொண்டு அலறினார்.

"என்னடா இப்படி செய்துட்டியே? வளர்ந்த பிள்ளை கொஞ்சம் நிதானமா இருக்கப் படாது...?"–அம்மா

அவளால் அவனைக் கோபிக்க முடியவில்லை–எப்போதுமே.

அண்ணாவும் தங்கையும் முதலில் அதிர்ந்து பின் அலட்சியப்படுத்தினார்கள்.

"பெரிய இவரு! ஒதறிட்டு வந்துட்டாரு. இங்க கடைல போட்டு வேலை, வேலைன்னு விக்கிறாங்க. போய் வாங்கிக்கலாம் இல்ல?"

குத்தலாய் பேசிய அண்ணன். அவன் அலட்டிக் கொள்ளவில்லை.

அவனது தன்மானம், சுயமரியாதை-அவர்களுக்கு அலட்சியப்படுத்தும் வஸ்துக்கள்.

அவனுக்கு?

தேடினான், மீண்டுமொரு தொழில்.

அலைச்சலே மீதியாயிற்று.

'ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டுதான்'

உணரும் போது அது காலங்கடந்த ஞானமாயிற்று.

காதல் ஒருவித அவஸ்தை. கடன் இன்னொருவித அவஸ்தை. பட்டினி கொடுமையான அவஸ்தை. கவலைகளோ கனமான அவஸ்தை. மனசை உருக்கப் போகும் கொடிய தீ. கவலைத் தீ.

வீட்டுக்குள் காலடி வைத்த போது ஆறிய சோறும் அரைத்தூக்கத்தில் அம்மாவும்

அவனுக்கான காத்திருப்புக்கள்.

பசிக்கவில்லை.

படுத்துக் கொண்டு விட்டான்.

அதிசயமாய் விடிந்தது காலை- காரணம்

நேர்முக தேர்வொன்றுக்கான கடிதத்தோடு சிரித்தான் தபாற்காரன்.

உற்சாகம். புறப்பட்டான்.

பஸ்ஸை விட்டிறங்கினான். தேர்வு முடிந்த நிம்மதி.

வேலை கிடைக்குமா என்பது புதிரான போதும் ஒரு நம்பிக்கை விதை. மனத்தரையில் மெதுவாய்த் துளிர்விட்டது. இப்போது வீட்டிற்குப் போகமனமில்லை.

நடந்தான். மனம் போன போக்கிலே கால் போயிற்று.

வலித்தன கால்கள்.

எங்கே வந்திருக்கிறேன்? தன்னையே வினவிக் கொண்டு நின்றான்.

பின்

பக்கத்தில் நின்ற மாமரத்தின் அடியில் உட்கார்ந்து கொண்டான்.

இரம்மியமான சூழல்.

எங்கும் மரம்செடி கொடிகள். பசுமையைப் பதித்த இயற்கை.

விரிந்த வானம். அதில் திரிந்த பறவைக் கூட்டம். அவற்றிற்கு கவலைகள் இல்லை.

நேரம் கழிவதே பொருட்டாயில்லை.

பாதத்தை சிற்றெறும்பு 'சுறுக்' கென நறுக்க உணர்வு வந்தவனாய் எழுந்தான்.

"கடித்து விட்டாய். அடிக்க மனசில்லை தப்பிப்போ"

விரல்களால் எறும்பைத் தட்டிவிட்டான்.

நடந்தான் வந்த வழியே திரும்பி.

பெரிய வீடு. அலங்கார பூஞ்செடிகள். வாசலில் வாகனம்.

இடையில் அழகோடு காட்சியளித்த அவ்வீட்டை அலட்சியமாய்க் கடக்கையில் கண்ணில் ஒரு காட்சி தட்டுப்பட்டது.

அது பாதையோர வீடு. இரும்பு 'கேட்' வேறு. கண்ணிற்குத் தெரிந்தவன் சின்னப் பையனொருவன். ஒன்பது இல்லை எட்டுக்குள் அடங்கும் வயது.

சுட்டித்தனம் முகமெங்கும் பொங்க,

கரிக்கட்டியோ கறுப்புக் கலர் குச்சியோ கையில் கொண்டு அழகான இளவண்ண வெளிச்சுவர்மீது கீறிக் கொண்டிருந்தான்.

கோணல் கோடுகளாலான ஒரு கார், ஒரு வீடு, ஒரு தென்னைமரம் மற்றும் குச்சிக் குச்சி பிள்ளைகள்..... கற்பனை வடிவம் பெற்றுக் கொண்டிருந்தது.

அப்பா அடிப்பாரே, அம்மா ஏசுவாளே, அண்ணா திட்டுவானே..... போன்ற கவலைகள் அவனுக்கில்லை. கவலை கொள்ளும் வயசில்லை.

"ஷ்.....தம்பி....." எட்டி கூப்பிட்டான். 'கேட்டின்' சங்கிலி "கிலிங்" என்றது.

திடுக்கிட்டுத் திரும்பினான் பையன். பின் புன்னகைத்தான்.

"என்ன அங்கிள்" குறும்பான குரல்.

"அழகான சுவர். கீறினா அம்மா அடிக்கமாட்டாங்க?" கேட்டான்.

சிரித்தான் பையன். "எங்க டீச்சர் தான் சொன்னாங்க 'சுவர் இருந்தாத் தான் சித்திரம் வரையலாம்'னு. அதான் அங்கிள் நான் வரைஞ்சு பாத்தேன். அம்மா அடிச்சா நான் அழமாட்டேன். நான் என்ன குட்டிப் பாப்பாவா அங்கிள்?"

சொல்லிவிட்டு மீண்டும் கீறினான். கண், மூக்கு வைத்த சூரியன். சூரியனும் சிரித்தான். ரகுவுக்குள் சிரிப்பு அலைபொங்கியது.

"அப்பா ஏசினா நான்கூட கவலைப்பட மாட்டேன் இனி. நான் என்ன சின்னப் பையனா?" யோசித்தான். பின் அப்படி தனக்குத் தானே பேசியபடி உற்சாகமாய் நடந்தான் தொடர்ந்து.

# புதிதாயொரு பொருத்தம்

நிர்மலா டீச்சருக்கு நம்ப முடியவில்லை.

டீச்சர் அப்படியே விக்கித்து உறைந்து போகின்றாள்.

இருபத்தியெட்டு வயதுக்குள் இருந்த நிர்மலா டீச்சரின் செழுமையான மெழுகு பொம்மையுடல் அப்படியே வியர்வையில் நனைந்து....உடம்பில் இலேசாய் நடுங்கினாள் அவள்.

அச்சமோ பீதியோ ஏதோவொன்று நரம்பு நாளங்களில் ஊடுருவி....வாய்க்குள் எச்சில் விழுங்க மறுத்தாள்.

'வாசுகி டீச்சருக்கு எய்ட்ஸா?'

நிர்மலாவினால் ஜீரணிக்க முடியவில்லை.

பக்கத்தில் இருந்த சக ஆசிரியையான அவளது தோழி மாலதியிடம் நிர்மாலா கேட்கிறாள்:

"நீ சொல்வது உண்மையா மாலதி?"

"நான் ஏன் பொய் சொல்றேன் நிர்மலா...? நம்ம வாசுகி சடுதியாக ஏதோ உடம்புக்கு முடியாமல் போய் இரத்தம், யூரின் எல்லாம் செக் பண்ணியிருக்காள். அப்போதுதான் அவளுக்கு எய்ட்ஸுன்னு டாக்டர்ஸ் கண்டு பிடிச்சு இருக்காங்க. என்னாலேயும் நம்ப முடியல....." என்ற மாலதியின் கண்களில் நீர் வழிய...

நிர்மலாவின் தலைக்குள் யாரோ சம்மட்டியால் அடித்தார்கள். முதுகு முள்ளந்தண்டில் நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய இரும்புப் பாளத்தை வைத்து உராய்ந்தார்கள். அப்படியொரு வேதனை.

தன் வயதையொத்த தோழி...சக ஆசிரியை வாசுகிக்கு எய்ட்ஸ் என்றால் எப்படி நம்புவது? நேற்றை வரைக்கும் தன்னோடு ஒன்றாய் கலகலப்பாய் இருந்தவள் இன்று....ஒரு எயிட்ஸ் நோயாளியாக....இது எப்படி சாத்தியம்?

மீண்டும் கேட்கிறாள் நிர்மலா.

"இது எப்படி சாத்தியம் மாலதி? அவளுக்கு எயிட்ஸ் வருவதற்கு வாய்ப்பில்லை. அப்படியிருக்க..."

அவளால் பேச முடியவில்லை.

தொண்டை அடைக்கிறது.

மாலதி மெதுவாகச் சொல்கிறாள்:

"அவளோட புருஷன் சுவிட்சர்லாந்துல இருந்து வந்து கொஞ்சக் காலம் ஆகுது இல்லையா? அவரிடமிருந்துதான் வாசுகிக்கு எய்ட்ஸ் கிருமி தொற்றியிருக்கணும்னு டாக்டர்ஸ் சொல்றாங்க நிர்மல்...."

நிர்மலாவினால் தாங்க முடியவில்லை.

பக்கென்று அழுகை வெடிக்கிறது.

கஷ்டப்பட்டு அடக்க முயன்று- தோற்றுப் போய்....

விம்மி விம்மி அழுகிறாள். கூடவே மாலதியும் சேர்ந்து அழ...

நேரம் நழுவிக்கொண்டிருந்தது.

□□

'சரவணப்பொய்கையில் நீராடி
துணை தந்தருள் என்றேன் முருகனிடம்'

வானொலியில் பி.சுசீலா பாடிக் கொண்டிருக்க...

அயர்ச்சியாய் வந்த நிர்மலா வானொலியின் 'வால்யூமைக்' குறைத்துவிட்டு அப்படியே கட்டிலில் சரிந்தாள். உடை மாற்ற வேண்டும் என்றுகூட அவளுக்குத் தோன்றவில்லை. மனதுக்குள் ஒரு பூகம்பம் வெடித்துச் சிதறி....மனம் ஓவென அழுதது.

வாசுகி இவ்வளவு சீக்கிரம் மரணித்துப் போவாள் என்று நிர்மலா எதிர்பார்த்தாளா என்ன?

எய்ட்ஸ் என்றால் அவ்வளவு கொடூரமா?

படிப்படியாக இரண்டு மரணங்கள்...

வாசுகியின் கணவன் மரணித்து சரியாக பதினைந்தாம் நாள் வாசுகி மரணித்துப் போக....

சக ஆசிரியைகள் யதார்த்தமாய்க் குழம்பிப்போக–

அதில் நிரம்பவும் குழம்பினவள் நிர்மலா.

இதோ.... மரண வீட்டுக்குப் போய் இப்போதுதான் திரும்பி வந்து களைப்பாய்–சோர்வாய்-மனதில் ரணங்களோடு....

நிர்மலாவைப் பெற்ற மரகதம் தேநீரோடு வருகிறாள்.

"நிர்மலா...."

"ஏன்மா.....?"

"தேநீர் சாப்பிடும்மா.."

"எனக்குப் பசிக்கல!"

மரகதம் தேநீர்க் கோப்பையை மேசையில் வைத்துவிட்டு, கட்டிலில் மகளின் அருகே வந்தமர்கிறாள். "நிர்மலா......மகள்.."

நிர்மலா சுருதியேயில்லாமல் பார்க்கிறாள்.

"அந்தக் கண்டியில உனக்குப் பார்த்த வரன் சரிவரும்போல இருக்கு. நல்ல எடமாம். ரொக்கம், சீதனம் எதுவும் மாப்பிள்ளை வீட்டார் கேக்கயில்ல; மாப்பிள்ளை என்ஜினியருக்குப் படிச்சிருக்காரு... தவிர லண்டன்ல இருந்து வந்து ரெண்டு மாசமாம்.... கல்யாணத்தை அவசரமாக எடுக்கணும்னு அப்பா சொல்றாரு. அதான் ஜாதகம் பார்த்திடலாம்னு போயிருக்காரு...நீ என்ன சொல்றே மகள்...?"



- மாவனல்லை ரிஸ்கி ஷெரீப் -

நிர்மலாவுக்கு விக்கென்றது.

மவுனமாயிருந்து பின் சொன்னாள்:

"ஜாதகம் பார்க்கிறதெல்லாம் முக்கியமல்லம்மா.ஆனால் அதற்கு முன்னால புதிசாயொரு பொருத்தம் பார்க்கணும்மா. ரெண்டு பேரோடையும் வாழ்க்கைய ஜாதகப் பொருத்தம்தான் நிர்ணயிக்கிறது என்பது அந்தக் காலம். ஆனால் இப்போ எல்லாம் மாறிடுச்சு. முதல்ல.... மாப்பிள்ளையோட இரத்தம் செக் பண்ணி மெடிக்கல் ரிப்போர்ட் கொண்டு வரச்சொல்லுங்க... அப்புறம்தான் ஜாதகமெல்லாம்."

மரகதம் புரியாமல் பார்க்கிறாள்.

"என்ன மகள் சொல்றே?"

"மாப்பிள்ளைக்கு எயிட்ஸ் இருக்கா இல்லையான்னு பார்க்கணும். ஏன்னா இது கலியுகம்மாதிரி....வேறவழியில்லம்மா."

மரகதத்துக்குப் புரிய ஆரம்பிக்கிறது.

# தென்றல் வந்து....

═ எம். சுரேஷ் ═



குளிர்ந்தது. போர்வையால் உடலை இறுக்கப் போர்த்திக்கொண்டு வாசலுக்கு வந்தாள் யுரேகா.... இன்னும் லேசாய்ப் பனி பெய்து கொண்டிருந்தது. பச்சைப் பசேலென்ற மரம், செடி, கொடிகள் எல்லாமே அவளுக்கு ஏதோ ஒரு விதத்தில் எக்கச்சக்கமாய் மகிழ்ச்சியைக் கொடுத்தன.... வாசலோரமாக அடர்த்தியாய் வளர்ந்திருக்கும் வண்ண வண்ணக் குரோட்டன் செடிகளிலும், ரோஜாச் செடிகளிலும் முத்து முத்தாய் ஒட்டிக் கொண்டு ஜொலிக்கும் பனித் துளிகளைத் தொட்டுப்பார்த்தாள். தொட்டதும் விரல் நுனி மட்டுமல்ல உள்ளமும் ஜில்லென்றது! அப்படியே அந்தத் தோட்டம் முழுவதும் துள்ளித் துள்ளி ஓடவேண்டும் போல் இருந்தது. ஏன் இந்தத் திடீர் மகிழ்ச்சி? புரியவில்லை. நமக்குப் புரியாமலே நமக்குள் எத்தனை எத்தனை மாற்றங்கள் நிகழ்கின்றன.!

எப்படியோ இந்த இடம் அவளுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. இந்த இயற்கை, நாகரிகம் என்று அலங்கோலம் செய்யாத மனிதர்கள், கள்ளம் கபடமற்ற பேச்சுக்கள்.... அனைத்துமே, நகரத்து வாழ்க்கை வாழ்ந்து சலித்துப்போன யுரேகாவுக்குச் சொர்க்கமாய்த் தெரிந்தது. ஆகவே இந்த மாற்றத்தை இரசித்தாள், அழகை இரசித்தாள், தன்னால் இயன்றவரை இந்த அப்பழுக்கற்ற இயற்கையை இரசித்தாள்.

நேரம் கரைந்தது. இனி விரைவாக நாம் இவ்விடுதியைவிட்டு வெளியேறி விடுவோம். இந்தக் குளிர்பிரதேசத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு இன்று மாலையே மீண்டும் நாம் நகரத்தை நோக்கிப் புறப்பட்டுவிடுவோம்.... நினைக்கும் போது லேசாய் ஒரு சோகம். இந்த மரங்களையும், செடிகளையும், விட்டுப்பிரிய அவளுக்கு மனமில்லை. அழுகைவரும்போலிருந்தது.

"ச்சே! இந்த சோகத்தை என்னோடு பகிர்ந்து கொள்ள இங்கு யாருமே இல்லையே" யுரேகாவின் மனம் சஞ்சலப்பட அவளின் இடதுபுறத் தோளில் மிக மிகக் குளிர்ச்சியான ஒரு கரம் மென்மையாய்ப் பதிந்தது. திடுக்கிட்டுத் திரும்பினாள்– தென்றல்!!

# துணிவு

இடம், வெள்ளவத்தை கடற்கரை ஓரம்.

ஆக்ரோசமாய் அலையெழுப்பிக் கொண்டிருந்தது கடல். நேரம் மாலை ஆறுமணியைத் தாண்டியிருந்தாலும் இருட்டு பூமியெங்கும் கவ்விப் பிடித்திருந்தது.

ப்ரியாவின் முகம் அழுதழுது வீங்கிச் சிவந்திருந்தது. அவள் முரளியின் மடியில் தலைசாய்த்து அழுதுகொண்டிருந்தாள்.

"ப்ரியா ஏன் அழுவுறே?" ஆதரவாய் தடவிவிட்டபடி கேட்டான்.

"என்ன முரளி இதைத்தவிர வேறு வழியே இல்லையா?" மென்மையான குரலில். அவள். குரலில் ஏக்கமும் தெரிந்தது.

"இல்ல ப்ரியா, நம்ம காதல் நிறைவேறாதிங்கிறது நமக்கு தெளிவா தெரிஞ்சி போச்சி. இந்தச் சந்தர்ப்பத்தில நாம தற்கொலை செய்யிறத தவிர வேற வழியே இல்ல!" அவன் குரலும் கரகரத்தது.

அவள் மீண்டும் விம்மி அழுதாள்.

அவன் கடலை வெறிக்கப்பார்த்துக் கொண்டிருந்தான்.

"இந்தா பாரு ப்ரியா, நீயில்லாம என்னால வாழ முடியாது. ஆனால் நீயும் என்னோட சேர்ந்து சாகணுங்கிற கட்டாயமில்ல! நீ நெனச்சா கூட.....!" அவன் முடிப்பதற்குள் தன் கைகொண்டு வாய் பொத்தினாள்.

"ப்ளீஸ் முரளி அப்படிச் சொல்லாதீங்க...நீங்க இல்லாம என்னாலயும் உயிர் வாழ முடியாது." அவளின் உண்மையான அன்பைக் கண்டு நெகிழ்ந்து போனான். அவளை ஆவேசமாய் இழுத்தணைத்து முத்தமிட்டான். அவளும் அவனுக்கு இடம் விட்டு ஒத்துழைத்தாள்.



முரளி விஷக்குப்பியை கைகள் நடுநடுங்க கையில் எடுத்து கண்ணீர் மல்க வாயில் ஊற்றத் தொடங்கியிருந்தான். பட்டென அதனைப் பிடுங்கி எஞ்சியதைத்தானும் வாயில் ஊற்றிக் கொண்டாள் ப்ரியா.

ஆனால், இருவரின் முகத்திலும் பட்டென ஆச்சரிய ரேகைகள்...மனம் குழம்பிப்போனார்கள். குப்பியில் விஷம் இருக்கவில்லை. யாரோ குப்பியை உடைத்து தண்ணீர் நிரப்பி வைத்திருந்தார்கள். முரளிக்கு ஒன்றுமே புரியவில்லை.

பட்டென நிமிர்ந்த முரளி தூரத்தே தெரிந்த வெள்ளவத்தை புகையிரத பாதையை நோக்கினான், அங்கே நண்பன் குமார் ஓடி வருவது தெரிந்தது. அருகில் வந்தவன் ப்ரியா கையில் வைத்திருந்த விஷக் குப்பியைக் கண்டு பட்டென சிரித்தான்.

"ஏண்டா...மடத்தனமா நடந்துக்கிறே? காதல் நிறைவேறலங்கிறதுக்காக தற்கொலை செய்துகிட்டா மட்டும் சரியாப் போயிடுமா? துணிஞ்சி வாழ துணிவில்லாத நீயெல்லாம் ஏன்டா காதலிக்கிறீங்க? நீ விஷம் வாங்கினது மட்டும் எனக்குத் தெரியாம இருந்திருந்தா உங்க நிலம என்னவாயிருக்கும்...?" அவன்

ஹப்புத்தளையூர் எப். லெனாட்குமார்

பேசிக்கொண்டே போனான்.

"ரெண்டு வீட்டுலயும் எதிர்ப்புத்தான். அது அவுங்க உரிமை, அதுக்கா இத்தனை வருஷமாக் கஷ்டப்பட்டு வளர்த்த பெத்தவங்கள விட்டுப்புட்டு தற்கொலை செய்துக்கிறது மடத்தனம். ரெண்டு பேரும் வேலை செய்யுறீங்க...ஏன் உங்களால துணிஞ்சி உயிர் வாழ முடியாது. வாங்க ரெண்டுபேரும் வீட்டுக்குப் போவம்! உங்க ரெண்டு வீட்டுலயும் விஷயத்தச் சொல்லி ஒரு மாதிரி சம்மதிக்க வச்சிட்டேன். அதோ பாரு அவங்களே பதறிக்கிட்டு வாராங்க...."

தூரத்தே இரு வீட்டாரும் பதறிக் கொண்டு வருவது தெளிவாகத் தெரிந்தது.

இப்போது முரளியும் ப்ரியாவும் கைகளை கெட்டியாகப் பிடித்து கோர்த்துக் கொண்டார்கள்....மனதில் பிறந்த புதிய துணிவுடன்....!

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்ட

# கண்கள் செய்த பாவம்

தருவது - ரசிகன்



ஆற்றுக்குள் குளித்துக் கொண்டிருந்தன தாமரைகள் இரண்டு.

ஒருத்தி தேன்மொழி, அடுத்தவள் தோழி. ஆற்றுநீரும் சற்றே வெப்பமானது அவர்கள் பூமேனியில் புரண்டு சென்றதால்!

தோழி சொன்னாள்;

"பாரடி தேன்மொழி; வெட்கமேயில்லையடி இந்த ஆற்று வெள்ளத்திற்கு!"

"ஏனடி?"

"எங்கெல்லாம் தொட்டுச் செல்கிறது பார்த்தாயா. ஆனாலும் உன் காதலரைவிட ஆற்று வெள்ளத்துக்கு அசாத்திய துணிச்சல் அதிகமடி."

தேன் மொழிக்கு தோழியின் கிண்டலில் கலந்து கொள்ளும் மனநிலை இல்லை. ஆனாலும், தோழிக்கு தன் மனநிலை தெரிந்து விடக்கூடாதே என்பதால் இடைக்கிடையே கேள்விகளை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தாள்.

"ஏனடி அப்படிச் சொல்கிறாய்?"

"எவராவது கண்டுவிடுவார்களோ என்று பயந்து பயந்து தானே உன் காதலர் வந்து தழுவுகிறார். ஆனால் இந்த ஆற்று வெள்ளமோ எவர்பார்த்தால் எனக்கென்னவென்று பகிரங்கமாகவே பரவிச் செல்கிறதே! துணிச்சல்தானே? சொல்லடி தேன்மொழி!"

"ஆமாமாம் துணிச்சல்தான்."

"என்ன ஆமாமாம்; துச்சாதனன் பாஞ்சாலியின் துகிலை தொட்டிழுத்தானே, அதன் பெயர் என்ன துணிச்சலா? ஆமாமாம் சொல்கிறாளாம் இவள் ஆமாம்."

தேன்மொழிக்கு எதுவும் புரியவில்லை. தன் தோழியை விழிகள் அகலப் பார்த்தாள். கேட்டாள்;

"ஏனடி, நீதானே துணிச்சல் என்று ஆற்று வெள்ளத்தைப் போற்றிச் சொன்னாய். இப்போது என்னைத் தூற்றிப் பேசுகிறாயே, இது என்னடி நியாயம்?"

"நீ எங்கிருக்கிறாய் என்று அறியவைத்தேனடி ஒரு பரீட்சை, இங்கில்லை உன் சிந்தை, மேய்ப்பானின் பின் செல்லும் மந்தை ஆடுபோல, இன்பத்தில் உன்னை தோய்ப்பானின் பின் சென்றுவிட்டதடி உன் சிந்தை.!"

என்றாள் தோழி.

"போதும் உன் ஆராய்ச்சி போகலாம் வாடி."

தேன்மொழி அழைக்கத் தோழி நகைத்தாள். ஆற்றுநீரை கைகளில் வாரி தேன்மொழி மீது அடித்தாள்.

"ஏனடி நகைக்கிறாய்?"

"எடுத்து எடுத்து கொடுத்து, கொடுத்துக் கொடுத்து எடுத்து, நிலவின் வெளிச்சம் எடுத்து இரவை பகலாய் நினைத்து, தூக்கம் விழியால் தொலைத்து அவரும் நீயும் நடத்தும் ஆராய்ச்சிதானேயடி உனக்கு விருப்பு, அதனால்தானே என் பேச்சு உனக்கு கசப்பு."

"சண்டை நடத்தவென்றே வந்தாயோ?"

"சொற் சரம் தொடுத்தால் வெடித்த பருத்திபோல் முன்பெல்லாம் சிரிப்பாய், முகமெல்லாம் மலர்ந்து சிவப்பாய்; இப்போதெல்லாம் கொதிக்கும் தாழியின் எண்ணெயில் போட்ட கடுகுபோல் வெடிக்கிறாய்! சொற்சரம் இனிப்பிடிக்காது, அவர் பொற்கரம் மேனியில் தொடும் பொழுதுகளே இனிக்கும்."

தோழி பேச, தேன்மொழி சலித்துக் கொண்டாள்.

தோழி அத்தோடு விட்டாளா? அதுதான் இல்லை. கேலி செய்வதே ஆனந்தம் என்று நினைத்தாள் போலும்.

"ஏனடி சலித்துக் கொள்கிறாய். களித்துக் கொள்ள காதலர் கிடைத்ததும் புளித்துப் போனதோ எந்தன் நட்பு? தப்புத்தானடி, தோப்புக் கனிகள் பழுக்கும் வரைதான் மரத்தில் இருக்கும், பழுத்த பின்னர் சுவைக்கக் கொய்தவர் கரத்தில் தானே தங்கியிருக்கும்."

"அடி போடி, உனக்கு வேறு வேலையே இல்லை."

"எனக்குத்தான் ஒரு காளையே இல்லையே!"

"பொறாமைதானே அதுதான் பெருமூச்சு!"

## இலக்கிய நயம்

"பொறாமையல்லடி, காதலர் ஒருவரைப் பெறாமையால் வந்த மூச்சு!"

"குத்தல் பேச்சில் குறைச்சலில்லை"

தேன்மொழி தன் தோழியின் செவியில் பிடித்துத் திருகினாள். செந்தேன் சிந்தும் இதழ் மலரப் புன்னகைத்தாள்.

"கண்டேன், கண்டேன் மின்னல் கண்டேன். கன்னல் மொழியைப் பேசும் பெண்ணே, கொள்ளையாகும் காளையர் இதயம் உன் மின்னல் சிரிப்பைக் கண்ணால் கண்டால்!"

"மீண்டும் ஆரம்பித்து விட்டாயா உன் பல்லவியை."

"பல்லவி அல்ல மல்லிகைப் பெண்ணே, மூட மறந்து வண்டுவருமோ என்று தேடும் உந்தன் நீல விழிகளைத் தூங்கச் செய்ய தோழி என் தாலாட்டு."

"தூங்கவில்லை என்று உனக்கு சொன்னது யாரடி?"

"வேல் முனையில் துருப்பிடித்தால் வேறு யாரும் சொல்லித்தான் தெரிய வேண்டுமோ? உன் வேல் விழியின் கீழ் இருக்கும் கருவரிகள் கண்டபின்னும் தூக்கம் உண்ணவில்லை உன் விழிகள் என்று சொல்லித்தான் அறிய வேண்டுமோ?"

"அப்படியொன்றும் நாங்கள் ஏங்கிக் கொண்டிருக்கவில்லை."

"ஏங்கவில்லை சரிதான், தேன் குடத்தில் தேங்கிக் கொண்டிருக்கிறதே இனிமையெல்லாம்! அருந்த வாராரோ, பறந்து வாராரோ என்று செண்டுவிழிகள் வண்டவனைத் தேடும் நிலை இருக்காதோ?"

தேன்மொழி ஒரு பெருமூச்செறிந்தாள்.

"மறைப்பான் ஏனடி, மனம் பதைக்கும்தானடி."

"அப்படிச் சொல்லடி! நீ தயங்க, அவர் நெருங்க, நீ ஒதுங்க, அவர் மயங்க, நீ விரும்ப, மோகமென்னும் நோய்தீர ஒருவருக்கொருவர் மருந்தாக, மருந்தே விருந்தாக, கரும்பே நினைவாக, பொழுதே புலராதே என்று நினைக்கும் மனதாக இருந்தநாள் எண்ணி விழிகள் இரவெல்லாம் விழித்திருக்கும்; அது தானே உண்மை."

"அனுபவப்பட்டதுபோல் அளக்கிறாயே!"

"போடி கள்ளி, எனக்கிருப்பது கேள்வி ஞானம், ஆனால் உனக்கிருப்பதோ இன்ப வேள்வியால் பெற்ற ஞானம்."

"உனக்கும் வேள்வி வரும்."

"வேண்டாமடி வேள்வி, பின்னர் உன்னைப்போல தூக்கத்தைத் தேடித் தேடி எனக்கும் வருமடி தோல்வி!"

"உனக்கென்னடி தெரியும், மலருக்கு மரகந்தம் பாரமா? தேனுக்கு சுவை பாரமா? பாலுக்கு வெண்ணை தொல்லையா? வானுக்கு நிலவு பாரமா? அதுபோலத்தானடி மனதுக்கு நினைவும்; நினைவுக்கு அவரும்!"

"சோக நினைவென்றால் பாரம் தான் சொக்கும் நினைவுகள் என்றால் சுகம்தான்!



விழித்திருப்பது சரிதான் அவர் வந்த பின் விழிகள் தூக்கத்தை காண்பது முறைதான்!"

தோழி சொல்ல தேன்மொழி நகைத்தாள்.

"ஏனடி நகைப்பு?!"

"அனுபவம் இல்லை உனக்கு என்பது சரிதான்."

"ஏனடி?"

"விழிகள் உறங்க நினைவுகள் தடை இப்போது; நேரில் அவர் வந்தால், போரில் நாம் குதிப்போம்; இணைவுகள் தடையாகும் விழிகளுக்கு அப்போது! பாவமடி என் கண்கள்!" சொல்லிவிட்டு முகத்தை மூடிக் கொண்டாள். அவள் வெட்கத்தில் பாதி வந்து தோழியிடமும் ஒட்டிக்கொண்டது.

காதலில் சிக்கிய பாவையின் கண்கள் படும் வேதனையைத்தான் திருவள்ளுவரும் சொல்கிறார்.

**வாராக்கால் துஞ்சா வரின் துஞ்சா ஆயிடை**
**ஆரஞர் உற்றன கண்.**

அதிகாரம் 118. பாடல்-1179

## குறுக்கெழுத்துப் போட்டி இல—106

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | ■ | 3 | | 4 |
| 5 | | | ■ | | ■ | |
| | | ■ | 6 | ■ | 7 | |
| | ■ | 8 | | | | |
| ■ | 9 | | | | | ■ |
| ■ | ■ | | ■ | ■ | ■ | 10 |
| 11 | | | ■ | 12 | | |

### இடமிருந்து வலம்

01. கோடைகாலங்களில் இது அடிக்கடி எடுக்கும்.
03. குளிருக்கு இதைத்தான் தேடுவார்கள்.
05. வண்டியில் பூட்டும் விலங்குகளுக்கு இது அடிக்கப்படும்.
08. இது பெரிதாக இருந்தால் தூக்குவது சிரமம்.
09. நெருக்கம் என்றும் சொல்லலாம்.
11. பாரி தேர் கொடுத்தது.
12. ராகங்களில் ஒன்று.

### மேலிருந்து கீழ்

01. இதைக் கேட்டுக் குழந்தைகள் தூங்கும்.
02. இது அன்பை முறிக்கும் என்பார்கள்.
03. அரச மரத்தின் மறுபெயர்.
04. நெற்பயிரில் இருந்து இதுவும் கிடைக்கும்.
06. சிறுவர்கள்.
07. மழைக்காலத்தில் சில வீதிகள் இப்படியும் இருக்கும்.
08. இங்கு மாணாக்கரே அதிகம் இருப்பர்.
10. பாம்பிற்கு பகை.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 01.07.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-106
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-104ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1ப | ந் | 2த | ய | ம் | ■ | 3ம |
| ணி | ■ | 4க | ர் | ப் | 5பி | ணி |
| 6வி | மா | ன | ம் | ■ | ர | ப் |
| டை | ■ | ம் | ■ | 7அ | ம் | பு |
| ■ | 8மு | ■ | 9அ | ■ | பு | ரி |
| 10பு | த் | த | க | ம் | ■ | ■ |
| ■ | து | ■ | 11தி | யா | ன | ம் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 104இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.**

1. திருமதி.எஸ். சரோஜாதேவி, கொழும்பு-6
2. ஆர். தனேஷ், தெஹிவளை.
3. எம். பஸீர், பாணந்துறை.
4. செல்வி.ஏ. நர்ஷிதா, அக்கரைப்பற்று-4
5. எம். அன்வர், குருநாகல்.
6. எஸ். செந்தூரன், நுவரெலியா.
7. செல்வி. மணிகோபால சுமித்ரா, கலகெடிஹேன.
8. செல்வி. பாத்திமா சக்கீலா, புத்தளம்.
9. பி. சுகன்யா, வவுனியா.
10. கே. ராதா கிருஷ்ணன், கண்டி.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.



**சந்தோசமான செய்தி ஒன்று, துக்கமான செய்து ஒன்று, எங்கே சொல்லுங்கள் பார்க்கலாம்?**

வி.நாகராஜ்-ஹட்டன்.

*சந்தோசமான செய்தியா,நம் நாட்டிலா? என்று தலையைச் சொறிய நினைத்தபோது கண்ணில்பட்ட செய்தி; அழகி ஐஸ்வர்யா ராய் வருகிறார். துக்கமான செய்தி, வரும் ஐஸ்வர்யா ராய் திரும்பிப்போய் விடுவாரே. (இவ்வளவு முக்கியமான விவகாரமெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறேனே என்று பிரமிப்பாய் இருக்கா.)*

□□

**அடேங்கப்பா என்று நீங்கள் வியந்தது எப்போது சிந்தியா?**

ஏ.சரோஜினி-நுவரெலியா.

*சமீபத்தில் வியந்தது ஒரு அபூர்வ புகைப்படத்தைப் பார்த்து. அட, யார் இந்த புஷ்டியான குட்டிப் பயல் என்று விழிகளை விரித்தால், அடடே பிரபு. நீங்களும் பாருங்கள்.*



சிறுவயதில் பிரபு

**கவிஞர் வைரமுத்து பற்றி சுருக்கமாக 'சுருக்'கென்று ஒரு அபிப்பிராயம் சொல்லுங்கள்?**

ஆர்.சி.மதியழகன்-திருக்கோணமலை.

*அவரது மீசையைப்போலவே கற்பனையும் அடர்த்ததிதான் சில நேரம் வருடும், சில நேரம் உறுத்தும்.*

□□

**சந்தனச் சிலை என்று பெண்களை வர்ணிப்பது ஏன்?**

எம்.பாத்திமா-புதியகாத்தான்குடி.

*வீரப்பன்ரகத்தினர் வர்ணித்தால் கடத்திச் செல்ல திட்டம் என்று அர்த்தம். நேசத்தால் வர்ணித்தால் சிலையில் கலை வண்ணம் காண நினைப்பதாக அர்த்தம்.*

□□

**நீங்கள் படித்ததில் பிடிக்காத கவிதை ஒன்று சொல்லுங்கள். எங்களுக்கு பிடிக்கிறதா என்று பார்க்கலாம்?**

எல்.நூர்தீன்-புத்தளம்.

"அவள்
குனிந்து
கோலம் போட்டாள்
அவன்
இதயம்
அலங்கோலமானது." *(இதெல்லாம் கவிதையா? கொலை)*

□□

**நரகாசுரன் ஒழிந்துவிட்டான் என்கிறார்களே, நரகாசுரர்கள் பலர் உருவாகி வருகிறார்களே எப்போது ஒழிவார்கள்?**

எஸ்.கணேசமூர்த்தி-மட்டக்களப்பு.

*ஏன் கணேசமூர்த்தி நீங்கள் வருடத்தில் எத்தனை தீபாவளி கொண்டாட ஆசைப்படுகிறீர்கள். செலவு தாங்குமா.*

**காத்தான்குடியில் புலிகள் முஸ்லீம் களை மிரட்டியதை முரசு ஏன் கண்டிக் கவில்லை? பயமா? அல்லது பக்கச் சார்பா?**

மா.ரவீந்திரன்-கொழும்பு-11.

*புலிகள் மிரட்டியதாக யார் சொன்னது உமக்கு, முரசின் காதில் பூ கிடையவே கிடையாது. புரளிகளை வளர்த்து முரைசு பூச்சாண்டி காட்டாது ரவீந்திரன்.*

□□

**வசிய சக்தி என்கிறார்களே, விஷயம் இருக்கிறதா? நம்புகிறீர்களா?**

கா.மாதவி-நீர்கொழும்பு.

*வசீகரத்தை நம்பலாம். வசீகரம் என்பது மனதில் உள்ள தன்னம்பிக்கையால் வருவது. வசியம், மாயம், மந்திரம் எல்லாம் தன்னம்பிக்கை குறைவானோர் நாடிச் செல்வது.*

□□

**இன்றைய உலகில் வஞ்சகம், சூது இல்லாத மனிதர் ஏன்று துணிந்து சொல்லக்கூடிய ஒருவர் யார்?**

எல்.எம்.ரஹீம்-மதவாச்சி.

*இப்போதுதான் பிறந்திருக்கும் குழந்தை.*

□□

**அரசியல்வாதிகளின் முகமூடிகளை எப்படிக் கிழிக்கலாம்?**

மு.மனோரஞ்சனி-வவுனியா.


*அதற்கு ஒரேயொரு ஆயுதம்தான் இருக்கிறது. அது, பகுத்தறிவு!*

□□

**நல்ல ஜோக் ஒன்று எடுத்துவிடுங்கள் பார்க்கலாம்?**

எஸ்.கீதா-அவிசாவளை.

*பார்க்கலாம் என்றா விரும்புகிறீர்கள். சரி, இதோ, பாருங்கள்.*



# மகாபாரதம்

அங்கம் 84

இவ்வாரம் (25.06.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்
குருச்சேத்திரப் போர்முனையின் கோடியொருபுறத்தே
குருவம்சக் கோமகனார் குற்றுயிராய்க் கிடக்கின்றார்!
கொழுந்து விட்டே எரிகின்ற கோரத் தீப்பிளம்பினுள்ளே
குலக்கொடியின் கொழுந்தொன்று கருகிச் சிதைகிறது!
பாரதவம்சத்தின் பெருமைக்குரியவர்கள்
வீரவிளையாட்டில் வெந்துமடிகின்றார்.
பொருதுகின்ற வீரர்களின் அருமைமிகு அன்னையரோ
செருக்களம் சென்றவரை நினைத்து கண்ணீருதிர்க்கின்றார்!

—காட்சி மாற்றம்—

அஸ்தினாபுரம்-குந்தியின் அந்தப்புரம்-குந்தி அமைதியின்றி அல்லற்படுகிறார். காந்தாரி அங்கு வருகிறார்.

காந்தா: குந்தி....! ஏன் இன்னும் தூங்காதிருக்கிறாய்?

குந்தி: தூக்கம் வரவில்லையே அக்கா......

காந்தா: போர்க்களத்துக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பி வைத்துவிட்டு எந்தத் தாயாலதான் , நிம்மதியாக இருக்க முடியும்....? வா இருவரும் ஒன்றாகப் பிரார்த்தனை செய்யலாம். என்னுடைய பிள்ளைகளின் சுகத்துக்காக நீயும் உன்னுடைய பிள்ளைகளின் சுகத்துக்காக நானும் பிரார்த்திப்போம்....! யாராவது ஒருவருடைய வேண்டுதல்தான் பலிக்கும்.....! அழாதே குந்தி....!

குந்தி: ஏனோ தெரியவில்லை அக்கா..காலையிலிருந்தே என் கண்கள் கண்ணீரைச் சொரிகின்றன. இன்று ஏதோ அசம்பாவிதம் குருச்சேத்திரத்தில் நடந்திருக்கலாம் என்றே என் மனம் சொல்லுகிறது......!

காந்தா: துயரம் சூழ்ந்த காலகட்டத்தில்தான் நாம் இப்போதிருக்கிறோம். எனது கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொள்கிறேன். வேறு நம்மால் என்ன தான் செய்ய முடியும்?

குந்தி: என்னால் முடியவில்லையே அக்கா... ஆண்டவா! பாரத வம்சத்தை நீதான் காத்தருள வேண்டும்.

—காட்சி மாற்றம்—

குருச்சேத்திரம்-அம்புப்படுக்கையில் கிடக்கும் பீஷ்மரிடம் அர்ச்சுனன் வருகிறான்.

அர்ச்: வணக்கம் பிதாமகர் அவர்களே.....!

பீஷ்ம: வா மகனே.....! (அர்ச்சுனன் அருகே சென்று விம்முகிறான்) ஏதாவது கூறு மகனே....!

அர்ச்: துயரமான சம்பவம் பற்றிக் கூறுவதற்கு ஏற்ற வார்த்தைகள் வாயில்வர மறுக்கின்றன பிதாமகர் அவர்களே.....!

பீஷ்ம: என்னிடம் ஏதாவது கூற வந்தாயா அல்லது அறிவிக்க வந்தாயா மகனே....?

அர்ச்: தங்களுடைய கொள்ளுப் பேரனான எனது அன்பிற்குரிய மகன் அபிமன்யு வீர சொர்க்கம் சேர்ந்து விட்டான் என்ற சேதியைக்கூறத்தான் வந்தேன் பிதாமகர் அவர்களே.....!

பீஷ்ம: அப்போ நமது நாலாவது சந்ததியையும் பேரழிவு தொட்டுவிட்டதா.....? அவனை யார் கொன்றார்கள் மகனே......?

அர்ச்: ஆச்சாரியார் துரோணர், குலகுரு, குருதேவரின் மகன் அஸ்வத்தாமன், துரியோதனன், சகுனி, துச்சாதனன், தேரோட்டி மகன் கர்ணன் ஆகிய ஏழுபேரும் சேர்ந்தே என் மகனைக் கொன்றார்கள் பிதாமகர் அவர்களே......!

பீஷ்ம: ஏற்கனவே விதித்த விதியின்படி, ஒரு வீரனுடன் மற்றோரு வீரன் மட்டும் தானே பொருத முடியும்?

அர்ச்: அது தாங்கள் கவுரவப் படையின் தளபதியாக இருக்கும் வரைதான்...! குருசிரேஷ்டர் சக்கரவியூகத்தை அமைத்தார். அபிமனயு அதனுள் நுழைந்ததும், தன்னந்தனியனாகப் போரிட்ட அவனை அந்த ஏழு கோழைகளும் ஒன்று சேர்ந்து கொன்றுவிட்டார்கள் பிதாமகரே....! அபிமன்யுவுக்கு உதவ எவரும் செல்ல முடியாமல் தடுத்தவன் ஜயத்ரதன்.

பீஷ்ம: மகனே என்னுடைய கண்ணீரையும் துடைத்துவிடப்பா.....ஒரு சிறுவனை அத்தனை பேரும் சேர்ந்து தாக்கிக் கொல்லுவது வீரச் செயல் என்று கருதிவிட்டார்களா.....? கோழைகள்....! அவர்களை மன்னித்துவிடு மகனே. உண்மையில் இந்தக் கொலைக்குச் சூத்திரதாரி அந்த ஜயத்ரதன்தான்! அந்தச் சிறுவனுக்கு உதவிகள் செல்ல முடியாமல் தடுத்தவன் அவன்தான்! அவனுக்கு மன்னிப்பளிக்கக் கூடாது. அபிமன்யு நிச்சயாக வீரத் தியாகிதான். உத்தரையிடம் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் கூறிவிடு மகனே....!

—காட்சி மாற்றம்—

திரௌபதியின் கூடாரம்-படுத்திருக்கிறாள், ஆனால் உத்தரை விழித்துக் கொண்டிருக்கிறாள்-ஒளி தெரிகிறது-அதனை நோக்கி உத்தரை எழுந்து செல்கிறாள். இதனைக் கண்ட திரௌபதி பின் தொடர்கிறாள்.

திரௌ: எங்கே செல்கிறாய் மகளே.....?

உத்த: பொழுது புலர்ந்து விட்டது அத்தை....அவர் இன்னும் எழுந்திருக்கவில்லையே.....?

திரௌ: தைரியமாக இருக்கக் கற்றுக்கொள் மகளே! சாதாரணமானவர்களைப் போல் வீரர்கள் சாவதில்லை! அவர்கள் வீர சொர்க்கம் அடைகிறார்கள்....! உன்னைக் கட்டுப்படுத்திக்கொள் மகளே! அபிமன்யுவின் வாரிசை உன் வயிற்றில் சுமந்து கொண்டிருக்கிறாய்...... அக்குழந்தையைப் பாதுகாப்பது உன் கடமை....! பாரத வம்சத்தின் வாரிசு அது! நீ பாரதத்தின் எதிர்காலத்தையே சுமக்கிறாய்..! உன் குழந்தையைப் பாதுகாப்பதற்கு வேண்டிய திடத்துடன் நீ இருக்க வேண்டுமல்லவா.....?

உத்த: போர்க்களத்துக்குப் போவதற்கு நேரமாகிவிட்டதே அத்தை.... ஒரு போர் வீரன் இவ்வளவு நேரம் தூங்கலாமா.....? நான் போய் அவரை எழுப்பப் போகிறேன்!

திரௌ: மகளே.....! நேற்றையப் போரில் அவன் களைத்துப்போய்விட்டான். அவன் இன்னும் கொஞ்ச நேரம் களைப்புறட்டும்.....!

உத்த: இல்லை அத்தை....அவரை எழுப்பாதிருந்தால் ஏனைய சத்திரியா யினிகள் என்ன நினைப்பார்கள்? அவரை போர்க்களத்துக்கு அனுப்பத்தான் வேண்டும்! வாசுதேவ கிருஷ்ணரின் மாணாக்கரை எவரால் எதிர்க்க முடியும்?

திரௌ: உண்மைதான் மகளே......! நான் போய் எழுப்பட்டுமா?

உத்த: இல்லை அத்தை..... கணவனை தூக்கத்திலிருந்து எழுப்புவது ஒரு மனைவியின் கடமை அல்லவா?

—காட்சி மாற்றம்—

பாண்டவர் பாசறையில் அபிமன்யுவின் சடலம் கிடத்தப்பட்டிருக்கிறது. (உத்தரையின் கண்களுக்குத் தோன்றும் பொய்த் தோற்றம்) விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அபிமன்யுவின் ஆயுதங்களும் அங்கே வைக்கப்பட்டுள்ளன. உத்தரை அங்கு வருகிறாள்.

உத்த: ஓ சந்திரவம்சத்திலுதித்த வெற்றி வீரனான சூரியகுமாரனே..! எழுந்திருங்கள்......! போர்க்களம் போக நேரமாகிவிட்டது! போர் வீரர்களெல்லாம் புறப்பட்டுச் செல்கினறனர். இன்று தாங்கள் இத்தனை நேரம் தூங்குவது விந்தையாக இருக்கிறது. அது சரி படுக்கையின் மீது படுக்காமல் இன்று ஏன் கீழே படுக்கிறீர்கள்.....?

திரௌபதி அங்கு வருகிறார்.

உத்த: (அழுதுகொண்டே) எழுந்திருங்கள் நாதா....! அத்தை! ஏன் அவர் என் சொல்லைக் கேட்கிறாரில்லை? பார்த்தீர்களா அத்தை.....? அவர் எழவே யில்லை....!

திரௌ: என் மகளே.....! இனி அவன் எப்போதும் எழவே மாட்டான்....

உத்த: ஏன் அத்தை.....? ஏன்? உண்மையில் நான் விதவையாகிவிட்டேனா.......? இல்லை....இல்லை.....அவ்வாறு ஒருகாலும் ஆகாது......! (அழுகிறாள்)

திரௌ: அழாதே என் மகளே.... நேற்று போர்முனையில் உண்மையும் தர்மமும், உன்னையே கடனாளியாக்கிவிட்டன. இவ்வுலகம் உள்ளவரை மகளே... உன்னை சுமங்கலிகள் ஏறறிப் போற்றுவர்....!

உத்த: தாயே....நான் இனிமேல் உயிர்வாழ மாட்டேன்......!

திரௌ: என் மகளே....உன் வயிற்றில் வளரும் அபிமன்யுவின் மகனுக்காக நீ உயிர்வாழத்தான் வேண்டும்.... போரில் இலாபத்தைவிட நஷ்டமே அதிகமாகும் என்பதனால்தான் போரை எல்லாரும் வெறுக்கிறார்கள். இறுதியில் வெற்றிபெறுபவர்களும் ஏராளமான தோல்விகளைக் காணத் தான்வேண்டும். அத்துடன் பேரிழப்புக்களையும் சந்திக்கத் தான் வேண்டும் என்ற உண்மையையும் நானே இப்போதுதான் உணர்ந்து கொண்டேன். ஏன், மகாராஜா இன்று அரியாசனத்தில் அமர்ந்து கொண்டிருக்கும் போதும் அந்த அரியாசனத்தில் அபிமன்யுவின் இரத்தக் கறை படிந்திருக்கிறது என்பதை உணரத்தான் வேண்டும்......!

—காட்சி மாற்றம்—


குருச்சேத்திரம்-அர்ச்சுனன் தனது இரத்தில் அமர்ந்திருக்கிறான்.

அர்ச்: கண்ணா.....! ஜயத்ரதன் இருக்குமிடம் நோக்கி இரதத்தைச் செலுத்துங்கள்......

கிருஷ்: பார்த்தா....! இன்று கவுரவர் படையைச் சேர்ந்த மாபெரும் வீரர்களெல்லாம் ஜயத்ரதனை பாதுகாத்துக்கொண்டிருக்கின்றனர்.....

அர்ச்: இன்று என்னுடைய பாதையில் எந்தக் குறுக்கீடும் தடுக்க அனுமதிக்க மாட்டேன் கேசவா!

கிருஷ்: (சிரித்துக் கொண்டே) பார்த்தா....! நான் முன்பு சொன்னது நினைவிருக்கிறதா? உன்னுடைய செயல்களை மட்டும்தான் கட்டுப்படுத்த உன்னால் முடியும்! அதனால் ஏற்படப் போகும் பலனைப் பற்றித் தீர்மானிக்கும் சக்தி உன்னிடம் கிடையாது. சூரியனின் உதயத்தையோ அஸ்தமனத்தையோ கட்டப்படுத்த உன்னால் முடியாது. பாரதவம்சத்திலுதித்தவர்களெல்லாம் ஏனோ சபதமேற்பதிலும் ஆணையிடுவதிலும் தயக்கம் காட்டுவதில்லை. பிதாமகர் ஒரு ஆணையை ஏற்றுக் கொண்டார், பீமனும் சபதமேற்றிருக்கிறான். இதோ நீயும் ஒரு பிரதிக்ஞையை விதித்திருக்கிறாய்.....!



அர்ச்: கேசவா! அபிமன்யுவிடம் அவர்கள் அவ்வாறு நடந்து கொண்டது சரிதானா? ஏழுபேர் சேர்ந்து ஒரு சிறுவனைத்தாக்குவது எத்தகைய கோட்பாட்டுள் அடங்கும்...?

கிருஷ்: சாட்சாத் பரமசிவனிடம் கேட்க வேண்டிய கேள்வி அப்பா இது.....? சிவபிரானே முக்காலமும் உணர்ந்தவர், அத்தகையதான ஒரு வரத்தை சிந்து மன்னன் ஜயத்ரதனுக்குக் கொடுத்திருக்கிறார். ஆண்டவன் காரணமின்றியா அந்த வரத்தைக் கொடுத்திருப்பார்? ஜயத்ரதன் கொல்லப்பட வேண்டியவன் தான். ஆனால் அதனையும் ஒரு சபதத்துள்- ஒரு காலகட்டத்துள் கட்டுப்படுத்தினாய்? இதனால் உன்னுடைய குறிக்கோளை விட்டுவிட்டு சூரியனுடைய நடமாட்டத்தில்தான் உன்னுடைய புலனைச் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டிருக்கிறாய்....!

அர்ச்: என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் கண்ணா! ஆனால் என் சபதத்தை இத்தருணத்தில் என்னால் கைவிட முடியுமா? தயவுசெய்து என்னை ஜயத்ரதன் இருக்குமிடம் அழைத்துச் செல்லுங்கள்!

கிருஷ்: அப்படியே செய்கிறேன். ஆனால் ஒன்றைமட்டும் நினைவில் வைத்திரு! துரோணாச்சாரியார் இன்று ஜயத்ரதனைச் சுற்றி கமலவியூகம் அமைத்திருக்கிறார்! அதுவும் அந்த வியூகம் இருபத்தினாலு காத தூரம் இருக்கிறது.....!

அர்ச்: அது இருபத்தினாலாயிரம் காததூரம் இருந்தாலும் பரவாயில்லை... எப்படியும் இன்று கதிரவன் மறைவதற்குள் நான் ஜயத்ரதனைக் கொன்றாக வேண்டும். இல்லையேல் எனது சபதத்தின்படி நான் தீக்குள் சங்கமமாக வேண்டியதுதான்!

—காட்சிமாற்றம்—

திருதராட்டிரர் அரண்மனை-அரசருடன் சஞ்சயன்.

திருத: சஞ்சயனே.....! அர்ச்சுனனைப் போன்ற ஒரு வீரனை தீயினுள் புகுந்து மடிய விடுவது நல்லதா? ஆச்சாரியாரின் கமலவ்யூகத்தை ஊடறுத்து ஜயத்ரனை கொல்வது அர்ச்சுனனால் முடியாது. நான் இறந்ததன் பின்னர் சொர்க்கத்தில் பாண்டுவைச் சந்தித்தால், அர்ச்சுனனை ஏன் தீயில் கருகவிட்டாய் அண்ணா என்று என்னிடம் கேட்டால், எத்தகைய பதிலை நான் கூறுவேன்?

சஞ்ச: இதைவிட வேறு பல கேள்விகளுக்கு தாங்கள் பதில் சொல்லியாக வேண்டுமே.....! அரக்கு மாளிகை, திரௌபதி துகிலுரிதல் போன்றவற்றுக்கான காரணங்களைப் பற்றியும் வினவுவார்களே.....?

திருத: இல்லை சஞ்சயா.....! தம்பி பாண்டுவைப் பற்றி நீ அறிய மாட்டாய்! அவன் அரியணைஏற விரும்பவில்லை. பெரியதாயாரின் வற்பறுத்தலைமீற அவனால் முடியவில்லை! தம்பி பாண்டு இன்று உயிருடன் இருந்தால் நிச்சயமாக துரியோதனனுக்கே ஆட்சியைக் கொடுத்திருப்பான்.....! அது ஒருபுறமிருக்க .....அர்ச்சுனனின் தீப்பாய்தலை ஏன் தடுக்கவில்லை என்று கேட்டால் அதற்கு என்ன பதில் கூறுவது சஞ்சயா....?

சஞ்ச: அர்ச்சுனன் அல்லது ஜயத்ரதன் ஆகிய இருவரில் ஒருவர் கட்டாயம் மடிந்தேயாக வேண்டும். இதில் யார் சாகவேண்டும், யார் உயிருடன் வாழ வேண்டும் என்பதற்கான முடிவினைத் தாங்கள் தான் எடுக்க வேண்டும்.

திருத: சஞ்சயா! ஜயத்ரதன் எனது மருமகன்..... என் ஒரே மகளின் கணவன். அவன் சாக வேண்டும் என்று என்னால் கனவில் கூடக் கருத முடியாது. அர்ச்சுனனும் என் தம்பியின் புதல்வன். ஆகவே அக்னி தேவனை பிரார்த்திக்கப் போகிறேன்! அர்ச்சுனன் தீயினுள் புகுந்தாலும் அவனைப் பொசுக்கிட வேண்டாம் என்று கோரப் போகிறேன். அவ்வாறானால் இருவரும் காப்பாற்றப்படுவார்கள். சுபத்திரையின் மகன் இறந்தது எனக்கும் கவலைதான். யுதிஷ்டிரனுக்கு என் அனுதாபச் செய்தியை அனுப்பி விட்டேன். போரென்றால் சாவு சாதாரணம் தான். ஆனால் இவையெல்லாவற்றிற்கும் காரணம் அந்த வாசுதேவ கிருஷ்ணன்தான்.

—காட்சி மாற்றம்—

குருச்சேத்திரம்- அர்ச்சுனனும் கிருஷ்ணரும்.

அர்ச்: கேசவா.....இன்று ஜயத்ரதனைப் பாதுகாத்துக் கொண்டு கவுரவப் படையின் பிரதான வீரர்களெல்லாம் நிற்பதனால் அதிகநேரம் செலவிட வேண்டியுள்ளது..... ஆகவே கண்ணா ஜயத்ரதனை நோக்கி வேகமாக என்னை அழைத்துச் செல்லுங்கள்!

கிருஷ்: நான் ஆயத்தமாகிவிட்டேன் பார்த்தா.....! தேரினைச் செலுத்துவதற்கான பாதையைவெளியாக்கும் பணியில் நீ இறங்கு....!

அர்ச்: இதோ நான் பணியைத் தொடங்குகிறேன்......!

தேர் செல்வதற்கான பாதையில் குறுக்கிடும் கவுரவ சேனைகளை அர்ச்சுனன் தாக்கி வழியினை ஏற்படுத்த, துரியோதனன் இக்காட்சியைக் கண்டு பதட்டமடைகிறான்.

துரி: குருதேவரே....!அதோ பார்த்தீர்களா.....? அர்ச்சுனன் உட்புகுந்து விட்டான். இன்று சூரியஸ்தமனத்துக்கு முன்பாக அவன் போரில் வெற்றிபெற்று விடுவான் போல் தெரிகிறதே....!

துரோணர் முன்னேறி பாண்டவர் படை வீரர்கள் பலரைக் கொல்லுகிறார். அர்ச்சுனரும் துரோணரும் இப்போழுது நேர் எதிராகச் சந்திக்கின்றனர்.

அர்ச்: (குருதேவரை வணங்குகிறான்) வணக்கம் குருதேவர் அவர்களே! இன்று ஜயத்ரதனுக்கும் எனக்கும் இடையில் வரும் எவரையும் நான் அழித்தொழித்துவிடுவதாக சத்தியம் செய்துள்ளேன். ஆகவே தாங்கள் என் பாதையில் குறுக்கே வரவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

துரோ: குந்தி மைந்தனே....! சிந்து மன்னனுக்கு பாதுகாப்பாக நிற்கும் என்னைத் தாண்டி எவரும் செல்ல அனுமதிக்கப் போவதில்லை. என்னை அகற்றிவிட்டுத்தான் நீ முன்னேற முடியும்!

இருவருக்கும் கடும்போர் நடைபெறுகிறது.

கிருஷ்ணர் தலையிட்டு அர்ச்சுனனிடம் பேசுகிறார்.

கிருஷ்: பார்த்தா! ஆச்சாரியாருடன் நீ போரிட ஆரம்பித்தால் அது இன்று முடிவடையாது; கதிரவனும் மறைந்து விடுவான்.....

இவ்வாறு கூறிய கிருஷ்ணர் இரதத்தை வேறுபுறம் திருப்பி முன்னேறுகிறார்.

துரோ: அர்ச்சுனா.....! உன்னுடைய எதிரியை எதிர்த்துப் போராடாமல் எங்கே ஓடுகிறாய்?

அர்ச்: தாங்கள் என் எதிரியல்லவே! தாங்கள் என் குருநாதர்! தங்களை எதிர்த்து வெல்ல தங்கைளத் தவிர வேறு எவரால் முடியும் குருதேவா.......?

இவ்வாறு கூறியதும் துரோணர் நெகிழ்ந்து விட்டார். அர்ச்சுனன் தொடர்ந்து தாக்கிய வண்ணம் முன்னேறுகிறான். தேரிலிருந்த துச்சாதனனைக்கீழே வீழ்த்துகிறான். கிருபாச்சாரியாரையும் கீழே வீழ்த்தி அஸ்வத்தாமனையும் காயப்படுத்துகிறான். துரியோதனனையும் காயப்படுத்துகிறான்.

—காட்சி மாற்றம்—

அஸ்தினாபுரத்தில் திருதராட்டிரரும் சஞ்சயனும்.

சஞ்ச: மகாராஜா..! குந்தி புத்திரன் அர்ச்சுனனை எவராலும் தடுக்க முடியாதிருக்கிறதே...

திருத: இப்போழுது துரியோதனனிடம் என்னதான் சொல்ல முடியும் சஞ்சயா.....? முன்பு கிருஷ்ணன் சமாதானத் திட்டத்துடன் வந்தபோது ஐந்து கிராமங்களையாவது பாண்டவருக்கு கொடுத்துவிடும்படி சொன்னேன். அவன் கேட்க மறுத்துவிட்டான்!

சஞ்ச: காலங்கடந்த பின்னர் அவற்றையிட்டு நினைத்து பயன் எதுவுமில்லை மகாராஜா! இத்தகைய பேரழிவு -ஏற்படுவதற்கு துரியோதனன் தான் காரணம் என்பதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்! எல்லாவற்றுக்கும் தாங்கள் தான் காரணகர்த்தா...!

திருத: இல்லை சஞ்சயா....எல்லாமே என் துரதிஷ்டம்தான். அதனை விட்டுவிட்டு நடக்கும் போர் பற்றிய சமாச்சாரங்களைக் கூறு....!

சஞ்ச: அர்ச்சுனனின் தாக்குதல்களைக் கண்டு துரியோதனன் அதிர்ந்து விட்டான்! இப்போழுது துரோணாச்சாரியாரை நோக்கிப் போகிறான்....!

—காட்சி மாற்றம்—

குருச்சேத்திரம்-துரோணாச்சாரியாரிடம் துரியோதனன் செல்கிறதான்.

துரி: குருதேவர் அவர்களே! தாங்கள் அமைத்த கமலவியூகத்தை ஊடுருவி அர்ச்சுனன் செல்கிறான்! சிந்து மன்னன் ஜயத்ரதனை அணுகிவிடுவான் போல் தெரிகிறது. தங்களைக் கடந்து அவன் செல்ல முடியாது என்று எண்ணினோம். ஆனால் அவனைத் தடுக்காமல் விட்டுவிட்டீர்களே...?

துரோ: அவனை பின்புறமிருந்து தாக்க என்னால் முடியாது இளவரசரே!

துரி: (கடும் கோபத்துடன்) ஒரு அப்பாவிச் சிறுவனை நிராயுதபாணியாக்கி அவனைக் கொல்லமுடியுமானால் அர்ச்சுனனின் பின்புறமாக அம்பினை எய்து ஏன் அவனைக் கொல்ல முடியாது.....? யுத்த தர்மம் மற்றும் விதிகளைப் பற்றி விவாதிப்பதற்கு இது தங்கள் ஆச்சிரமம் அல்ல குருதேவரே...! சிந்து மன்னனைப் போய்க் காப்பாற்றுங்கள். அவரைப் பாதுகாக்கப் போவதாக வாக்களித்தோம். ஆனால், நீங்களோ அர்ச்சுனனை அவன்பால் போக விடடுவிட்டீர்கள்.

துரோ: இங்கிருந்து வேறு எங்கும் என்னால் இப்போது போக முடியாது. ஜயத்ரதனைக் காப்பதற்கு நான் அவனுடைய மெய்காப்பாளனல்ல..... அர்ச்சுனன் இப்போது யுதிஷ்டிரனுடன் இல்லை என்பதனால் எமது திட்டப்படி யுதுஷ்டிரனைக் கைது செய்வது சுலபமாகும். சிந்து மன்னனைக் காப்பாற்ற நீ போகலாம்!

துரி: தங்கள் ஆணைப்படி குருதேவரே...!

—காட்சி மாற்றம்—

கிருஷ்ணர் திடீரென இரதத்தினை நிறுத்திவிடுகிறார். இருவரும் கீழே இறங்குகின்றனர்.

அர்ச்: தேரை ஏன் நிறுத்திவிட்டீர்கள் கேசவா......?

கிருஷ்: குதிரைகள் களைத்துவிட்டன. அவற்றால் உன்னை வெற்றியின் பாதைக்கு இட்டுச் செல்ல இப்போது முடியாது.....!

அர்ச்: கேசவா....! சூரியன் மறையப் போகிறானே.....!

கிருஷ்ணர் குதிரைகளைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருக்கும்போது துரியோதனன் அங்கே வருகிறான்.....

துரி: அர்ச்சுனா போரிட ஆயத்தமா......?

கிருஷ்: துரியோதனா.....! அர்ச்சுனன் இப்போது இரத்தின் மேல் இல்லையே....? போர் விதிகளின்படி கீழே நிற்கும் ஒருவனுடன் தேரின் மேலிருப்பவன் போரிட முடியாதே....?

துரி: அந்தச் சட்டங்களெல்லாம் பிதாமகரால் ஏற்படுத்தப்பட்டவை. எதிரியை எங்கு கண்டாலும் அவனுடன் பொருதுவதுதான் என் விதி!

இவ்வாறு கூறிக்கொண்டு அர்ச்சுனனைத் தாக்க ஆயத்தமாகிறான். பாணங்களையும் தொடுக்க ஆரம்பித்துவிட்டான். அர்ச்சுனன் எய்த பாணத்தால் துரியோதனன் வில் ஒடிந்துவிடுகிறது.

அர்ச்: துரியோதனா...!மற்றுமொரு ஆயுதத்தை எடுத்துக் கொள்....!

துரி: என்னை அவமானப்படுத்தாதே அர்ச்சனா...! உன் பாணங்களை என்மீது பாய்ச்சு!

அர்ச்சுனன் எய்த பாணத்தினால் துரியோதனன் தாக்கப்பட்டு விழுகிறான். அர்ச்சுனனும் கிருஷ்ணரும் இரதத்திலேறி விரைகின்றனர்.

கிருஷ்: பார்த்தா!ஒன்றை நினைவில் வைத்துக் கொள். ஜயத்ரதனின் தலை கீழே மண்ணில் வீழுமானால் அவ்வாறு தலையைத் துண்டித்தவனின் தலை சுக்கு நூறாக வெடித்துவிடும் என்று அவன் தந்தை அவனுக்கு வரமளித்துள்ளான். உனது கணையால் அவனின் தலை கொய்யப்பட்டு, வனத்தில் தவம் செய்து கொண்டிருக்கும் அவனுடைய தந்தையின் மடியில் போய்விழ வேண்டும். அப்போது அவருடைய தலைதான் வெடிக்கும்.

அர்ச்: அப்படியே ஆகட்டும் கேசவா!

இவ்வாறு கூறிக் கொண்டு இருவரும் சங்கினை முழங்குகின்றனர்.

ஜயத்: (பதட்டமடைந்தவனாக....) துரியோதனன் இன்று என்னை மரணமடைய வைக்கப் போகிறானே.....! (வீரர்களிடம் ஓடிச் சென்று.....) நீங்களெல்லாம் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்....? போங்கள் அந்த தேர் என்னை வந்து அணுகாமல் தடுங்கள்..... போங்கள்! ஓ...... சூரியன் ஏன் இன்னும் மறையாமலிருக்கிறான்...?

பின்னனிப்பாடல்
மரணம் வந்தணையும் போது மனமது பேதலித்து
அறிவதுமழிந்துபோகும், ஆணவமொழிந்து ஆங்கே
எதிரினில் வருவோரெல்லாம் எதிரியாய்த் தோன்றித் தத்தம்
சதிகாரரென்றேயெண்ணி சஞ்சலமெய்துவாரே!

(தொடர்ந்து வரும்.)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

அருள் ஜுவலர்ஸ்

4363 31
வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# நீ வேறு நான் வேறு



வின்னி நெல்சன் மண்டேலாவோடு

அரசியல்வாதிகளைவிட அவர்களது உறவினர் களே அதிக பலமுள்ளவர்களாக மாறிவருவதுதான் இன்றைய உலக அரசியல் நிலவரம்.

தமது உறவினர்கள் என்றால் தவறுகளை போர்த்து மூடுவது அரசியல் வாதிகள் பலரது அணுகுமுறையாகவும் வளர்ந்து வருகிறது. ஒரு கட்டத்தின் பின் அதுவே அவர்களுக்கு குழிபறிக்கும் விடயமாவது வேறு விவகாரம்.

தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா வித்தியாசமானவர்.


ஆட்கடத்தல் குற்றம் சாட்டப்பட்டதால் தனது மனைவியை விவாகரத்துச் செய்தது பழைய செய்தி.

விவாகரத்து செய்யப்பட்ட போதும் வின்னியின் துடிப்பான செயற்பாடுகளால் கட்சியில் அமோக செல்வாக்கு இருந்தது. அதனால் அமைச்சரவையில் இருந்தார் வின்னி.

அமைச்சர்கள் யாரும் வெளிநாடு செல்லக்கூடாது என்று நெல்சன் மண்டேலா உத்தரவு போட்டிருந்தார். உத்தரவை உதறிவிட்டு வின்னி வெளிநாடு போய் வந்தபோது அவரது நாற்காலியை எடுத்து வேறு ஒருவருக்கு கொடுத்துவிட்டார் நெல்சன். பதவி காலி!

கட்டுப்பாடென்றால் கட்டுப்பாடு அதுதான் நெல்சன்மண்டேலா.


வின்னியின் பக்கம் நியாயம் இருக்கிறதா இல்லையா என்ற வாதம் ஒருபுறமிருக்கட்டும், நெல்சன்மண்டேலாவின் நேர்மைக்கு 'சல்யூட்' செய்தே ஆக வேண்டும்.

Kala

JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
433686

உடலை எப்படி வேண்டுமானாலும் தயார்படுத்தலாம். மன அடக்கமும், பயிற்சியும் இருந்தால் போதும்!

உடல் பராமரிப்பில் இரண்டுவகை! ஒன்று உடலை மெலிதாக ஆனால் உரமாக வைத்திருப்பது.

# இந்தப் பலம் போதுமா-இன்னும் கொஞ்சம் வேணுமா?



இரண்டாவது, உடலைக் கனமாக ஆனால் காத்திரமாக வைத்திருப்பது. (இரண்டுக்கும் பொது அசத்தலான பலம்)

பாரம் தூக்குவோர், மல்யுத்த வீரர்கள், ஆணழகன் போட்டிக்குத் தயாராவோர் போன்றோர் இரண்டாவது ரகம். கையில் சிக்கினால் தொலைந்தோம்; சடக், முடக் என்று எலும்புகள் முறிவது உறுதி!

சரி விஷயத்துக்கு வருவோம். படத்தில் மாபெரும் பவுசர் வண்டியை தன் உடலால் இழுத்து அசத்துபவர் பெயர் கிரக் எர்ன்ஸ்ட். கனடாவில் நோவாஸ்கொசியா மாகாணத்தை சேர்ந்தவர்.

உயரம்-5அடி 11அங்குலம். எடை, 315 இறாத்தல். வயது 33.

இந்தப் பலம் காட்டி இவர் சம்பாதித்தது என்ன? கின்னஸ் புத்தகத்தில் உலக பலசாலி என்று இவர் பெயர் ஆழமாய்ப் பதிந்துள்ளதே! அது போதாதோ!

தினமுரசு வாரமலர்

# ஐந்திலேயே அழிக்கலாமா?



பலஸ்தீன- இஸ்ரேல் பேச்சுவார்த்தைகள் பற்றிய அவநம்பிக்கைகள் விரிவாகிவருகின்றன. இஸ்ரேல் நியாயமாக நடந்து கொள்ளும் என்பதை தீவிரவாதிகள் நம்பமறுக்கிறார்கள். இஸ்ரேலை அமெரிக்காவும் முதுகில் தட்டிக் கொடுப்பதாவும் தீவிரவாதிகள் குற்றம் சாட்டுகிறார்கள்.

தீவிரவாதிகளைப் பொறுத்தவரை போர்தான் கடைசி நம்பிக்கை. நாளைய தலைமுறையையும் அதற்கு தயார்படுத்துகிறார்கள். படத்தில் உள்ள காட்சி பெய்ரூட் நகரில் அமெரிக்க, இஸ்ரேல் கொடிகளின் மீதேறி முஸ்லிம் சிறுவர்கள் நடத்திய ஆர்ப்பாட்ட அணிவகுப்பு. இதனை ஒழுங்கு செய்தவர்கள் 'ஹிஸ்புல்லா' அணியினர் (கடவுளின்படை). ஹிஸ்புல்லா அணிக்கு ஈரான் தோள் கொடுப்பதாகத் தகவல்.

பிஞ்சிலேயே அழிக்கலாமா? என்று கேட்டால், வாழ்வதற்காகவும் போராடவேண்டியிருக்கிறதே என்று பதில் வருகிறது.

# வலைவீசும் மீன்



பெண்களை மீன் என்று வர்ணிக்கத் தொடங்கிய சமாச்சாரத்திற்கு வயது ரொம்ப ரொம்ப அதிகம்.

மீன் கடலில் இருக்கும் கண்ணுக்குத் தெரியாது. தூண்டில் போட்டால் சிக்கிக் கொள்ளும்.

பெண் கண்ணுக்குத் தெரிவாள். கண்ணையும் பறிப்பாள். அவள் கண்ணுக்குள் நாமும் தெரிவோம். மீனும் அவளே. வலையும் அவளே!

ஒரு புத்திசாலியான விளம்பர நிறுவனம் பெண்ணை மீனாக டிசைன் பண்ணி விளம்பரத்தில் பயன்படுத்திவிட்டது. இது வாடிக்கையாளரின் விழிகளுக்கு வாங்கி உபயோகிக்க அல்ல. வாடிக்கையாளர்களை வலைவீசி விளம்பரத்தை உற்றுப் பார்க்கவைக்கும் உத்தி!

# முட்டினால் முட்டலாம்



இவருக்கு தொழில் பன்றி வளர்ப்பது. பொழுது போக்கு பன்றியோடு செல்லம் கொஞ்சுவது. முட்டு முட்டு. முட்டு... ஒரு நாளைக்கு இந்தத் தொல்லையும் அவருக்கு... முட்டித் தொலைக்காப் போகிறது பாருங்கள்.